கோகுலம்

GOKULAM

அக்டோபர் '87 ரூ. 3.



∴பாரெக்ஸ்®
முதலான விருப்பம்!



பாப்பா வளர்ச்சிக்கான திட உணவுகளில்
பாசத்தாய் அளிக்கும் முதலிடம் ∴பாரெக்ஸ்®

தாய், தன் குழந்தைக்கு தேர்ந்தெடுக்கும் முதலான திட உணவு புதிய செழுமையான ∴பாரெக்ஸ். காரணம்:

பாப்பாவின் உடல் நலத்திற்கான புரதமும், ஜீரணத்திற்கு உகந்த கொழுப்புச் சத்தும் சரியான அளவில் கொண்டது.

பாப்பாவுக்கு ஆரோக்கியமான ரத்தத்தை தரவல்ல இரும்புச் சத்துள்ளது.

எலும்பும் பற்களும் வலுவோடு வளர்ந்திட கால்சியமும் ∴பாஸ்∴பரஸும் 2:1 என்ற அளவில் சேர்க்கப்பட்டது.

தின்னத் தெவிட்டாதது; கலப்பதும் கொடுப்பதும் எளிது.



பால் சேர்க்கத் தேவையில்லை!
நீருடன் கலந்து கொடுத்தாலே போதும்.

**தாயன்பைக் கூறிடும்
தரமிக்க திட உணவு ∴பாரெக்ஸ்®**



உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் — பாரதியார்.

கோகுலம்

1987 அக்டோபர் மாத இதழ்
மலர்: 5, இதழ்: 9
தனிப் பிரதி ரூ. 3/—
ஆண்டுச் சந்தா ரூ. 36/—

கௌரவ ஆசிரியர்: அழ. வள்ளியப்பா



புகைப்படம்: பி. சுந்தரம்

அருமைச் சிறுவர் சிறுமியரே,

வரும் அக்டோபர் 2 ஆம் தேதி மகாத்மா காந்தி பிறந்தநாள்.

அக்டோபர் 21 ஆம் தேதி தீபாவளித் திருநாள்.

பட்டாசு, பட்சணம், பட்டாடை என்று நிறையச் செலவு செய்து, தீபாவளிப் பண்டிகையைப் பலர் கொண்டாடுகிறார்கள்.

அப்படி நிறையச் செலவு செய்யாமல், தோட்டத்திலுள்ள மலர்களைப் பறித்தோ, ஒரு ரூபாய்க்கு மலர்களை விலைகொடுத்து வாங்கியோ மாலையாகத் தொடுக்கலாம். அதை மகாத்மா படத்திற்கு அவரது பிறந்த நாளில் அணிவித்து நன்றி கலந்த வணக்கத்தைச் செலுத்தினாலே மன மகிழ்ச்சி ஏற்படும்.

மகாத்மா காந்தி, நம் தேசத்துக்கு விடுதலை வாங்கித் தந்தவர் என்பதனால் மட்டும் இதைக் கூறவில்லை., சத்தியம், அகிம்சை இரண்டையும் இரு கண்களாகப் போற்ற வேண்டும் என்று நமக்கு அவர் போதித்தார். போதித்ததோடு நிற்கவில்லை. அவ்வாறே அவர் நடந்தும் காட்டினார்.

மகாத்மா என்றும், உலக உத்தமர் என்றும் போற்றப்படும் காந்திஜி நம் நாட்டில் பிறந்தார் என்பதே நமக்கெல்லாம் பெருமை. வெறுமனே பெருமைப்பட்டுக் கொண்டிருப்பதனால் மட்டும் பயனில்லை; அவர் காட்டிய வழிகளிலே நாமும் நடக்க முயல வேண்டும்.


காந்திஜியின் ஒளி வீசுகின்ற முகத்துடன் கூடிய படத்தை ஒவ்வோர் ஆண்டும் 'கோகுலம்' வெளியிட்டு வருகிறது. இதுவரை கோகுலம் வாசகர்கள் அனைவரும் தங்கள் வீடுகளில் காந்திஜியின் திருவுருவப் படத்தைக் கண்ணாடி போட்டோ, அட்டையில் ஒட்டியோ தகுந்த ஓர் இடத்தில் வைத்திருப்பார்கள் என்று நம்புகிறோம். அவரது திரு முகத்தைப் பார்க்கும் போதெல்லாம், 'நல்லதையே நினைக்க வேண்டும், நல்லதையே பேச வேண்டும், நல்லதையே செய்ய வேண்டும்' என்ற உணர்ச்சி நமக்கு ஏற்படும். யாரேனும் இதுவரையில் தங்கள் வீட்டில் காந்திஜியின் படத்தை வைக்காமலிருந்தால், இந்த இதழில் 'காணப்படும் படத்தையாவது தனியாக எடுத்து வைத்துக் கொள்ள வேண்டுமென்பது எங்கள் அவா.

தேசத் தந்தையை நாம் மறக்க, மறக்க, நாட்டிலே கொலை, கொள்ளை, ஏமாற்று வேலைகளெல்லாம் பெருகிக் கொண்டே வருகின்றன. இந்த நிலை மாறி நாட்டில் அமைதி ஏற்பட்டு மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ வேண்டுமானால், அதற்கு ஒரே வழிதான் உண்டு.

அதுதான் காந்தி வழி.

— அழ. வள்ளியப்பா

இந்த இதழ் எழுத்தாளர்கள்




காவியன்



எஸ். ஆர். ஜி. சுந்தரம்

பொருஞ்சாவனக் ஆசிரியர்

வெ. சந்திரசேகர்



பொருஞ்சாவனக் கவிஞர்கள்



செந்தில்வேலன்




எஸ். சுதா




ரா. சத்தியநாராயணன்

அட்டை வண்ணப்படம்:
கோவை சேதுராம்



தீபாவளிப் பழமொழிகள்



மின்மினிக் கதைகள்

கவிஞர் கண்ணதாசன் சொன்னவை



தாய் மொழி எது?

ஒரு மனிதன் பன்னிரண்டு மொழிகள் பேசுவானும்.

ஒவ்வொரு மொழியையும், அந்தந்த மொழிக்காரர்கள் எப்படிப் பேசுவார்களோ அப்படியே, அதே தொனியோடும் உச்சரிப்போடும் பேசுவானும்.

அவனுடைய தாய்மொழி எது என்று யாருக்கும் தெரியவில்லையாம்.

அவனைக் கேட்டால் அவனும் சொல்ல மறுத்து விட்டானும்.

அவனது தாய்மொழியைக் கண்டுபிடிக்க அவனது நண்பர்கள் ஒரு வேலை செய்தார்களாம்.

ஒரு நாள், அவன் நன்ருகத் தூங்கிக் கொண்டிருக்கும் போது, 'பளார்' என்று அவன் முதுகிலே ஓங்கி அடித்தார்களாம்.

அவன், ஆத்திரத்தோடு, ''எந்தடா நாயாடி மோனே'' என்று சொல்லிக் கொண்டே எழுந்து உட்கார்ந்தானும்.

அவனது தாய்மொழி மலையாளம் என்பது தெரிந்து விட்டதாம்.

தன்வயமற்ற நிலையில் ஒருவன் பேசுகிற பேச்சுத்தான் உண்மையான பேச்சு.

அது போதையாயினும் சரி. உற்சாகமாயினும் சரியே.

நடக்கும் வழியில் ஒரு கல் தடுக்கிவிட்டதென்ருல் ஒருவன் 'கடவுளே' என்கிருன்; அவன் இந்து.

'அல்லா' என்ருல், அவன் முஸ்லீம்.

'கர்த்தரே' என்ருல், அவன் கிறிஸ்தவன்.

டமாரச் செவிடானான்!

எங்கள் பக்கத்தில் பிள்ளைகள் இல்லாத பணக்காரர்கள் சுவீகாரம் எடுக்கும் பழக்கம் பரவலாக உண்டு.

அந்தச் சுவீகாரத்தில் பிள்ளையைப் பெற்ற தாய்க்கு விலையாக ஒரு தொகையையும் தருவார்கள்.

அந்தத் தொகைக்காகவும், தன் பிள்ளையாவது நல்ல இடத்தில் வாழட்டுமே என்றும் சுவீகாரம் விட்டு விட்டாள், அந்தத் தாயார்.

ஏழை மகன் லட்சாதிபதியானான். பணக்காரப் பெண்ணைத் திருமணம் செய்துகொண்டான். வசதியான வாழ்க்கையில், பெற்ற 'தாயை'யே மறந்துவிட்டான்.

அவனால் மறக்க முடிந்தது; தாயினால் அது முடியவில்லை.

ஒரு நாள் நான் அந்த மனிதனைப் பார்க்கப் போனேன். காய்கிற வெயிலில், அந்த வீட்டின் வெளித் திண்ணையில், அந்த அம்மையார் உட்கார்ந்திருந்தார்கள்.

என்னைப் பார்த்ததும் ''ஐயா, நீ யார்?'' என்று கேட்டார்கள்.

''என்ன ஆச்சி? என்ன வேண்டும்?'' என்று நான் கேட்டேன்.

உடனே அந்த மூதாட்டி, ''தம்பி, உள்ளே இருப்பது என் பிள்ளைதான். சுவீகாரம் விட்டுவிட்டேன். அவனைப் பாக்குறதுக்காகக் காலையில் இருந்து



திண்ணையிலேயே உட்கார்ந்திருக்கேன். ஒருத்தரும் விடமாட்டேங்கிறாங்க. நீயாவது எம் மகங்கிட்ட கொஞ்சம் சொல்லேன்'' என்றார்கள்.

என் கண்கள் கலங்கிவிட்டன.

ஆசையாக, ஒரு கூடையில் பணியாரமும் உளுந்து வடையும் கொண்டு வந்து, துணியால் அதை மூடி வைத்திருக்கிறார்கள், தன் மகனுக்குத் தன் கையாலேயே ஊட்டி விடுவதற்காக.

நான் வேகமாக உள்ளே போய், அந்தப் பையனைப் பார்த்து, ''உன்னைப் பெற்ற தாயார் வந்திருக்கிறார்கள். கொஞ்சம் உள்ளே கூப்பிட்டு உட்கார வையப்பா'' என்றேன்.

அவர் கோபமாக, ''அவுங்களுக்கு எப்பவும் இதே வேலையாய்ப் போச்சு. வரதே வராதேன்னு எதுக்காக வர்ராக?'' என்று கூறிவிட்டு, கணக்குப் பிள்ளையை அழைத்து, ''இந்தா ஆத்தா வந்திருக்காகளாம். ஒரு இருநூறு ரூபாய் கொடுத்து, இனிமே இந்தப் பக்கம் வர வேண்டாம் என்று சொல்லு'' என்றார்.

''அதை நீயே கூப்பிட்டுச் சொல்லேன்'' என்றேன் நான்.

அவர் மறுத்துவிட்டார், மனைவிக்குப் பயந்து.

கணக்குப்பிள்ளை அந்தப் பணத்தைக் கொண்டுபோய்க் கொடுத்

தரும் அந்த அம்மையார்,

''அப்பச்சி! தம்பி! ஐயா! ஒருதரமாவது பார்த்துவிட்டுப் போயிடுறேன்!'' என்று சத்தம் போட்டார்கள்.

அந்தக் குரல் அந்தப் பாவியின் காதில் விழவில்லை.

விளைவு என்ன தெரியுமா?

தாயின் குரலைக் கேட்காத அந்தக் காதுகள், வேறு எந்தக் குரலையும் கேட்க முடியாதபடி, 'டமார'ச் செவிடாகிவிட்டன.

ராமனை குத்தும்போது...

ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தி ஒரு முறை கங்கைக்குக் குளிக்கச் சென்றார்.

அவரது அம்பறாத் தூணியில் ஒரே ஓர் அம்பு மட்டுமே இருந்தது.

அந்த அம்பைப் படுக்கை வசமாக வைக்கக் கூடாதென்ற மரபுப்படி, அதைப் பூமியிலே குத்தி வைத்தார்.


'ஒற்றை அம்பை ஊன்றி வை' என்பது வழக்கு.

அம்பை ஊன்றிய ராமபிரான், கங்கையில் குளித்து விட்டுக் கரையேறினார்.

ஊன்றிய அம்பை எடுத்தார்.

அதிலொரு தேரைக் குஞ்சு குத்தப்பட்டிருந்தது!

பூமிக்குள்ளிருந்த தேரைக் குஞ்சை அவர் அறியாமல் குத்திவிட்டார்.



தேரைக் குஞ்சு சாகும் தறுவாயிலிருந்தது.

ராமபிரான் கண்கள் கலங்கிவிட்டன.

''ஐயோ, தேரையே! நான் குத்தும்போது நீ கத்தியிருந்தால் காப்பாற்றி இருப்பேனே, ஏன் கத்தவில்லை?'' என்றார்.

அதற்குத் தேரை சொன்னது:

''பெருமானே! யாராவது எனக்குத் துன்பம் செய்யும்போதெல்லாம், நான் 'ராமா ராமா' என்றுதான் சத்தமிடுவேன். அந்த ராமனே என்னைக் குத்துகிறார் என்னும்போது, யார் பெயரைச் சொல்லி ஓலமிடுவேன்?''

ராமபிரான் கண்ணீரோடு சொன்னார்:


''தேரையே, என்னை மன்னித்துவிடு. இது நான் அறியாமல் செய்த பிழை.''

தேரை சொன்னது:

''பெருமானே, 'அறியாமல் செய்கின்ற பிழைகள் அப்பொழுதே மன்னிக்கப்படுகின்றன' என்று சொன்னது உன்வாக்குத்தானே!''

தேரையின் ஆவி முடிந்தது.

குழந்தைப் பாசம்



ஒரு தாய் தனது ஒரு மாதக் கைக்குழந்தையோடு தரையிலே பாய் விரித்துப் படுத்திருந்தாள். அப்போது அவளுக்குக் கொஞ்ச தூரத்தில் பாம்பு வந்து நின்றது.

பாம்பைக் கண்ட உறவினர்கள் பதறினார்கள் துடித்தார்கள்.

அந்தப் பாம்பு குழந்தையையும் தாயையும் கடித்து விடப்போகிறதே என்று பார்த்தார்கள்.

தாயின் பெயரைச் சொல்லிச் சத்தமிட்டார்கள்.

தாய் எழவில்லை.

ஓங்கித் தடியால் அடித்தார்கள்; அப்போதும் அவள் எழவில்லை.

பக்கத்தில் படுத்திருந்த குழந்தையின் மீது ஒரு மல்லிகைப் பூவை எடுத்துப் போட்டார்கள். தாய் உடனே விழித்துக்கொண்டு, அந்தப் பூவை எடுத்து அப்புறம் போட்டாள்.

தன்னை உதைத்தபோது கூடச் சொரணையில்லாது உறங்கிய தாய், குழந்தைமீது பூ விழுந்ததும் விழித்துக் கொண்டது எப்படி?

அந்த உள்ளம் குழந்தையிடமே லயித்துக் கிடந்ததால்தான்.!


— வானதி பதிப்பகம் வெளியிட்டுள்ள 'அர்த்த முள்ள இந்து மதம்' என்ற புத்தகத்திலிருந்து.

குழந்தை எழுத்தாளர்களுக்குப் பரிசு


தேசிய கல்வி ஆராய்ச்சிப் பயிற்சிக் கழகம் டாக்டர் பூவண்ணன் எழுதிய 'பரமார்த்த சீடர்கள்' என்ற கதைப் புத்தகத்திற்கும், திரு. பி. வி. கிரி எழுதிய 'நிலாச்சோறு' என்ற கவிதைப் புத்தகத்துக்கும் தலா ரூபாய். 5000/— பரிசு வழங்கியிருக்கிறது. பரிசு பெற்ற இருவரையும் 'கோகுலம்' வாழ்த்துகிறது.



பூவண்ணன்



பி. வி. கிரி



தேசத் தந்தை



காந்தி என்னும் தீபம்!

மனிதர்களுள் தெய்வமாகிப் போனார் — மக்கள்
மனத்திலெல்லாம் சிற்பமாகி நின்றார்;
இனியவராய் ஏடுகளில் உள்ளார் — காந்தி
இன்னொளியைப் போற்றிடுவோம் வாரீர்!

பாரதத்தின் தந்தையாகி வந்தார் — நம்
பாழ்இருளை ஓட்டியொளி தந்தார்;
பாருக்கொரு புதியவழி சொன்னார் — அந்தப்
பூநெறியில் சென்றிடுவோம் வாரீர்!

அடிமைஎன்னும் விலங்குதனை உடைத்தார் — இங்கு
அன்னியனின் ஆதிக்கத்தை முறித்தார்;
கொடியர்முன்பும் அன்புமொழி பகர்ந்தார்
— அந்தக்
கனிமொழியை ஓதிடுவோம் வாரீர்!

அகிம்சைஎன்னும் அமரதீபம் படைத்தார் — அதில்
ஆடும்கொடுமைச் சருகையெலாம் எரித்தார்;
அகிலஉலக ஜோதியாகிப் போனார் — அந்த
அன்பு ஒளியில் சென்றிடுவோம் வாரீர்!

காவியன்



கோடை விடுமுறைப் போட்டி—முடிவு

வகுப்பு	கதை அல்லது கட்டுரை	கவிதை	ஓவியம்
3, 4, 5	துருவன் கதை: ஜெ. உதயா த/பெ. ஜி. ஜெயபால், ஆய்வுக் கூடத் தொழில் நுட்ப உதவியாளர், எண் 5, நாராயணன் காலனி பூக்கார விஹார் சாலை, தஞ்சாவூர் — 613 001.	சரஸ்வதி: மே. இ. ஏஞ்சலின்பாபு த/பெ. செ. இலக்குவன் 27, பொறியாளர் நகர், திருப்பாலைஅஞ்சலகம் மதுரை — 625 014.	கண்ணன்: நா. சரவணக்குமார் 5 ஆம் வகுப்பு, ஊ. ஒ. தொடக்கப் பள்ளி, கிணத்துக்கடவு, கோவை மாவட்டம்.
6, 7, 8	ஆஞ்சநேயர்: ஏ. சிவகாமி, த/பெ. கே. எம். அண்ணாமலை, 31, பழைய பண்டிட் குடியிருப்பு, அண்ணாமலைநகர் — 608 002	வ. உ. சி.: சி. நாகவால சுப்பிரமணியன், 6 ஆம் வகுப்பு, 'ஆ' பிரிவு, பா. பி. வி. சாலா நடுநிலைப் பள்ளி, பாலையம்பட்டி — 626 112, காமராசர் மாவட்டம்	மார்க்கண்டன் சிவ பூஜை: ரா. தரங்கிணி (படத்துடன் முகவரி இல்லை. தெரிவித்தால் அடுத்த இதழில் வெளியிடுவோம்.)
9, 10, 11, 12	சிவாஜி: அ. வெங்கட்ராம கணேஷ் 32 — 'ஈ' பிளாக், முகமது உசேன் தெரு, மீர்சாகிப் பேட்டை, சென்னை — 600 014.	சொல்லால் முறை செய்த சோழன்: த. தட்சிணாமூர்த்தி 12 ஆம் வகுப்பு, அறிவியல் பிரிவு, அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, திருச்செங்கோடு — 637 211. சேலம் மாவட்டம்.	இராமர் பட்டாபிஷேகம்: ஆர். காமாட்சி த/பெ. ஆர். ராஜேந்திரன், 55, நடுரோடு, எட்டயபுரம்—627 902 வ. உ. சி. மாவட்டம்

* மேலே கண்ட ஒவ்வொருவருக்கும் முதற்பரிசாகத் தங்கப் பதக்கம் வழங்கப் பெறும். தவிர, பங்கு பெற்ற அனைவருக்கும் சான்றிதழுடன் நீதி நூல்களும் அன்பளிப்பாகத் தரப்படும்.

* ஒப்புவித்தல் போட்டிகளில் பங்கு கொண்ட அனைவருக்கும் சான்றிதழுடன், ஸ்ரீமடம் பெயருடன் கூடிய பேனாவும் அன்பளிப்பாக வழங்கப்பெறும்.

* முதற் பரிசு பெற்றவர்கள் பாஸ்போர்ட் அளவுள்ள புகைப்படங்களை அனுப்பி வைத்தால், அடுத்த இதழில் நீதிபதிகளின் புகைப்படங்களுடன் கோகுலத்தில் வெளியிடுவோம்.

— ஆசிரியர்



என் குழந்தைப் பருவம்

— லட்சுமி கிருஷ்ணமூர்த்தி —

விடுதலை வீரர், சிறந்த பேச்சாளர், மக்கள் தலைவர் காமராஜரின் குரு என்றெல்லாம் போற்றப்படும் ஸ்ரீமான் எஸ். சத்தியமூர்த்தி அவர்களுக்கும், பாலசுந்தரம்மாள் அவர்களுக்கும் பிறந்த ஒரே குழந்தைதான் திருமதி லட்சுமி கிருஷ்ணமூர்த்தி. 1925 ஆம் ஆண்டில் பிறந்த இவர், ஹோலி ஏஞ்சல்ஸ் கான்வென்டிலும், பிறகு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் கல்வி பயின்றவர்.

1943 முதல் 1975 வரை கேரளாவில் வசித்து வந்தார். கேரள அரசின் சமூகநல போர்டில் உறுப்பினராயிருந்து சிறப்பாகப் பணிபுரிந்தார்.,

1964 முதல் 1970 வரை தமிழ்நாடு சட்ட மேல்சபை உறுப்பினராக விளங்கினார்.

சிறந்த முறையில் தமிழ்ப் புத்தகங்களை வெளியிட வேண்டும் என்ற ஆர்வத்தில் 'வாசகர் வட்டம்' என்ற பெயரில் ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தி, பல தரமான புத்தகங்களை வெளியிட்டு வந்தார். 'நூலகம்' என்ற மாத இதழை ஏழு ஆண்டுகள் நடத்தினார். சமூக சேவையில் மிகுந்த ஆர்வம் உடைய இவர், சென்னையிலுள்ள பாலமந்திர் — காமராஜ் டிரஸ்டின் மூலம் கல்விப் பணியிலும், ஏழைகள் முன்னேற்றப் பணியிலும் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்.

அன்று விடியற்காலையிலிருந்தே வீட்டில் ஒரே பரபரப்பு. யார் யாரோ வந்து போய்க் கொண்டிருந்தனர். சீக்கிரமாகவே குளித்துவிட்டு, 'முரட்டு கதர்ப் பாவாடை சொக்காயை அணிந்து கொண்டு என்னையும் 'ரெடி' யாக இருக்கச் சொன்னார்கள். பேச்சு, சிரிப்பு, கலகலப்பு, மாலைகள் அப்பாவுக்கு. எல்லோரும் ஆவலுடன் எதையோ எதிர்பார்த்தனர். வாசலிலே வந்தே மாதரம். பாரத மாதாகீ ஜெய்' என்று கூவிக் கொண்டே, ஓர் சிறிய ஊர்வலம் எங்கள் வீட்டின் முன் நின்றது. அப்பா வழக்கம்போல பஞ்சகச்சம் உடுத்தி, பட்டை, பட்டையாக விபூதி பூசி, தம் காலைப் பூஜையை முடித்துக் கொண்டு, வெளியே புறப்படத் தயாராகி விட்டார்.

கும்பலாக அனைவரும் புறப்பட்டவுடன், நானும் கிளம்பி விட்டேன். எங்கே? எதற்கு? யாருக்குத் தெரியும்? ஆனால் ஒரே உற்சாகம் கூடியிருந்தவர்களிடம். அது என்னையும் தொற்றிக்



கொண்டது. நாங்கள் குடியிருந்த சென்னை, திருவல்லிக்கேணி, தேரடித் தெருவிலிருந்து ஸ்ரீ பார்த்தசாரதி கோவிலுக்கு ஊர்வலமாகச் சென்றோம். அங்கு ஏற்கெனவே பலர், கூடியிருந்தனர். முன்னணியில் சென்றவர்கள் வட்டமாக நிற்க, அப்பா ஏதோ பேசிவிட்டு, ஒரு கொடியை ஏற்றினுர் — நமது மூவர்ண தேசியக் கொடி, நடுவே இராட்டைச் சின்னம் பதித்தது! அது மேலே உயர்ந்த உடனே, பூமாரி பொழிய, கைதட்டல், கொடிக்கு மரியாதை 'ஜண்டா ஊஞ்சா' ('கொடி உயர்க') என்றுகணீரென்றுஸ்ரீ பாதசங்கர் பாட, அனைவரும் உடன்பாட ஆரம்பித்தனர்.

அதுவரை சாலை ஓரத்தில் நின்றிருந்த போலீசார், அப்பாவிடம் எதையோ சொல்ல அவர்களுடன் அவரும் சென்று விட்டார். கூடியிருந்த தொண்டர்கள் விடாமல் பாடவே, போலீசார், திமு, திமுவென்று கூட்டத்தில் புகுந்து தடியால் அடித்தனர். கைக்குழந்தைகளுடன் வந்திருந்த பெண்களையும் அவர்கள் விட்டு வைக்கவில்லை. எங்கள் அனைவர் மேலும் தீ அணைக்கும் வண்டியிலிருந்து சாக்கடைத் தண்ணீரைப் பாய்ச்சவே, எல்லோரும் பின்வாங்க, கூட்டம் நாலா பக்கமும் சிதறி ஓட ஆரம்பித்தது. 'திக்' 'திக்' என்று மனம் அடித்துக் கொண்டது. யாரோ கையைப் பிடித்து என்னை வீட்டிற்கு அழைத்து வந்தனர். அந்த வன்முறையின் அதிர்ச்சி, அழியாத சித்திரமாகப் பதிந்து விட்டது. காலையில் கல்யாண வீடாகக் காட்சி அளித்த வீடு, சிதறிய பூக்களும் மௌனமும் சூழ வெறிச்சோடிக் கிடந்தது. புரிந்தும், புரியாத நிலையில் வாயடைத்துப் போய்விட்டேன்.

பின்னர் இந்தச் சூழ்நிலை பழக்கமாகிவிட்டது. இது நடந்தது 1930 ஆம் ஆண்டிலே. ஐந்து வயதினிலே 'அறியாப் பருவத்தினிலே' அரசியல் எனக்கு அறிமுகமாகிவிட்டது!

ஒவ்வொருசுதந்திரநாட்டின்சின்னமும் அதன் கொடி. ஆனால், அன்று அடிமை இந்தியாவில் அதை ஏற்றுவதே பெருங்குற்றமென்ற அரசின் கொடுங்கோல் சட்டத்தை மீறியதற்கு சிறைத் தண்டனை. அதையும் புன்சிரிப்புடன் தாங்கிக் கொண்டு எத்தனை ஆயிரம் பேர் தொடர்ந்து அந்த 'சத்தியாக்கிரகப் போரில்' ஆர்வமாகக் கலந்து கொண்டனர்!

மார்கழி மாதம் வந்துவிட்டால் பாரதியாரின் தேச பக்திப் பாடல்களை — 'அச்சமில்லை, அச்சமில்லை! அச்சமென்பதில்லையே! உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்' என்று பாடிக் கொண்டே, சங்கு கணேசன், சங்கு சுப்ரமணியன், வை. மு. கோதைநாயகி முன் செல்ல, உடன் வாண்டுகளாகிய நாங்களும் தொண்டை கிழியக் கத்திக் கொண்டே பின்னே செல்வோம்.

அப்பா விடுதலையாகி வந்துவிட்டார். அதுவரை உறங்கிக் கிடந்த வீடு மீண்டும் கலகலப்பாகி விட்டது. வாயிற்கதவு திறந்தே கிடக்கும். யார் வேண்டுமானாலும், எப்பொழுது வேண்டுமானாலும் வரலாம்! அப்பா வீட்டிற்குள் நுழையும்பொழுதே 'லக்ஷ்மீ' என்று குரல் கொடுத்துக் கொண்டேதான் வருவார்! அவரது அழைப்பைக் கேட்டு எங்கிருந்தாலும் ஓடிவரும் என்னிடம் 'கம்'மென்று மணக்கும் ரோஜாப்பூ மாலைகளைத் தருவார். மறுநாள் காலை எங்கள் தெருவில் இருக்கும் பெண்களின் தலையிலெல்லாம் அந்தப் பூக்கள் ஏறிவிடும்!

நவராத்திரி காலம் வந்துவிட்டால் ஒரே கொண்டாட்டம்தான்! எல்லா வீடுகளிலும் அழகு, அழகான பொம்மைக் கொலு! விதவிதமான சுண்டல்! தெருவெங்கும் சின்னச் சின்னக் கிருஷ்ணர்கள், குஜராத்திப் பெண்கள், 'மடிசார்' கட்டிய குட்டி 'மாமிகள்' நாரதர்கள் — இப்படி மாறு வேஷத்தில் தெருவெங்கும் குறுக்கும் நெடுக்குமாக வீடேறிச் சென்று, தங்களுக்குத் தெரிந்த பாட்டுகளை யாரும் கேட்காமலேயே பாடிக் காண்பிப்பதில் கரை காணாத உற்சாகம்! இவையெல்லாம் இன்று காண முடியாதவை. நினைத்துப் பார்க்கையில் மகிழ்ச்சி தருபவை.

கோடை விடுமுறையில் ஆண்டு தோறும் குற்றாலம் போய் விடுவோம். தினசரி 2, 3 தடவை அருவியில் குளிப்போம். மாலையில் அப்பாவுடன் நடந்து போவோம். அந்த நேரத்தில் அவர் சூரியாஸ்தமனத்தையும், செக்கச் செவேலென்றிருக்கும் சூரியன், ஒளி மயமான ஆகாயம், நீலமலைத் தொடர், ஓங்கி வளர்ந்த மரங்கள், அருகிலே ஓடும் சிறிய ஓடையின் 'சலசலப்பு' ஆகியவற்றை ஒவ்வொன்றாக எடுத்துக் கூறி அழகை ஆராதிக்கவும் கற்றுத் தருவார். இவையெல்லாம் ஆண்டில் ஒரு மாதம் மட்டுமே. மற்ற நாட்களில் அப்பாவைக் காண்பதே அரிது. தொடர்ந்து பல நாட்கள் ஊரில் காண இயலாது. கட்சிக் கொள்கைகளை, மக்களுக்கு எடுத்துச் சொல்லி அவர்கள் உள்ளத்திலும் சுதந்திர வேட்கையை ஊட்ட கிராமம், கிராமமாகச் சென்று விடுவார்.

எங்கள் திருவல்லிக்கேணி வீட்டில் சர்தார் வல்லபாய் பட்டேல், மகள் மணிபென் பட்டேல், பாபு ராஜேந்திர பிரசாத், பண்டித ஜவாஹர்லால் நேரு ஆகியோர் வந்து தங்கி உள்ளனர். அவர்களெல்லாம் அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தலைவர்களாக இருந்த காலத்தில் ஒரு முறையாவது தமிழகம் வருவார்கள். அப்போது தமிழ்நாட்டுக் கட்சித் தலைவரின் வீட்டில் தங்குவது வழக்கம். பெரிய, பெரிய தலைவர்களையும் அருகிலிருந்து பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

1932, மீண்டும் வீட்டில் பரபரப்பு, குழப்பம். 'அந்நிய நாட்டுத் துணியை வாங்காதே' என்று கடைகள் முன் மறியல் செய்ததற்காக அப்பாவுக்குச் சிறைத் தண்டனை. அத்துடன் அபராதமும் விதித்தார்கள். அபராதம் கட்டத் தவறியதால் ஆஸ்த்மா நோயால் அவதிப்படும் அம்மா வழக்கமாக ஒய்வெடுக்கும் சாய்வு நாற்காலி, சுவர்க் கடிகாரம், அப்பாவைப் பார்க்க வருபவர்கள் உட்காரும் பெஞ்ச் அனைத்தையும் பறிமுதல் செய்து விட்டார்கள்!

சிறையிலிருக்கும் அப்பாவை இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை பார்க்க வேலூர் மத்திய சிறைக்குச் செல்வோம். தகிக்கும் வெயிலில் புளிய மரத்தின் அடியில் ஒதுங்கி நின்று மணிக்கணக்காகக் காத்திருந்தால், அப்பாவைப் பார்க்கலாம். இரண்டு போலீஸ்காரர்கள் உடன் இருக்க எட்ட இருந்து பார்த்துப் பேச அனுமதிப்பார்கள்.


ஒருமுறை ராஜாஜி அவர்கள் சிறை அதிகாரியிடம் அனுமதி பெற்று என்னை உள்ளே இட்டுச் சென்று காண்பித்தார். உள்ளே என்ன செய்வார்கள் என்று அப்பாவை நான் நச்சரித்ததைக் கேட்டிருப்பார் போலிருக்கிறது. கட்டம் போட்ட கைதி உடையில் கல் உடைப்பவர்கள், செக்கு இழுப்பவர்கள் என்று கண்ட காட்சி, திகிலாக இருந்தது. பீதியடைந்த என் முகத்தைப் பார்த்துவிட்டு ராஜாஜி அவர்கள் ஆறுதலாக, "உங்கள்



அப்பா இம்மதல்லாம் மசய்ய மவண்டாம். செருப்புத் தைக்கக் கொடுத்தால், அவர் கொடுத்த செருப்பை யாரும் போட்டுக்க மாட்டார்கள். அதனாலே, சிறையிலிருக்கும் அச்சகத்துக்கு அனுப்பி, பிழை திருத்துகிற வேலையைக் கொடுத்திருக்கிறார்கள்'' என்று கூறினார். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு மத்திய சட்டசபைத் தேர்தலுக்கு நின்று அப்பா தேர்ந்தெடுக்கப்பட்டதும், தொண்டர்களின் மகிழ்ச்சி கரைபுரண்டு ஓடியது. அப்பாவைத் தலைமேலே தூக்கிக் கொண்டு கூத்தாடினார்கள். மாலையில் கோச் வண்டியில் ஊர்வலம். வந்து விழுந்த மாலைகளுக்குக் கணக்கில்லை!

இது நடந்தது 1934 ஆம் ஆண்டில். அது முதல் 1940 வரை அடிக்கடி தில்லி, சிம்லா, இந்த இரண்டு இடங்களிலும் மத்திய பாராளுமன்றக் கட்டடத்திற்குச் செல்லும் பொழுது நானும் அம்மாவும் உடன் செல்வோம். தாங்க முடியாத குளிர், தாங்க முடியாத வெயில். புதிய மொழி, புதிய முகங்கள் இவைகளையெல்லாம் மீறி ஒரு நட்பு! உண்மையான அன்பு, அனைவரையும் இணைத்தது.

புது தில்லியின் அகலமான வீதிகளை இரவில் சுத்தமாகக் கழுவி விடுவார்கள். பிரம்மாண்டமான பாராளுமன்றக் கட்டடம், நீர் ஊற்றுக்கள், வண்ண விளக்குகள்! சட்டசபைக்குள்ளே அகலமான மாடிப்படிகளிலே, நீண்ட அங்கி அணிந்து மேலே ஏறும் பெரிய உருவம். 'அதோ பார், அவர்தான் மௌலானா ஷவுக்கத் அலி' என்று அப்பா அறிமுகப்படுத்தினார். மகாத்மா காந்தியுடன் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஷவுக்கத் அலி சகோதரர்களில் ஒருவர் எனப் பின்னர் தெரிந்து கொண்டேன். நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வந்த தலைவர்களுடன் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. சட்டசபைக்குள்ளே எத்தனை எத்தனை விதமான ஆடைகள் அணிந்து அமர்ந்திருந்தனர்! அன்று பர்மாவிலிருந்து கூட இரு உறுப்பினர்கள் தலையில் பட்டு வர்ணக் குட்டையைக் கட்டிக் கொண்டு, சபையையே அலங்கரித்தனர்!



கவிக்குயில் சரோஜினி தேவி, திருவாட்டி அருணாஆசப் அலி போன்றவர்கள் அடிக்கடி வந்து சகஜமாகப் பேசிவிட்டுப் போவார்கள். தில்லியிலே 'இந்திரப் பிரஸ்தா' பள்ளியிலே சில காலம் படிக்கவும் நேர்ந்தது. ஒரு முறை எங்களைக் காரிலேயே அப்பா, அமிர்தசரஸிலிருக்கும் தங்கக் கோயிலையும், ஆக்ராவிலிருக்கும் தாஜ் மகால், கண்ணபிரான் பிறந்து வளர்ந்து லீலைகள் புரிந்த மதுரா, கோகுலம் பிருந்தாவனத்துக்கெல்லாம் அழைத்துச் சென்றார். மகாபாரதப் போர் நடந்த குருக்ஷேத்ரம், புழுதி அடைந்த கிராமமாகச் சோர்வுடன் காணப்பட்டது!

அப்பா நல்ல உணவு, மலர்கள், சந்தனம், வெற்றிலை, விளையாடக்குழந்தைகள், இனிமையான சங்கீதம் எல்லாவற்றையுமே அனுபவித்து ரசிப்பார். அவருக்கோ, எனக்கோ பிறந்த நாள் வந்துவிட்டால், பிரபல சங்கீத வித்வான்களின் கச்சேரியுடன் விருந்து நடக்கும். அப்பாவோ கடும் உழைப்பாளி. அஞ்சா நெஞ்சம் படைத்தவர்; நாவன்மையினால் வெள்ளை அதிகாரிகளையும் நடுங்க வைத்தவர். அவருக்குப் பூப்போன்ற இதயத்துடனும் பழகத் தெரிந்திருந்தது.

சென்னை மாநகரின் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பொழுது தினசரி காலை 7 மணிக்கே 'நகர சுத்தி' வேலைகளை மேற்பார்வையிடவும், தாமே முன்னின்று நடத்தவும் கிளம்பி விடுவார். அன்றைய கார்ப்பரேஷன் அதிகாரிகளுக்கெல்லாம் ஓய்வே இருக்

காது. அப்பொழுது அவர் திட்டமிட்டு நிறைவேற்றியதுதானே பூண்டி நீர்த் தேக்கம்! அதனை 'சத்தியமூர்த்தி சாகர்' என்று பெயரிட்டு அழைக்க வேண்டுமென்று வற்புறுத்தியவர் அப்பாவின் பிரதம சீடரான காமராஜரே.

நினைவிலே நிலைத்து நிற்பது 1940 ஆம் ஆண்டின் தனி நபர் சத்தியாக்கிரகம். இரண்டாவது உலக யுத்தம் நடந்து கொண்டிருந்த சமயம். மகாத்மாவின் கட்டளையை மேற்கொண்டு நாடு விடுதலை அடைய காங்கிரஸ் மகாசபையின் சில பொறுக்கி எடுத்த தலைவர்கள் மாத்திரமே இதில் ஈடுபட அனுமதிக்கப்பட்டனர். பெருமையாகக் கருதி, தாமாகவே வலியச் சென்று சிறைவாசம் ஏற்றனர். மக்களின் பின்பலம் பெரிய அளவில் இருந்தது.

ஆனால் அடிக்கடி சிறைவாசம், ஓயாமல் சுற்றுப் பயணம் என்பதைத் தாளாமல் அடிக்கடி அப்பா நோய் வாய்ப்பட்டு நீண்ட நாட்கள் மருத்துவமனையிலே இருப்பதும் வழக்கமாகி விட்டது.

மகாத்மா அப்பாவின் தேகநிலை குறித்துக் கடிதம் எழுதுவார். அவருக்கும் நானே ஆங்கிலத்தில் பதில் எழுதுவதைக் கண்டு, எனக்கு அவரே இந்தியில் கடிதம் எழுதி, அம்மொழியைப் பயிற்றுவித்தார். ஒரு முறை சென்னைக்கு அவர் வந்தபொழுது ஹரிஜன நல நிதிக்காக என்னிடமிருந்த வளையல்களையும் கொடுத்தேன். அவை வெள்ளி வளையல்கள், ஆனால், பத்திரிகைகளோ, தங்கம் எனப் பிரசுரித்து விட்டன. மறுநாள்



பார்க்கச் சென்ற பொழுது, காந்திஜி; 'ஏய், என்னை ஏமாற்றி விட்டாயே' என்றார்.

''இல்லையே பாபுஜி. வளையலைக் கேட்டீர்கள். உடனே கையிலிருந்ததைக் கழற்றிக் கொடுத்தேன். நானும் தங்கம் என்று சொல்லவில்லை. நீங்களும் கேட்கவில்லை'' என்று பதிலளித்தேன். ''நீ உன் அப்பாவிடம் சொல்லி இரண்டு ஜோடி வளையலுக்கான தங்கத்தை நாளைக்குக் கொண்டு வந்து கொடு'' என்று அபராதம் விதித்து விட்டார்.

''தேச சேவைக்காகவே தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவரின் மகளாகப் பிறக்க நேர்ந்ததால், என் குழந்தைப் பருவமே மறக்க முடியாத ஒன்றாக அமைந்து விட்டது.

கோகுலம் வாசகர்கள் அனைவரும் நாடு சுதந்திரம் அடைய, தியாகங்கள் பல புரிந்த பல்லாயிரக்கணக்கானவர்களை நினைத்து, நல்ல குடிமக்களாக வாழ, உயர்ந்த லட்சியங்களுடன் நடக்க முற்பட வேண்டும்.

ஜெய்! ஹிந்த்!!

அடுத்த இதழில்:

என் குழந்தைப் பருவம்

—சீர்காழி எஸ். கோவிந்தராஜன்



அதிர்ச்சி அடையவில்லை; மகிழ்ச்சி அடைந்தேன்

* மந்திரப் பென்சிலில் வரும் தலைமையாசிரியர் போல் நாட்டிலுள்ள பள்ளிகளிலெல்லாம் இருந்து விட்டால், திருடர்களே உருவாகமாட்டார்கள்.

— வி. கே. சாந்தகுமாரி, விழுப்புரம்.

* 'கால் தந்த பெருமை' கட்டுரையில் கால் பற்றிய கருத்துக்கள், உரையாடல்கள் இவ்வளவா? அம்மம்மா! வியப்பின் எல்லைக்கே சென்று விட்டோம்.

— அ. மணி, சங்கரன் பந்தல்.

* '2 ரூபாய்க்கு எப்படி கோகுலம் வெளியிடப்படுகிறது? கட்டுப்படியாகுமா?' என்று நானும் என் நண்பர்களும் பல முறை பேசிக் கொண்டிருக்கிறோம். 3 ரூபாய் சரியான விலை. சந்தேகமில்லை.

— த. பசுபதி, பழநி.

* நான் பல்வேறு வகையான தபால் தலைகளைச் சேகரித்து வருகின்றேன். அவற்றை எப்படிப் பிரிப்பது என்பதை இது வரையில் தெரிந்து கொள்ளாமல் இருந்தேன். செப்டம்பர் கோகுலம் மூலம் நன்கு தெரிந்து கொண்டேன்.

— கோ. முருகேசன் (11021), ஆரூர்நம்பிபட்டி.

* புத்திசாலி பீர்பால் கதையைப் படித்த பிறகு நானும் இச்சமுதாயத்தில் புத்திசாலியாக இருக்க விரும்புகிறேன்.

— ந. அகோரமூர்த்தி, சூரமங்கலம்.

* 'கேளுங்கள்; சொல்லுகிறோம்' பகுதியைத் தொடர்ந்து வெளியிடுங்கள். ஏன் தெரியுமா? அதைப் படிக்கப் படிக்க அறிவு வளர்கிறது.

— தங்ககார்த்திகை ராஜா (16097), விருத்தாசலம்.

* நல்லொழுக்கங்களைப் போதிக்கும் தரமான கதைகள், சிந்தனையைத் தூண்டும் அறிவுச் செய்திகள், அருமையான படக் கதைகள் ஆகியவற்றை வழங்கும் எங்கள் கோகுலத்திற்கு 3 ரூபாய் என்ன? அதற்கு மேலும் தரலாம்.

— கோ. பக்தவத்சலம் (6426), விருத்தாசலம்.

சார் தபால்!

* "3 ரூபாயென்ன, 30 ரூபாயானாலும் உனக்கு வாங்கித் தருவேன். நீ மட்டுமா படிக்கிறாய்? வீட்டில் உள்ள எல்லாருமே படித்துப் பயன் அடையவில்லையா?" என்று கேட்கிறார் என் பிரியமுள்ள அப்பா.

— சி. கோபிநாதன், தருமபுரி.

* பாரதிவிழாக் கொண்டாடும் செப்டம்பர் மாதத்திற்குப் பொருத்தமாக வந்துள்ள பாரதியார் கதைகள் சுவையாகவும், எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய கருத்துக்களுடனும் இருக்கின்றன.

— சி. எல். சரவணன் (706), மதுரை.

* உட்கோயிலுக்கான இரகசிய வழியைக் கண்டுபிடித்து விட்ட மகிழ்ச்சியில் மூழ்கச் செய்து விட்டு, அடுத்த விநாடியே பாபு என்னும் முரடனை அனுப்பி மூச்சைத் திணறச் செய்து விட்டீர்களே!

— இர. ஜோதிமணி, திருச்சி — 17.

* டாக்டர் பக்கத்தின் மூலம் டாக்டர் கு. கணேசன் அவர்கள் பல சத்தான விஷயங்களை அளித்தார். மிக்க பயனுள்ள பகுதி.

— ரா. வே. அருள்செல்வி, சேலம்.

* புதிய ஜனாதிபதியைப் பற்றி எங்களுக்குத் தெரியாத பல விஷயங்களை எளிதில் அறியும்படி செய்துவிட்டீர்கள். வாழ்க தங்கள் சேவை!

— இராதாகிருஷ்ணன், வாணியம்பாடி.

* சுதந்திரம் வருவதற்கு முன்பே, 'ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று ஆடுவோமே, பள்ளுப் பாடுவோமே' என்று பாரதியார் பாடினார். அதுபோல, 40 — வது சுதந்திரத் திருநாளில் புனித மண்ணில் மரம் நடும் கருத்தை 'சின்னக் கண்ணுவின் சுற்றுலா' மூலம் திரு. கூத்தபிரான் முன்னதாகவே எழுதிவிட்டாரே! அவர் ஒரு தீர்க்கதரிசிதான்!

— ஜெ. உமா (9455), வெள்ளிமேடு பேட்டை.

* எங்களின் ஆருயிர் நண்பன் 'கோகுலம்' உதவிகோரினால் நாங்கள் உதவாமல் இருப்போமா? நீங்கள் ஏன் நஷ்டத்தில் நடத்த வேண்டும்? அதிக பலனும் சிறந்த பண்பும் தரும் கோகுலத்தை ஒரு நாளும் பிரியமாட்டோம்.

— என். மாதேஸ்வரன் (12950), ஒசூர்.

* மூன்று ரூபாயாக உயர்த்தியது கண்டு நான் அதிர்ச்சி அடையவில்லை; மகிழ்ச்சி அடைந்தேன்.

— க. செங்கை பாரதி, செங்கோட்டை.

தீபாவளியாம் தீபாவளி!

கருத்தும்படமும்-ஜெம்பு



"மன்னா! நம் இளவரசர் செய்த காரியத்தால், யானைப் படைகளில் உள்ள, எல்லா யானைகளும், காட்டுக்கே ஓடி விட்டன!"

"என்ன! அப்படி அவன் என்ன செய்தான்?"

"யானைகள் கட்டி இருந்த இடத்தில் சரமாரியாக யானை வெடிகளைக் கொளுத்திப் போட்டு விட்டதால்... மன்னா!"
"......?"



"ஏண்டா! — தவளை வாணம் இவ்வளவு வேகமாப் போகுது!"

"அதன் பின்னாலே, பாம்பு வாணம் துரத்தறதே...! அதனாலேதான் இவ்வளவு வேகமாப் போகுது!"


"?"



"அக்கா! நீ செய்த பொரிவிளங்காய் உருண்டையில் ஒன்னு கொடு!

"ஏண்டா?"

"கிரிக்கெட் பால் உடைஞ்சு போச்சு! விளையாடறதுக்கு 'பால்' வேணுமென்னு அத்திம்பேர்கிட்டே கேட்டோம்! அவர் தான் பாலுக்குப் பதிலாய்ப் பொரி விளங்காய் உருண்டையை வைச்சுக்கோ! அது நூறு வருஷமானாலும் கொஞ்சம் கூட உடையாதுன்னுட்டார்!"



"பூமிக்கும் வானத்துக்குமா... குதிச்சுக் குதிச்சு... ஏன் இவன் அழறான்?"

"தீபாவளிக்கு, நான் இவனுக்கு ராக்கெட் வாணம் வாங்கித் தரலையாம்... அதுக்காக, இப்படி அழறான்!"
"?"



"என்னடா கோபு! உன் ஃப்ரெண்ட் பாலன் சைக்கிள் மிதிக்காமலே, காற்றுப் போலப் பறக்கிறானே!"

"அவங்க அப்பா பெரிய சயன்டிஸ்ட் ஆச்சே! அவர் தும்பாவிலே ராக்கெட் செய்து விடறார்! இவன் சைக்கிள்லே வாணம் கட்டி, மிதிக்காமலே, காற்றுப் போலப் பறக்கிறான்! பரம்பரை வாசனை விடுமா?"

பிருந்தாவனக் கவியரங்கம்

காக்கையும் கண்ணாடியும்



எங்கள் வீட்டுக் கொல்லையில்
என்றும் உண்டொரு கண்ணாடி
அப்பா தினமும் அதன்முன்னே,
அமர்ந்தே அழகு பார்ப்பாரே!

அன்றோர் நாள் நான் பார்க்கையிலே,
ஆங்கோர் காக்கை வந்ததுவே.
தன்னைப் போலே ஒருபறவை
கண்ணாடி யிலே தெரிந்ததுமே,

தன் கூர் அலகால் — ஆடியினைக்
கொத்திக் கொத்திப் பார்த்ததுவே.
கொத்திய கொத்தால் கூர்அலகும்
கூர்முனை மழுங்கிப் போனதுவே.

அந்தக் காக்கை அதன்பின்னர்
அன்னம் உண்ணப் பலவகையில்
துன்பப் பட்டது. அக்கதையைச்
சொல்லிட என்னிடம் வார்த்தையில்லை

அறிவுடை மக்கள் நாமும்தான்
அந்தக் காக்கைபோல் நடந்தால்,
கூராம் அறிவு மழுங்கிடுமே!
குறைகள் வாழ்வில் தோன்றிடுமே!

— இரா. சத்தியநாராயணன் (12164),
மதுரை — 10.

என்றும் வசந்தமே!

எங்கள் வீட்டுத் தோட்டத்தில்
என்றும் வசந்த காலமே!
எல்லா வகையில் ரோஜாவும்
எங்கும் பூத்துக் குலுங்குமே!

மணங்கவரும் மல்லி யோடு
மருக் கொழுந்தும் மணக்குமே!
மஞ்சள் நிற சாமந்தியும்
மகிழ்ச்சி யுடன் முகிழ்க்குமே!



சங்குபுஷ்பம், சம்பங்கி — ஊடே
சாதிப் பூவும் சிரிக்குமே!
செண்பகமும் சேர்ந் திட்டாலே
செவ்வந்தியும் தோற்குமே!

கடவுளுக்கு மாலை யாகக்
கட்ட உதவும் பூக்களை
உடனே இவற்றை நாம்பறிப்போம்
ஓடி வருக, நண்பரே!

— எஸ். சுதா (1693), சென்னை — 90.

தோட்ட வேலை

சின்னஞ் சிறுவர் நாங்களே
சேர்ந்து ஒன்றாய்க் கூடியே
கண்ணன் வீட்டுத் தோட்டத்தில்
காய்கறி விதைகள் நட்டோமே.



தினமும் பள்ளி முடிந்ததும்
திரண்டு நாங்கள் வந்துமே
மனம் ஒன்றித் தோட்டத்தில்
மகிழ்ந்து வேலை செய்வோமே.

ஆடு மாடு கன்றுகள்
அழித்திடாமல் காக்கவே
பாடு பட்டு வேலியைப்
பையன்களாய்க் கட்டினோம்.

கிணற்றில் தண்ணீர் இறைத்துத்தான்
கேடில் லாமல் பாய்ச்சினோம்.
உணர்ந்து களைகள் நீக்கினோம்.
ஓடி நன்றாய் ஆடினோம்.


காலம் சிறிது சென்றதும்
காய்கள் அதிகம் காய்த்தன.
பாலர் நாங்கள் சேர்த்துமே
பறித்துக் கடையில் விற்றோமே!

செடிகள் போல நாங்களும்
சிறந்த பயனைத் தந்திட
படித்து முடித்து நாட்டினைப்
பாரில் உயர்த்த முயலுவோம்.

— கொ.மா.கோ. இளங்கோ (3177),
இராஜபாளையம்.

தாஜ்மகால்

உலக அதிசயம் ஏழினுள்
ஒன்றாய் விளங்குது தாஜ்மகால்!
சலவைக் கல்லால் ஆனது
தாஜ்மகால் என்னும் கட்டடம்!



ஆக்ரா நகரின் சிகரமாய்
அழகாய்த் தோற்றம் அளிக்குது.
பார்க்கப் பார்க்க மிகமிகப்
பரவச மூட்டுது தாஜ்மகால்!

மும்தாஜ் நினைவாய் ஷாஜகான்
முயன்று கட்டிய தாஜ்மகால்.
கம்பீரத் துடன் நிற்குது
காண்பவர் மனத்தைக் கவருது!

பெரும்புகழ் பாரத நாட்டிற்குப்
பெருமை சேர்க்குது தாஜ்மகால்
அருமை மிகுந்த தாஜ்மகால்.
அனைவரும் காண வேண்டுமே!

— க. கோகிலவாணி (3789),
பழையனூர்.

தபால் பெட்டி



சிவப்பு வர்ணப் பெட்டி — நமது
தெருவில் உள்ள பெட்டி
எவர்க்கும் உதவும் பெட்டி — கடின
இரும்பில் செய்த பெட்டி


திறந்து பூட்டும் நேரம் — நமக்குத்
தெரியக் காட்டும் பெட்டி!
சிறந்த முறையில் மக்கள் — நம்பும்
சீர்மை வாய்ந்த பெட்டி!


மழையை வெயிலைத் தாங்கும் — மிக்க
வலிமை யுடைய பெட்டி!
எழுதிப் போடும் கடிதம் — எல்லாம்
ஏற்கும் தபால் பெட்டி!

— செந்தில்வேலன் (குமரன்) (141),
தேனி.

கொசுவும், தேனீயும்...

படக்கதை :- ஓவியர் — S.K.ராமானுஜம் (ராஜு)




குழந்தைக்கு காய்ச்சல் அதிகமாகவே, அக்கிராமத்திலுள்ள நாட்டு வைத்தி-
-யரை அழைத்து வந்தனர்.
கொசுவும், தேனீயும்... நாட்டுவைத்தியர் கூறுவதை கேட்டுக்கொண்டிருந்தன..
இம்மருந்தை தேனில் குழைத்துக் கொடுக்க வேண்டும்
தேனில் கலந்து கொடுத்த மருந்தினால் குழந்தையின் காய்ச்சல் நின்றுவிட்டது. மிகவும் பொறுமையுடனிருந்த தேனீ அந்தப்பொல்லாத கொசுவைப்பார்த்து,
அண்ணே! எப்படி என் தேன் மருந்து? நீ..கொடுத்த நோயை.. என்தேன்... மருந்துடன் சேர்ந்து எப்படி குணப் படுத்தியது... பார்த்தியா..?
தேனீ, கொசுவிடம் குணம-
-டைந்த குழந்தையைக் காட்டியது....
குழந்தை எப்படி.. விளையாடறான்..பாரு..!
மக்கள் உன்னைக்கண்டு பயந்து கொசுவலையில் தூங்குகிறார்கள்.. இதனால் மக்கள் உன்னை வெறுக் கிறார்கள் என்று தெரிகிறதா?
இந்த மக்கள் எங்கள் தேனீ இனத்தை எப்படி விரும்பி வளர்க்கிறார்கள், பார்த்தியா? இதிலிருந்து மக்கள் என்னை விரும்புகிறார்கள்; ஆனால் உன்னை வெறுக்கிறார்கள் என்பதைப்புரிந்து கொண் டாயா? இருந்தாலும் நான்.. உன்னை.. ஒரு நாளும்.. வெறுக்க மாட்டேன்.. நீ என்றும் என்னு டைய தோழன்...
அவமானம் தாங்கமுடி யாத கொசு..வெகு வேக-
-மாகப்பறந்து ஓடிவிட்டது.
ஏன் இப்படி தலைதெறிக்க ஓடுகிறான்!

பிருந்தாவனம்

'டக்' என்று சொல்லுங்கள்



1089 — இந்த நான்கு இலக்க எண்ணை 9—ஆல் பெருக்கினால் என்ன விடை வரும்? விடையை 'டக்' என்று சொல்லுங்கள்.

விடை: 1089—ஐ திருப்பிப் போட்டால் அதுதான் விடை. அதாவது 9801.

— மு. கா. இளங்கோ (3415),
காவேரிப்பட்டினம்

புகழ் பெற்ற விலாசம்



அமெரிக்காவிலேயே புகழ் பெற்ற விலாசம்:

No. 1600, பென்ஸில்வேனியா அவென்யூ, D.C./N.W. வாஷிங்டன்.

காரணம் அதுதான் அமெரிக்க ஜனாதிபதி வசிக்கும் வெள்ளை மாளிகை.

— ஏ. எம். தினகரன் (15857),
காளாம்பட்டு

திருப்பிப் படித்தாலும்...

ABLE WAS I ERE I SAW ELBA

இந்த வாக்கியத்தைச் சொன்னவர் யார்? இதில் என்ன விசேஷம்?

மாவீரர் நெப்போலியன்தான் இதைச் சொன்னார். போரில் தோல்வியுற்று நெப்போலியன் எல்பா



என்னும் தீவில் சிறை வைக்கப்பட்ட போதுதான் இதைச் சொன்னார். 'எல்பாவைப் பார்ப்பதற்கு முன்பு நான் பலசாலியாக இருந்தேன்' என்பதுதான் இதன் பொருள். இந்த ஆங்கில வாக்கியத்திலுள்ள விசேஷம் என்னவென்றால், இதைத் திருப்பிப் படித்தாலும், அதே அர்த்தத்தைக் கொடுக்கும்.

— என். பார்த்தசாரதி (8264),
நெல்லிக்குப்பம்

சென்னை நகரம்

சென்னை நகரத்தின் பரப்பளவு எவ்வளவு என்று தெரியுமா? சுமார் 68 சதுர மைல்; மக்கள் தொகை (1981—ஆம் ஆண்டு எடுத்த கணக்




குப்படி) 32,66,034. பேசப்படும் மொழிகள்: தமிழ் (ஆட்சி மொழி) மற்றும் ஆங்கிலம், தெலுங்கு மலையாளம், கன்னடம், இந்தி, உருது.

— ஏ.ஆர். ஆனந்த் (421), காரைக்குடி

பன்றியின் பெருமை

சீனாவின் மக்கள் தொகை 60 கோடி. அங்கே பன்றியின் தொகை 8 கோடி அமெரிக்க ஐக்கிய மாகாணங்களின் மக்கள் தொகை 15 கோடி. பன்றிகளின் தொகை 5½ கோடி. பன்றியின் எடை 100 பவுண்டு என்றால் அதன் கொழுப்பு 50 பவுண்டு இருக்கும். அதாவது சரிபாதி. பல நாடுகளில் பன்றி இறைச்சியை மக்



கள் விரும்பிச் சாப்பிடுகிறார்கள். பன்றி இறைச்சியைப் பச்சையாகவும், வேகவைத்தும், வறுத்தும், புகைத்தும் கீரை, கிழங்கு முதலியவற்றோடு கூட்டியும் பயன்படுத்துகிறார்கள் அது கெடாதபடி பக்குவம் செய்து டப்பியில் அடைத்தும் பல இடங்களுக்கு அனுப்புகின்றனர்.

ஆதாரம்: தமிழ்க் கலைக் களஞ்சியம்.

தகவல்: பழ. சாந்தி (5939), இராயவரம்.

மாநிலங்களும் தலைநகரங்களும்

இங்குள்ள மாநிலங்களின் எதிரேயுள்ள தலைநகரங்கள் இடம் மாறி இருக்கின்றன. சரி செய்யுங்கள். பார்க்கலாம்.



1. மத்தியபிரதேசம்	ஸ்ரீநகர்
2. மகாராஷ்டிரம்	ஐதராபாத்
3. ஒரிசா	திருவனந்தபுரம்
4. குஜராத்	பம்பாய்
5. இராஜஸ்தான்	காந்தி நகர்
6. காஷ்மீர்	ஜெய்பூர்
7. ஆந்திரா	பெங்களூர்
8. கர்நாடகம்	புவனேஸ்வர்
9. கேரளம்	போபால்

விடை: 1=9; 2=4; 3=8; 4=5; 5=6; 6=1; 7=2; 8=7; 9=3.

— பொ. நடராஜன் (12173), ஈரோடு

வாக்குறுதியைக் காப்பாற்றியவர்

ஒரு தாய், தான் இறக்கும்போது, தன் அன்புக்குரிய இளைய மகனை அழைத்து,




''நான் என் வாழ்நாள் முழுவதும் மது அருந்த மாட்டேன்; புகை பிடிக்க மாட்டேன்'' என்று நீ எனக்கு வாக்குறுதி அளிப்பாயா?என்றுகேட்டாள்.

''தாயே, உங்கள் சொற்படியே நான் நடப்பேன். மதுவைத் தொட மாட்டேன்; புகைபிடிக்கமாட்டேன். இது உறுதி'' என்ருன் இளைய மகன்.

உறுதிஅளித்ததோடுஇருக்கவில்லை இறுதி வரை அந்த வாக்குறுதியைக் காப்பாற்றினுர். அவர்தான், அடிமைத் தளையை அறுத்த அமெரிக்க ஜனதிபதி ஆப்ரகாம்லிங்கன்.

— எஸ். ஜெயஸ்ரீ (1254), திருச்சி.

பிப்ரவரியில் 5 ஞாயிறு!



பிப்ரவரி மாதத்திற்கு 5 ஞாயிற்றுக் கிழமைகள் வருமா? 'ஆம்', என்ருல், இதற்கு முன் எப்போது வந்தது? மீண்டும் எப்போது வரும்?


விடை தெரிந்தால் சரி; இல்லாத போனுல், மேலே படியுங்கள்.

லீப் வருடம் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை வருகிறது. ஒரு வாரத்திற்கு ஏழு நாட்கள். எனவே, 28 ஆண்டுகளுக்கு (4 X 7) ஒரு முறை பிப்ரவரி மாதத்திற்கு 5 ஞாயிற்றுக்கிழமைகள் வரும். இதற்கு முன்பு 1976—ல் வந்தது. மீண்டும் 2004—ல் வரும்.

— கே.வி. விஸ்வநாத் பாபு (17674)
அந்தியூர்.

தவறுகளைக் கண்டுபிடியுங்கள்

கீழே உள்ள வாக்கியங்களில் உள்ள தவறுகளைக் கண்டுபிடியுங்கள், பார்க்கலாம்:



1. என் மாமா ஏப்ரல் 31 ஆம் நாள் புதுதில்லியிலிருந்து கப்பலில் வந்து சேர்ந்தார்.

2. சௌதி அரேபியாவின் முக்கியமான ஆற்றுத் துறைமுகம் மெக்கா.

3. மகா அலெக்சாந்தருடன் இரண்டாம் புலிகேசி சண்டை போட்டுத் தோற்ருர்.

விடைகள்: 1. ஏப்ரல் மாதத்தில் 31 ஆம் தேதி கிடையாது. மேலும், தில்லி கப்பல் துறைமுகம் அல்ல. 2. சௌதி அரேபியாவில் ஆறுகளே கிடையாது. மெக்கா துறைமுகம் அல்ல. 3. மகா அலெக்சாந்தரும் இரண்டாம் புலிகேசியும் வேறு வேறு காலத்து மன்னர்கள்.

— வெ. சந்திரசேகர் (5930),
கோவை — 4.

நாய்கள் அரங்கேற்றிய நாடகம்!




மாஸ்கோவில் உள்ள பிராணிகள் — அன்பர் கழகத்தினர் நாய்களைக் கொண்ட நாடகக் குழு ஒன்றை

அமைத்து இருக்கிறார்கள். சமீபத்தில் இந்த நாய்களின் நாடகக்குழு, நாடகம் ஒன்றை அரங்கேற்றியது. நீரிலே மூழ்கியவர்களைக் காப்பாற்றுதல், மோப்பசக்தியினால் எண்ணெய் வளங்களைக் கண்டு பிடித்தல், கண் பார்வையற்றவர்களுக்கு வழி காட்டுதல், குற்றவாளிகளைத் தப்பிச்செல்ல விடாமல் தடுத்தல், பொருட்களைக் காவல் காத்தல் போன்ற பல செயல்களை நாய்கள் நடித்துக் காட்டின.

ஆதாரம்: செம்மலர், தகவல்: ஆர். சுபாஸ் (4235), எம்.களத்தூர்.

தந்தையா? தாயா?



நாம், நம் பெயருக்கு முன் தந்தையின் முதல் எழுத்தையே இனிஷியலாகப் பயன்படுத்துகிறோம். ஆனால், ஸ்பெயின் நாட்டவர்கள் தங்கள் தாயாரின் முதல் எழுத்தையே இனிஷியலாகப் பயன்படுத்துகிறார்கள்.

—அ. அன்பரசு (2101), கோவை.

கால் பந்து ஆடும் செம்மறி ஆடு!



பெல்ஜியத்தின் விவசாயியான ரெக்ஸ் ஜூகார்டு தனது செம்மறி ஆட்டிற்கு கால்பந்து விளையாடப் பயிற்சி அளித்திருக்கிறார். தன் முன்னங்கால்களால் பந்தை உருட்டி, பிறகு பின்னங்கால்களால் உதைத்து விளையாடுகிறது அந்த ஆடு! இதற்கு முன், இதே மாதிரி இரு ஆடுகளுக்கு இவர் பயிற்சி அளித்திருக்கிறாராம்!

— டி. சிவக்குமார் (17569), அரியூர்.

மழையூர் மண்ணின் பெருமை!



புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள மழையூரில் உள்ள களிமண்ணால் செய்யப்பட்ட ஐயனார் சிலைகளும், குதிரைகளும் இந்தியாவில் பல பகுதிகளுக்கு மட்டுமல்ல; ரஷ்யா போன்ற அயல்நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மழையூர் மண்ணுக்கு இப்படி ஒரு பெருமை.

— அ. சாகிர் (5450), மழையூர்.

நான் எடுத்த புகைப்படம்



மேலே இருப்பது நான் எடுத்த புகைப்படம். இதைப் பார்த்ததும் உங்களுடைய நினைவுக்கு வருவது, தீயதைப் பார்க்காதே! தீயதைப் பேசாதே! தீயதைக் கேட்காதே!

— ஆர். கோபிநாதன் (10732), பெரியகுளம்.

இருமொழிகளில் பழமொழிகள்



PARALLEL PROVERBS

போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து.

Enough is as good as a feast.

பதறாத காரியம் சிதறாது.

Haste is waste.

வினை விதைத்தவன் வினையறுப்பான்.
தினை விதைத்தவன் தினையறுப்பான்.

As you sow, so shall you reap.

எறும்பு ஊரக் கல்லும் தேயும்.

Constant dripping wears away the stone.

பட்டவர்க்குண்டு பலன்.

No sweet without sweat.



ஆனைக்கொரு காலம்; பூனைக்கொரு காலம்.

Every man hath his hour.

சும்மா இருக்கும் சங்கை ஊதிக் கெடுக்காதே.

Let sleeping dogs lie.

பிள்ளை பிறக்குமுன் பேரிடுகிறதா?

First catch your hare, then cook it.

ஆசை வெட்கமறியாது.

Love is blind.

ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரை.

Among the blind, the one eyed is king.

தானம் கொடுத்த மாட்டின் பல்லைப் பார்க்காதே.

Never look a gift horse in the mouth.

ஈயத்தைப் பார்த்து இளித்ததாம் பித்தளை.

The pot calls the kettle black.

உண்ட வீட்டுக்கு இரண்டகம் பண்ணலாமா?

I play the tune I am paid to.

தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்.

Once learnt, never forgotten.

தனக்குப் பின் தானம்.

Charity begins at home.

விளையும் பயிர் முளையிலே தெரியும்.

The Childhood shows the man.

அடிக்கும் பிடிக்கும் சரி.

Tit for Tat.

ஆற்றிலே வந்தது மடுவிலே போயிற்று.

Ill gotten gains are cursed.

தொகுத்தவர்: ஆ. ஞானசேகரன்.

பட்டாசா? பட்சணமா? பட்டாடையா?

நெல்லை ஆ. கணபதி



நடுவர்: தாத்தா

(பார்வையாளர்கள்: அம்மா, அப்பா, மாமி, பக்கத்து வீடு, எதிர் வீட்டிலுள்ள பெரியவர்களும் குழந்தைகளும்.)

“தீபாவளியைச் சந்தோஷப் படுத்துவது பட்டாசா? பட்டாடையா? பட்சணமா? எது”என்று கேட்டாள் பாட்டி. பட்டாசுதான் என்றான் தம்பி. பட்சணம்தான் என்றாள் தங்கை. பட்டாடைதான் என்றாள் அக்காள். பட்டிமன்றம்சுவையாகத் தொடங்கியது.

தம்பி: பட்டாசு இல்லாமல் தீபாவளியா? பருப்பு இல்லாமல் கல்யாணமா? தீபாவளி வந்துள்ளதைத் தெரிவிப்பதே பட்டாசுதான். ‘பட்’ ‘பட்’ ‘பட்’டென்று வீதியெல்லாம் வெடித்துச்சிதறும் பட்டாசுதான் தீபாவளிக்கு நல்வரவுகூறும் கட்டியங்காரன். இந்த உண்மை கூடத் தெரியாமல் பேச வந்துவிட்டீர்களே... வெட்கம்! வெட்கம்!

தங்கை: பருப்பில்லாமல் கல்யாணமா? என்பதைப் பட்சணம் இல்லாமல் தீபாவளியா? என்றும் கேட்கலாமே? தம்பிக்கு இந்த உண்மை கூடப் புலனாகாமல் போனது விசித்திரமே!

அக்காள்: பருப்பில்லாமல் கல்யாணமா? பட்டாடை இல்லாமல் தீபாவளியா? என்று கூடக் கேட்கலாமே? இது வரை பேசிய தம்பியும், தங்கையும் இதை உணர வேண்டும். பட்டாடை என்பது புனிதமானது. திருவிழாக்களில் “சுவாமி” தேரிலும் பல்லக்கிலும் வீதி உலா வரும்போது பட்டாடை கட்டி வருவதைக் கூடப் பார்த்ததில்லையா?

(கூட்டத்தில் உற்சாகம், கைதட்டல்)

தம்பி: திருவிழாக்களில் சுவாமி எழுந்தருள்வதை ஊர் முழுமைக்கும் ஒரு நொடியில் அறிவிப்பதே பட்டாசுதான். வெடிச்சப்தம் கேட்ட பிறகுதான் வீதிக்கு குழந்தைகளுடன் வருவார்கள் குடும்பத்தார்.

தங்கை: இரண்டு பேரும் கூறுவது உண்மையல்ல. “சுண்டல், சர்க்கரைப் பொங்கல், புளியோதரைப் பட்சணங்கள் கோயிலில் பிரசாதமாகக் கிடைக்குமே!” என்றுதான் குழந்தைகள் கூடுகிறார்கள், தெரியுமா?

அக்காள்: அப்படி ஒண்ணுமில்லே. பட்டுப் பீதாம்பரத்துடன் திருப்பதி வெங்கடாஜலபதி காட்சி தருவதைக் காணக் கண் கோடி வேணும். நீங்கள் பார்த்ததில்லையா?

தங்கை: திருப்பதின்னா “பட்டு” முக்கியமா? “லட்டு” முக்கியமா?



தம்பி: இரண்டுமில்லே "மொட்டை" முக்கியம்.

தங்கை: இலவச லட்டு, இலவசத் தயிர்ச் சாதம், இலவசச் சாப்பாடு என்று திருப்பதியில் தருவது ஏன்? ஆற்றிலே இறங்கி அழகரைச் சேவிச் சாலும்சோற்றிலே இருக்கிறுன் சொக்கப்பன் என்பதுதான் உண்மை. ''கோவிந்தா'' ''கோவிந்தா''ங்கற வாய்க்கு ''இந்தா'' ''இந்தா''ன்னு லட்டு கொடுத்தால்தான் குரல் வேகமாகக் கேட்கும் தெரியுமா? ருசிச்சு ருசிச்சு சாப்பிடறவாய் துரோகம் செய்து பேசலாமா?

தம்பி: ஆற்றில் அழகர் இறங்கினுலும் 'பட்டாசு'தான்... திருப்பதி சாமி தெருவீதி உலா வந்தாலும் 'பட்டாசு'தானே பறைசாற்றும்? இரண்டு காது இருந்தும் பட்டாசு சப்தம் கேட்காத காது பயனில்லாத காதுதான். காதுகளுக்கும் பேசும் சக்தி இருந்தால் இதையே எடுத்துச் சொல்லும். அடித்துப் பேசும். வாதிட்டு வெல்லும்...

அக்காள்: பட்சணம் பட்டாசு இரண்டையுமே நினைச்சிட்டுக் கோயிலுக்குப் போறவங்க கண்களிலே ''பட்டா''லும் தெரியாது "பட்டாடை".

தம்பி: எந்தசாமி எந்தப் பட்டாடை கட்டி இருக்கு? எந்த மாமி எந்தப் பட்டாடைகட்டி இருக்கா? ன்னு பார்க்கவே பலபேர் கோவிலுக்கு வர்ருங்க போலிருக்கு.

(கைதட்டல்)

நடுவர்: (மேஜையில் லேசாகத் தட்டி) பட்டிமன்றத்தின் தலைப்பு தீபாவளிக்குச் சிறப்பு தருவது பட்டாசா? பட்டாடையா? பட்சணமா? என்பது தான். அதை ஒட்டியே பேசவேண்டும். விலகிச் சென்று பேசக் கூடாது.

தம்பி: பட்டாசு, பட்டாடை, பட்சணம் என்ற மூன்றையுமே எடுத்துக் கொள்ளுங்கள். பட், பட், பட் என்பது தான் முதலிடம் வகிக்கிறது. பட் பட் பட் என்று வெடிப்பது எது? பட்டாசு தானே!

தங்கை: பட் பட் பட் என்று பட்டாசு வெடிக்கும் போதெல்லாம் அம்மாவின் மனம்தான் திக் திக் என்று அடிக்கும். பயப்படும். தொட்டிலுக்குள்ளே தூங்காமல் குழந்தை அழும். கட்டிலுக்கடியிலே நாய்க்குட்டி பதுங்கிவிடும். கையிலோ, காலிலோ, முகத்திலோ பட்டுவிடக் கூடாதே என்பதற்காக அம்மா நெஞ்சம் பட் பட் பட் என்றும் பட படக்கும்.

(பலத்த கைதட்டல்)

அக்காள்: அப்பாவின் மனமும் 'பக் பக் பக்'கென்று துடிக்கும். காரணம் 'காசு' கரியாகுதே... என்பது தான்.

தம்பி: அம்மா மனசு திக் திக் திக் என்று அடிக்கக் காரணம் வயிறு புடைக்கப் பட்சணம் தின்றுவிட்டு அம்மாடி! ஐயோடி!ன்னு சில சாப்பாட்டு ராமிகள் துடிப்பாங்களேன்னு தான். மருந்துச் செலவாகுமேன்னு தான். அப்பா மனசும் பக் பக் பக் என்று துடிக்கக் காரணம் தீபாவளி போனஸ் 'பட்டாடை' ஆகிவிடுமே, மாதம் முழுவதும் எப்படிச் சமாளிப்பது என்கிற கவலையாலேதான்.

அக்காள்: பட்டாசு, பட்சணம் இரண்டுமே காசை வீண் விரயம் செய்யறதுதான்.

தங்கை: ஆளுக்கு ஒரு பட்சணம் தின்றுல்தான் அவங்களுக்குச் சந்தோஷம்.

தம்பி: ஆனு, ஒரே ஒரு பட்டாசு ஊர் முழுவதையும் மகிழ வைக்குமே!

அக்காள்: இரண்டுமே ஒரு நாள் கூத்துக்குச் செய்யும் ஊதாரிச் செலவு தான். ஆனால் பட்டாடை என்பது ஒரு முதலீடுதான். ஒரு சேமிப்புதான். பாட்டி தலை தீபாவளிக்கு எடுத்த பட்டாடைகூட இன்னமும் பத்திர மாக இருக்குது. அப்ப ஐம்பது ரூபாய்க்கு எடுத்த பட்டாடை இப்ப ஐயாயிரம் ரூபாய்க்குச் சமமாக மதிப் பும் கூடி இருக்குது தெரியுமா?


தம்பி: தாத்தா தலைத்திபாவளிக்கு வெடிச்ச பட்டாசுக்கு பயந்து பாட்டி ஓடி ஒளிஞ்ச கதையைத்தான் தாத் தாவும் பாட்டியும் சொல்லிச் சொல்லி சிரிக்கிறாங்க! எத்தனை எத்தனைதடவைமகிழ்ச்சியடையறாங்க தெரியுமா? மனசுக்கு மகிழ்ச்சி தருவது தானே பண்டிகை? பட்டாடை உடுத் தினாலும் 'தீபாவளி' வரும். பருத்தி ஆடை உடுத்தினாலும் 'தீபாவளி' வரும். பட்டாசு இல்லாட்டி வருமா?

தங்கை: பட்சணம் தின்னாத்தான் எந்தப் பண்டிகையும் நிறைவு தரும்.

தம்பி: பட்டாசுதான் ஊரையே திருவிழாக் கோலம் ஆக்கும். அனை வரோட மனசும் மகிழச் செய்யும்.

தங்கை: கல்யாணமோ? திருவி ழாவோ? சாப்பாடுதான் முக்கியம். விருந்துதான் நல்லா இருக்கணும். "உண்டி கொடுத்தார் உயிர் கொடுத் தார்!"ன்னுதானே பழமொழி உண்டு பொங்கல், தீபாவளி விசேட நாட் களில் வீட்டுக்கு வீடு செய்யற பட் சணத்தைத்தான் சாமிக்குப் படைக்கி றோம். உறவுக்காரங்களுக்கும் அக்கம் பக்கம் உள்ளவர்களுக்கும் கொடுத்து மகிழுறோம். அதிலே இருக்கிற ஆனந்தம்தான் மனசுக்குப்பேரின்பம். சாப்பாடு இல்லேன்னு தெரிஞ்சால் கல்யாண வீட்டிற்குக்கூட ஒருத்தரும் வரமாட்டாங்க. விருந்து உபசாரம் தான் குடும்பத்திற்கே அழகு. அதற்குத் தான் பட்சணம் செய்யறோம். தெரியுமா?


தீர்ப்பு: "ஐந்து" ரூபாய்க்குப் பட்டாசு, "ஐம்பது" ரூபாய்க்குப்



பட்சணம், ''ஐந்நூறு'' ரூபாய்க்குப் பட்டாடை அனைத்துமே இன்பம் தருவதுதான். ஆண்டு முழுவதும் பாடுபட்டு உழைக்கின்ற மக்களுக்கு மகிழ்ச்சி தருவது தான் பண்டிகைகள். பண்டிகைகள் வரும்போது பட்டாசு, பட்சணம், பட்டாடை இவைகளும் சேர்ந்துதான் வரும். பகலில் காதுகளால் கண்டு மகிழும் வெடிச்சத்தம்! இரவில் கண்களால் கண்டு மகிழும் புஸ்வாணம்! யாவுமே பட்டாசுதான். இளமை மனதுக்கு இதுவே மகிழ்ச்சி தரும். அன்றாடம் ஒரே மாதிரி உணவு வகைகள் சாப்பிட்டுச் சாப்பிட்டுப் பழகிய நமக்கு ஒரு மாறுதல் தருவதற்கே பட்சணங்கள் உள்ளன. பட்டாடைகள் என்பது ஒரு வகையில் பார்த்தால் சேமிப்பும் மறுவகையில் பார்த்தால் புனிதத்தன்மையும் கொண்டவை. இரண்டும் இணைந்து — அதாவது மகிழ்வும் மனநிறைவும் தருவதுதான் பட்டாடைகள். வெட்டிச்செலவு, வீண் செலவு என்று நாம் நினைக்கக்கூடாது. பட்டாசுக்குச் சிவகாசி, பட்டாடைக்குக் காஞ்சிபுரம், பட்சணங்களுக்கு மளிகைக் கடைகள் இவையாவும் எத்தனை பேர்களை வாழவைக்கின்றன? என எண்ணிப் பார்க்க வேண்டும். நாடு முழுதும் எத்தனையோ பட்டிமன்றங்கள் நடைபெறுகின்றன. சிந்திக்கும் ஆற்றலும் வாதிக்கும் திறனும் வளர்வதற்குப் பட்டிமன்றங்கள்தான் உதவுகின்றன. நன்கு சிந்திக்கவும் திறமையாக வாதிடவும் இளமையிலே பயிற்சி பெற வேண்டும் என்பதற்காகவே 'பட்டாசு'', 'பட்சணம்', 'பட்டாடை' பட்டிமன்றம் நடத்தினோம். மூன்றுபேருமே வென்றுவிட்டீர்கள். மூன்றும் எப்படித் தேவையோ அப்படியே மூவரும் ஒருவருக்கொருவர் இளைச்சவர் இல்லைன்னு நிரூபிச்சிட்டீங்க.

வாங்க வாங்க எல்லாமே ரெடியா இருக்கு. தீபாவளியை ஜாம் ஜாம்னு கொண்டாடுவோம்.

(பலத்த கைதட்டல்)



" அவுட்! "


Campco
p
லா! லா! லா!
இந்தியாவின் க்ரீம் மிருதுந்,
சுவைமிக்கச் சாக்கலேட்
இதோ வந்துவிட்டது!
கேம்ப்கோ க்ரீம் மில்க் சாக்லேட் ஏற்றுமதி ரக சிறந்த கோகோவினால் தயாரிக்கப்பட்டது. இதன் அதி அற்புத சுவை உங்கள் மனத்தைக் கொள்ளை கொண்டுவிடும்.
Campco
Creamy Milk Chocolate
இந்தியாவின் மிகப் பெரிய நவீன ஆலை அளிப்பது.
கேம்ப்கோ லிமிடெட், மங்களூர்.
R K SWAMY/CL/5194/TAM

பழமொழிப் புதிர்





மேலே உள்ள ஒவ்வொன்றும் எந்த எந்தப் பழமொழியை நினைவூட்டுகின்றது?

விடை 75 ஆம் பக்கத்தில்.

பாலஸ்தீன நாட்டுக் கதை

தந்தை சொல் மிக்க மந்திரமில்லை



தமிழில்: **எச். கிருஷ்ணமூர்த்தி**

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த கதை இது. ஆடு மாடுகளுக்கு இரை தேடி, நாடோடிகளாகத் திரிந்த எபிரேயர்கள், கானன் நாட்டில் குடியேறினர். அவர்களுடைய தலைவர் ஜேகப். அவருக்குப் பன்னிரண்டு பிள்ளைகள். முதல் பத்துப் பிள்ளைகளும் வளர்ந்து பெரியவர்களாக ஆயினர். பதினோராவது பிள்ளை ஜோசப். அடுத்தவன் பென்சமின். கடைசி இருவரும் சிறுவர்கள்.

வாழ்க்கைக்குத் தேவையான நல்ல விஷயங்களை எல்லாம் ஜேகப் தினந்தோறும் தன் பிள்ளைகளுக்கு எடுத்துச் சொல்வது வழக்கம். ஆனால், முதல் பத்துப் பிள்ளைகளும் அவற்றைக் காதில் வாங்கிக்கொள்ளாமல் தங்கள் மனம்போன போக்கில் நடந்தனர். பெஞ்சமினோ மிக மிகச் சின்னவன். ஆனால், ஜோசப் மட்டும் தன் அப்பாவின் அன்பு மொழிகளைப் பொறுமையாகக் கேட்டான். அதன்படி நடந்தான்.

அப்பாவுக்கு ஜோசப்பின் மீது அலாதி ஆசை. எதிர்காலத்தில் அவன் ஒரு சிறந்த தலைவனாக வருவான் என்று அவர் எண்ணினார். ஆகவே, அவனுக்கு மட்டும் நிறையச் சலுகைகளை அளித்தார். பெரிய பிள்ளைகள் ஜோசப்பைப் பார்த்துப் பொறாமைப் பட்டனர்.

ஜோசப் பல வினோதமான கனவுகளைக் கண்டான். சகோதரர்கள் தனக்குத் தலை வணங்குவது போல அவனுக்கு ஒரு கனவு வந்தது. அந்தக் கனவுகளை அவர்களிடம் சொன்னான். அதைக்கேட்டு அவர்கள் எரிச்சல் அடைந்தனர். "என்ன தம்பி! எங்களை எல்லாம் அடக்கி ஆள எண்ணுகிறாயா?" என்று கோபத்தோடு கேட்டனர். அது முதல் அவர்கள் ஜோசப்பை வெறுக்கத் தொடங்கினர்.

ஜோசப்பிற்குப் பதினேழு வயதாயிற்று. நீண்ட பளபளப்பான பட்டாடை ஒன்றை அவனுக்குப் பிறந்த நாள் பரிசாக அப்பா கொடுத்தார். அதை அவன் சந்தோஷமாக அணிந்தான். அப்பாவுக்குப் பிறகு ஜோசப்



தான் அவர்களை ஆளப்போகிறான் என்பதை அந்தப் பரிசு சுட்டிக் காட்டுவதாக அவர்கள் எண்ணினர். ஆகவே, அவர்களுடைய கோபம் மேலும் அதிகரித்தது.

ஜோசப்பின் மீது பழிதீர்த்துக் கொள்ளச் சகோதரர்கள் காத்திருந்தனர். அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது.

ஒரு முறை வீட்டிலிருந்து வெகு தொலைவில் இருந்த மேய்ச்சல் நிலத்திற்கு அவர்கள் ஆடுகளை ஓட்டிச் சென்றிருந்தனர். பல நாட்கள் ஆகியும் திரும்பவில்லை. ஆகவே, அவர்களை நேரில் பார்த்து விசாரித்து வருமாறு அப்பா ஜோசப்பை அனுப்பினார். பிறந்தநாள் பரிசான பட்டாடையைப் பெருமையோடு அணிந்துகொண்டு, ஜோசப் தனியாகப் புறப்பட்டான்.

கானான் நாடு பொதுவாக ஒரு வறண்ட பூமி. அங்கே மரம், செடிகள் ஏதுவும் கண்ணில் படவில்லை. ஆங்காங்கே புல்வெளிகள் மட்டும் இருந்தன. வெகுதூரத்தில் ஜோசப் வந்துகொண்டிருப்பதை சகோதரர்கள் பார்த்தனர். பட்டாடையின் பளபளப்பினால் அவர்கள் அவனை அடையாளம் கண்டு கொண்டனர். ''இவன் நம்மை அடக்கி ஆளலாம் என்று கனவுகள் காண்கிறான். இந்தக் கனவுலக மன்னனை நான் இன்று ஒழித்துக் கட்டிவிடலாம்,'' என்று அவர்கள் தீர்மானித்தனர்.

ஜோசப் நெருங்கி வந்ததும், அவர்கள் அவன் மீது பாய்ந்து, அவனைக் கொடுமைப்படுத்தினர். அவனுடைய சட்டையைக் கிழித்தனர். பிறகு அவனை ஒருபள்ளத்திற்குள் தள்ளினர்.

சிறிது நேரத்தில் அந்த வழியாக அரபு நாட்டு வணிகர்கள் சிலர் வந்தனர். அவர்கள் கூட்டமாக ஒட்டகங்கள் மீதேறிப் பயணம் செய்துகொண்டிருந்தனர். சகோதரர்கள் ஜோசப்பைப் பள்ளத்திலிருந்து வெளியே எடுத்து அந்த வணிகர்களிடம் ஓர் அடிமையாக விற்றுவிட்டனர். ஜோசப்பை அழைத்துக் கொண்டு ஒட்டகக் கூட்டம் நகர்ந்தது. தன் அருமைத் தந்தையைப் பிரிந்து செல்ல வேண்டியிருக்கிறதே என்று ஜோசப் மிக வருந்தினான்.

அப்பாவின் கேள்விகளுக்குப்பதில் சொல்ல வேண்டுமல்லவா? ஆகவே, சகோதரர்கள் ஓர் ஆட்டைக் கொன்றனர். அதன் இரத்தத்தில் ஜோசப்பின் பட்டாடையை நனைத்தனர். அதை எடுத்துக்கொண்டு வீடு திரும்பினர். நேரே அப்பாவிடம் சென்று, ''அப்பா, நாங்கள் திரும்பி வரும்போது இந்த ஆடையை வழியில் கண்டோம்!'' என்று சொல்லி, அதைக் கொடுத்தனர்.

அதைக் கண்டதும், ''ஐயோ! இது ஜோசப்பின் சட்டை ஆயிற்றே? ஏதோ ஒரு கொடிய மிருகம் என் பிள்ளையை விழுங்கியிருக்கிறது!'' என்று சொல்லி அவர் கதறினார். மறைந்து போன பிள்ளையை நினைத்து, நினைத்து அவர் வருந்தினார். மற்ற பிள்ளைகளால் அவருடைய வருத்தத்தைக் குறைக்க முடியவில்லை.

அப்பாவின் நிலைக்குப் பிள்ளைகள் இரங்கினர். தம்பிக்குத் தாங்கள் இழைத்த கொடுமையை உணர்ந்து வருந்தினர். 'ஜோசப் உயிரோடுதான் இருக்கிறான்; ஓர் அடிமையாக எகிப்தைநோக்கிப் போய்க் கொண்டிருக்கிறான்,' என்று தெரிந்திருந்தாலும், அதை அப்பாவிடம் சொல்லவில்லை. ஆகவே, அவர்களாலும் நிம்மதியாக

இருக்க முடியவில்லை.

இரு நதிகள் பாயும் மெசபடோமியாவுக்கும், நைல் நதி பாயும் எகிப்துக்கும் இடையில் கானான் நாடு இருந்தது. அந்த இரு நாடுகளுக்கு இடையே வணிகம் செய்துவந்த அரபு நாட்டவர்களிடம் தான் ஜோசப் விற்கப்பட்டான். அவர்கள் வாசனைப்பொருள், தங்க நகைகள் முதலியவற்றை எகிப்துக்கு எடுத்துச் சென்றனர். அங்கிருந்து பட்டு, தந்தம் முதலிய பொருள்களைக் கொள்முதல் செய்து தங்கள் நாட்டில் விற்றனர். ஒவ்வொரு முறையும் அவர்கள் கானான் நாட்டைக் கடந்துதான் செல்ல வேண்டும்.

அந்த வணிகர்கள் தான் ஜோசப்பை ஓர் அடிமையாக விலை கொடுத்து வாங்கினர். ஜோசப் இளைஞன். பலசாலி, மேலும் தோற்றத்தில் அழகாகவும் இருந்தான். ஆகவே, எகிப்து நாட்டு அடிமைச் சந்தையில் அவனை விற்றால், நல்ல விலை கிடைக்கும் என்று அவர்கள் எண்ணினர்.

அப்போது எகிப்து நாட்டைப் பார்வோன் என்ற அரசன் ஆண்டான். அவனுக்குப் போத்திபார் என்று ஒரு தளபதி. அந்தத் தளபதிக்குத் தன் வீட்டு வேலைகளைச் செய்ய ஓர் அடிமை தேவைப்பட்டது. வணிகர் ஜோசப்பைத் தளபதியிடம் விற்று, நல்ல லாபம் அடைந்தனர்.

தன் தாய்நாடான கானானைப்போல அல்லாமல் எகிப்து நாடு முற்றிலும் மாறுபட்டிருப்பதை ஜோசப் கண்டான். பிறந்தது முதல் கூடாரங்களில்தான் அவன் வசித்திருக்கிறான். ஆனால் எகிப்தியர்கள் கல்லாலும், களி மண்ணால் கட்டப்பட்ட பெரிய இல்லங்களில் வசித்தனர். அழகிய உடைகளை அணிந்தனர். அரசன் பார்வோன் வசதியான அரண்மனையில் வாழ்ந்தான். எகிப்தியர்கள் தங்கள் கடவுளர்க்கு வானளாவக் கோயில்கள் எழுப்பியிருந்தனர். நைல் நதிக் கரையில் இருந்த பிரம்மாண்டமான பிரமிட்டுகளைப் பார்த்துப் பார்த்து ஜோசப் பிரமித்தான். ஆயிரக்கணக்கான மனிதர்கள் உழைத்து எழுப்பிய அந்தப் பிரமிட்டுகளின் உள்ளே எகிப்தின் பிரதான



அண்ணன்: ஏன் பாமா, நான் ட்ரவுசர் பாக்கெட்லே மசால்வடை வச்சிருக்கிற சங்கதி உனக்கு எப்படித் தெரிஞ்சுது?''

அரசர்கள் புதைக்கப்பட்டிருப்பதை அறிந்து வியந்தான்.

புதிய நாட்டிற்கு வந்திருந்த போதிலும், ஜோசப் தன் கடமைகளை ஒழுங்காகச் செய்தான். சிறு வயது முதல் அப்பா தனக்குக் கூறிய அறிவுரைகளை எல்லாம் நினைவுகூர்ந்து அதன்படி நடந்தான். இனிமையாகப் பேசினான். இனிமையாகப் பழகினான். ஆகவே, அடிமையாக இருந்த போதிலும் அவனை எல்லோருக்கும் பிடித்திருந்தது. அடிக்கடி அவன் மனம் தந்தையை நினைத்து ஏங்கும். அவரை எப்படியாவது வரவழைத்துத் தன்னுடன் சேர்த்துக் கொள்ள வேண்டுமென ஆசைப்படுவான்.

ஓர் இரவு பார்வோன் அரசன் ஒரு கனவு கண்டான். கனவில் ஒரு புல்வெளி. அங்கு ஏழு கொழுத்த பசுக்கள் மேய்ந்து கொண்டிருந்தன. அப்போது சில விசித்திர உருவங்கள் ஆற்று வெள்ளத்திலிருந்து மேலே எழுந்தன. அவை ஏழு மெலிந்த பசுக்களாக உருவெடுத்தன. திடீரென அவை ஏழு கொழுத்த பசுக்களையும் விழுங்கி ஏப்பம் விட்டன!

பார்வோன் திடுக்கிட்டு எழுந்தான். அந்த அதிசயக் கனவை நினைத்துக் கொண்டே அவன் தூங்கி விட்டான். மறுபடியும் ஒரு கனவு வந்தது. கனவில் ஒரு கோதுமைப் பயிரைக்



கண்டான். அதில் ஏழு கதிர்கள் முளைத்து, தானியங்கள் முற்றி, அது செழுமையாக நின்றது. அதன் அருகிலேயே இன்னொரு கோதுமைப் பயிர் தோன்றியது. அதிலிருந்த கதிர்களில் தானியங்கள் இல்லாமல் அது காய்ந்துசாவியாகநின்றது.திடீரெனச் சாவியான கதிர்கள் செழுமையான கதிர்களை விழுங்கி ஏப்பம் விட்டன!

அரசனுக்கு அந்தக் கனவின் பொருள் விளங்கவில்லை. சபையிலிருந்த அறிஞர்களைக் கேட்டான். அவர்களாலும் சொல்ல முடியவில்லை. அதன் உட்பொருளை அறிய வேண்டும் என்ற எண்ணம் அரசனை வாட்டிக் கொண்டே இருந்தது.

அரண்மனைப்பணியாளன் ஒருவன் முன் வந்து, "அரசே! நம் தலைநகருக்குக்கானான் நாட்டிலிருந்து ஓர் அடிமை வந்திருக்கிறான். ஜோசப் என்று பெயர். கனவுகளுக்குப் பலன் சொல்லுவதில் அவன் வல்லவன். உங்களுடைய விசித்திரக் கனவின் பொருளையும் ஒருவேளை அவனால் விளக்க முடியும்!" என்று பணிவோடு சொன்னான்.

"அழைத்து வாருங்கள் அவனை!" என்று அரசன் கட்டளையிட்டான்.

எகிப்தின் மாபெரும் அரசனான பார்வோனைத் தரிசிப்பதற்குச் சாதாரண உடையில் போகலாமா? விலை உயர்ந்த ஆடைகளை ஜோசப்பிற்குக் கொடுத்தனர். அணிந்து கொண்டான் அரண்மனைக்கு கூப்பிட்டனர். போனான்.

பார்வோன் அரசன் கம்பீரமாக அரியணையில் வீற்றிருந்தான். அறிஞர்களும், படைவீரர்களும் சபையில் குழுமியிருந்தனர். ஜோசப் அரசனின் முன்னால் நிறுத்தப்பட்டான். அரசன் விரிவாகத் தன் கனவை ஜோசப்பிற்கு உரைத்தான். எகிப்திற்கு அடிமையாக வந்துள்ள ஜோசப் பணிவோடும், கவனமாகவும் அதைக் கேட்டான்.

அரசன் பேசி முடித்ததும், ஜோசப் அந்தக் கனவின் பொருளை விளக்கத் தொடங்கினான். "அரசே! உங்களை எச்சரிக்கை செய்யவே அந்தக் கனவு வந்துள்ளது. எகிப்து நாட்டில் ஏழாண்டுகளுக்கு வளம் கொழிக்கும்.


அடுத்த ஏழு ஆண்டுகளுக்குப் பஞ்சம் தாண்டவமாடும். பஞ்ச காலத்தில் மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமானால், வளமான காலத்திலேயே உணவுத் தானியங்களைச் சேகரித்து வைப்பது விவேகமான செயலாகும்!" என்று ஜோசப் விளக்கினான்.

ஜோசப்பின் புத்தி கூர்மையையும், பணிவான பதிலையும் கண்டு அரசன் மகிழ்ந்தான். தன் முத்திரை மோதிரத்தை எடுத்து ஜோசப்பின் விரலில் அணிவித்தான். பிறகு, "ஜோசப்! இன்று முதல் நீ அடிமை இல்லை. எகிப்தின் ஆளுநராக உன்னை நியமிக்கிறேன். தானியங்களைச் சேகரிக்கும் பணியும் உன்னுடைய மேற்பார்வையிலேயே நடக்கட்டும். மக்கள் எனக்கு வணங்குவது போல உனக்கும் முழந்தாளிட்டு வணங்குவார்களாக!" என்று அரசன் ஆணையிட்டான்.

அணிவதற்கு அருமையான பட்டாடை, வசிப்பதற்கு வசதியான அரண்மனை, போக்குவரத்திற்கு ஓர் அழகான ரதம்—ஆகியவற்றை அரசன் ஜோசப்பிற்கு அளித்தான். ஜோசப்பின் சந்தோஷத்திற்கு அளவே இல்லை. அவன் செய்வதற்கு ஏராளமான வேலைகள் இருந்தன. அவற்றை அவன் முழுமனத்தோடு நிறைவேற்றினான்.

உணவுத் தானியங்களை வாங்கிக் களஞ்சியங்களில் சேமித்து வைக்க ஜோசப் ஒரு விரிவான திட்டம் தீட்டினான். நாடு முழுவதும் பயணம் செய்து, நடவடிக்கைகளை அவனே நேரில் மேற்பார்வை செய்தான். அயராது உழைத்தான். வளமான ஏழு ஆண்டுகளில் களஞ்சியங்களெல்லாம் நிரம்பி வழிந்தன. எதிர்காலத்தில் பல ஆண்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவுக்குத் தானியங்கள் குவிந்தன.

ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு ஜோசப் சொன்னதுபோலவே எகிப்து நாட்டில் பஞ்சம் தோன்றியது. நைல் நதியில் வழக்கமான வெள்ளப்பெருக்கு உண்டாகவில்லை. வெள்ளம் பொங்கி இரு மருங்குகளிலும் இருந்த நிலங்களை வளப்படுத்தவில்லை. வெய்யில் காய்ந்தது. பயிர்பச்சை எதுவும் முளைக்கவில்லை. எங்கிருந்தாவது, எப்படியாவது தானியங்களை வாங்காவிட்டால் விரைவில் பட்டினியால் சாக வேண்



டியிருக்கும் என்று மக்கள் பயந்தனர்.

மக்கள் அரசனிடம் சென்று உண்ண உணவு கேட்டனர். "ஜோசப்பிடம் செல்லுங்கள்! அவன் ஆணைப்படி நடவுங்கள்!" என்று அரசன் சொன்னான்.

ஜோசப்பிடம் சென்று மக்கள் முறையிட்டனர். அவர்களுக்கெல்லாம் நியாயவிலையில் தானியம் வழங்க அவன் ஏற்பாடுகள் செய்தான். அரசனும், மக்களும் ஜோசப்பின் தீர்க்க தரிசனத்தையும், நிர்வாகத் திறமையையும் கண்டு வியந்தனர். அவனை மனமாரப் பாராட்டினர்.

எகிப்து நாட்டை மட்டும் உணவுப் பஞ்சம் பாதிக்கவில்லை. அண்டை அயல் நாடுகளையும் அது பாதித்தது. அங்கிருந்த மக்களும் உண்ண உணவின்றித் தவித்தனர். அவர்கள் பஞ்சத்தை எதிர்பார்க்கவும் இல்லை. எச்சரிக்கை நடவடிக்கை எடுக்கவும் இல்லை. எனவே, மக்கள் பலர் பட்டினியால் மாண்டனர்.

ஜோசப்பின் அப்பாவும், குடும்பத்தினரும் வாழ்ந்த கானான் நாட்டிலும் வானம்பொய்த்தது. மழைசுருங்கியது. பூமி வறண்டது. புற்கள் காய்ந்தன. உணவு கிடைக்காமல் மக்கள் வருந்தினர். ஆடு மாடுகள் கூட்டம் கூட்டமாக இறக்கத் தொடங்கின. செய்வது அறியாமல் மக்கள் திகைத்தனர்.

"எகிப்தில் ஏராளமாகத் தானியம் கிடைக்கிறது!" என்ற இனிய செய்தி தலைவர் ஜேகப்பின் செவிகளுக்கு எட்டியது. உடனே அவர், "எகிப்துக்கு விரையுங்கள். என்ன விலை கொடுத்தாவது தானிய மூட்டைகளை வாங்கி வாருங்கள்!" என்று தன் பிள்ளைகளைப் பணித்தார்.

சகோதரர்கள் எகிப்தை அடைந்தனர். தானிய விற்பனையை அந்நாட்டு ஆளுநரே மேற்பார்வை செய்ததால் சகோதரர்கள் அவருக்கு முழந்தாளிட்டுப் பணிந்தனர். தங்கள் சொந்தத் தம்பியான ஜோசப்பிற்குத்தான் வணக்கம் செலுத்துகிறோம் என்று அவர்களுக்குத் தெரியவில்லை. ஏனென்றால் ஓர் ஆளுநருக்கு வேண்டிய கம்பீரமான ஆடைகளை அணிந்து கொண்டு, ஓர் எகிப்தியனைப்போல அவன் தோன்றினான். ஆனால் ஜோசப்பிற்கு அவர்களை உடனே தெரிந்து விட்டது.

ஜோசப்பின் மனத்தில் ஒரு சிறு போராட்டம். தீங்கிழைத்த சகோதரர்களைப் பழிக்குப் பழி வாங்குவதா? அல்லது ஆபத்து என்று அண்டி வந்துள்ள அவர்களை ஆதரிப்பதா?— அவன் ஒரு கணம் யோசித்தான். தன் பிரிவினால் தன் தந்தைக்கு ஏற்பட்டிருக்கும் மனக் கஷ்டங்களைப் பற்றிச் சிந்தித்தான். சிறுவயதில் அவர் கூறிய சொற்கள் நினைவுக்கு வந்தன. உடனே தன் சகோதரர்களை மனதார அவன் மன்னித்தான்.

தான் யாரென்று ஜோசப் வெளியே காட்டிக் கொள்ளவில்லை. ஆனாலும், அவர்களுக்கு வேண்டிய தானியங்களைக் கொடுத்து, அவர்கள் கொடுத்த காசுகளையும் அந்த மூட்டைகளின் உள்ளேயே போட்டு அனுப்பி வைத்தான்.

பஞ்சம் நீடித்தது. ஜோசப்பின் சகோதரர் உணவு தேடி மறுபடியும் எகிப்துக்கு வந்தனர். தான் யாரென்பதை வெளியிடாமலேயே ஜோசப் அவர்கள் கேட்ட உதவிகளைச் செய்தான். மேலும், அவர்களுடைய தந்தையைப் பற்றியும், குடும்பத்தினர் நலனைப் பற்றியும் அக்கறையோடு விசாரித்தான்.

மூன்றாம் முறையாகச் சகோதரர்கள் எகிப்துக்கு வந்தபோது, ஜோசப்பினால் தன் ரகசியத்தைக் காப்பாற்ற முடியவில்லை. அவனுடைய அன்புமனம் உருகித் தவித்தது.

ஜோசப் பணியாளர்களை வெளியே போகுமாறு உத்தரவிட்டான். பிறகு தன் சகோதரர்களிடம் வந்து, "உங்கள் சகோதரனை ஜோசப்பை ஓர் அடிமையாக நீங்கள் எகிப்து நாட்டுக்கு விற்றீர்களே! அது நான் தான்!" என்று சொன்னான்.

சகோதரர்கள் திடுக்கிட்டனர் 'எகிப்து நாட்டு ஆளுநர் தங்களுக்கு மரண தண்டனை கொடுப்பாரோ?' என்று எண்ணி அவர்கள் அஞ்சி நடுங்கினர்.

"பயப்படாதீர்கள்! உங்களுக்கு

எந்தவிதத் தீமையும் செய்யமாட்டேன். இந்தப் பஞ்சகாலத்தில் உங்கள் உயிர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற காரணத்திற்காகவே ஆண்டவன் என்னை இங்கு அனுப்பியிருக்கவேண்டும். இப்போது இந்த எகிப்து முழுவதற்கும் ஆண்டவன் என்னைத் தலைவனுக்கி உள்ளார். இன்னும் ஐந்து ஆண்டுகளுக்குப் பஞ்சம் தொடரப் போகிறது. நாம் இந்தச் செழிப்பான

அவர்களுடைய பேச்சை முதலில் அப்பா நம்பவில்லை. ஜோசப் தங்களிடம் பேசிய விஷயங்களை எல்லாம் சொல்லி, அவன் அனுப்பிய பரிசுகளைக் காட்டிய பிறகுதான் ஜேகப்பிற்கு நம்பிக்கை பிறந்தது. அவர் தன் அன்பு மகனைக் காணத்துடி துடித்தார்.

ஜேகப்பிற்குத் தள்ளாத வயது. அவரால் நெடுந் தூரப் பயணத்தைத் தாங்க முடியாது. இருந்தபோதிலும்,



நாட்டிலேயே ஒன்று கூடி வாழலாம். அப்பாவையும், மற்றவர்களையும் அழைத்துக் கொண்டு வாருங்கள்!'' என்று ஜோசப் அன்புக் கட்டளையிட்டான். செய்தி அறிந்த பார்வோன் அரசன் ஜோசப்பின் தந்தையும், சுற்றத்தினர்களும் எகிப்துக்கு வருவதற்கு எல்லா வசதிகளையும் அளிக்குமாறு ஆணையிட்டான்.

சகோதரர்கள் ஆவலோடு அப்பாவிடம் சென்றனர். செய்தி உரைத்தனர். ஜோசப் உயிரோடு இருப்பதையும், எகிப்தின் ஆளுநராக இருப்பதையும் அவர்கள் எடுத்துக் கூறினர்.

ஜேகப்பின் தலைமையில் கானான் மக்கள் கூட்டமாக எகிப்தை நோக்கிப் பயணம் செய்தனர்.

ஜோசப் தன் ரதத்தில் ஏறி வந்து அப்பாவைஎதிர்கொண்டழைத்தான். சகோதரர்களையும், சுற்றத்தாரையும் அன்போடு வரவேற்றான். பிரிந்தவர் கூடினர். ஜேகப்புக்கும், அவருடைய இனத்தவருக்கும் பார்வோன் அரசன் நல்ல நிலங்களை மான்யமாக வழங்கினான். முதுமைப் பருவத்தில் தனக்குச் சந்தோஷமான வாழ்வை அளித்த ஆண்டவனுக்கு ஜேகப் நன்றி செலுத்தினார்.

முட்டை ஓடுகளில் பொம்மைகள்!


தேவையான பொருட்கள்:

இரண்டு முட்டை ஓடுகள், சிறிய காகிதத் துண்டு, ஒட்டும் பிசின், வாட்டர் கலர் பெட்டி (Water Colour box) முதலியவை.


செய்முறை:

உடைத்து கரு எடுக்கப்பட்ட பின் உள்ள முட்டைகள் இரண்டை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்குங்கள். பின் முட்டைக்கேற்றவாறு சிறிய காகிதத் துண்டில் பசையை நன்றாகத் தடவி இரண்டு முட்டை ஓடுகளும் நன்றாகப் பொருந்தும்படி ஒட்டுங்கள். அதன் பிறகு, மேல் முட்டை ஓட்டில் முகம், கண், மூக்கு, வாய், முடி முதலியவற்றை வரைந்து கொள்ளுங்கள். கீழே உள்ள முட்டை ஓட்டில் கைகளையும் உடைகளையும் வரையலாம். பின்பு அதற்கேற்றவாறு வாட்டர் கலரில், வர்ணம் அடிக்க வேண்டும். நாம் செய்வது இராஜா, இராணிப் பொம்மைகளாக இருந்தால், மணிமுடி முதலியவற்றைத் தாளில் வரைந்து அதை வெட்டி ஒட்டலாம். மூன்று முட்டை ஓடுகளைப் பயன்படுத்தி 'கூடைக்காரி' செய்யலாம். பஞ்சைப் பயன்படுத்தி 'கிறிஸ்துமஸ் தாத்தா' செய்யலாம். கிறிஸ்துமஸ் தாத்தாவின் தலையில் தொப்பி வைக்க தாளைக் கூம்பு போலச் செய்து ஒட்டி விடலாம். இவைகளைச் செய்வதற்கு நேரமும், செலவும் குறைவு. பார்க்கவும் அழகாக இருக்கும்.

— க. ஜெயஜோதி
(3589)





ஒரு சமயம், விசுவாமித்திரர் தமது யாத்திரைகளின் போது ஒரு நகரத்தை அடைந்தார்....
இது என்ன நகரம்?
தங்கமாபுரி!
அரசன் தங்கேசுவரன்; அரசி சுவர்ண காந்த ரூபி!
அப்படியா? அரசனைச் சீக்கிரம் வரச் சொல்!
அரசன் வர சற்றுத்தாமதமாக, விசுவாமித்ரருக்குக் கோபம் வந்து விட்டது....
ராஜரிஷியாகிய என்னை உடனே வரவேற்காமல் இப்படியா காத்திருக்கச் செய்வது? இந்த நகரிலுள்ள அத்தனைபேரும் செயலற்றுப் போவார்கள்!
தங்கபுரியைத் தேடிய விக்கிரமாதித்தன்
கதை: ஆனந்தி படம்: வினு
முனிவரின் சாபம் உடனே பலித்தது......
...மக்கள் நின்ற இடத்தில் அல்லது உட்கார்ந்த இடத்தில் அப்படியே சிலையானார்கள்!....



ஆனால் அரசி சுவர்ண காந்தரூபி மட்டும் ஓடோடி வந்தாள்...
இவள் ஆழ்ந்த பக்தியும் நல் ஒழுக்கங்களும் உடைய பதிவிரதை! அதனால்-தான் என் சாபத்தையும் மீறி ஓடி வர முடிகிறது!
சுவாமி! காப்பாற்றுங்கள்!
சாபத்தை மாற்ற முடியாது: ஆனால் என்ன வரம் வேண்டுமோ, கேள்!
மறு பிறவியிலும் இதே நாயகனை நான் அடைய வேண்டும்; இந்த ஜன்ம நினைவு மாறாமல் தினமும் இந்த ஊர் கோயிலுக்கு வந்து நான் பூஜிக்க வேண்டும்!
அப்படியே ஆகட்டும்!
பிரதிஷ்டாபுரி அரசன் சற்குணனுக்கு மகளாகப் பிறந்தாள், சுவர்ண காந்தரூபி.
இளவரசிக்கு சஞ்சீவி மடந்தை என்று பெயரிடுவோம்!
சஞ்சீவி மடந்தைக்குப் பத்து வயதானபோது....
நான் தங்கமாபுரி அரசியான சுவர்ண காந்த ரூபி அல்லவா....!


அன்று இரவு அரண்மனை நிலா முற்றத்தில் தெய்வக் குதிரை ஒன்று வந்திறங்கியது....
ஆ! முனிவர் வரம் தந்தது போலவே கோயிலுக்குப் போய் வழிபட, குதிரை வருகிறது...
குதிரை, சஞ்சீவி மடந்தையைச் சுமந்து கொண்டு தங்கமாபுரிக்குப் பறந்தது....
தங்கமாபுரியில் சுந்தரமூர்த்தி சுவாமி சந்நிதியில்...
இறைவா! பூர்வ ஜன்ம நினைவு இருக்கிறது; உங்களை வணங்கும் பாக்கியமும் கிடைத்தது; விசுவாமித்ரர் தந்த இன்னொரு வரமும் நிறைவேற வேண்டும்....
தங்கேசுவரரையே மீண்டும் எனது மணாளனாக அடைய வேண்டும்.
நாள் தோறும் நள்ளிரவில் சஞ்சீவி மடந்தை தங்கமாபுரிக்குச் சென்று வந்தாள்....





எட்டு ஆண்டுகள் ஓடிச் சென்றன...
கண்ணே! உனக்குப் பதினெட்டு வயதாகி விட்டது..... உனக்கேற்ற மணாளனைத் தேடப் போகிறோம்...
தங்கமாபுரி என்று ஒரு நகரம் இருக்கிறது. அதைப் பார்த்து விட்டு வந்து சொல்பவரைத்தான் நான் மணந்து கொள்வேன்!
அரசனும் அரசியும் திகைத்தனர்.
சஞ்சீவி மடந்தை! இது என்ன பிடிவாதம்!
பிடிவாதம் இல்லை, தெய்வ கட்டளை! நான் தினந்தோறும் கனவில் தங்கமாபுரியைக் காண்கிறேன்!
மன்னன் முரசறையச் செய்தான்.....
தங்கமாபுரி நகரைக் கண்டு பிடித்து, அதன் அதிசயத்தை அறிந்து வந்து சொல்பவருக்கு இளவரசி மாலையிடுவாள்!
இளவரசியை மணக்க யாருக்குத்தான் ஆசை இராது? பல இளைஞர்கள் புறப்பட்டார்கள், தங்கமாபுரியைத் தேடி...
நான் கிழக்கே போகிறேன்...
நான் தெற்கு...
நான் வடமேற்கே செல்கிறேன்!...




சில காலம் சென்று... ஆதிசேஷன் என்பவன் அரண்மனை வாசலில் ஆராய்ச்சி மணியை அடித்தான்...
அட! அரண்மனைப் புரோகிதர் புதல்வன்!
தங்கமாபுரியைப் பார்த்து விட்டேன்!
சஞ்சீவி மடந்தையிடம் தான் பார்த்ததைக் கூறினான்...
தங்கமாபுரி, கிழக்கே ஆயிரம் யோசனை தூரத்தில் இருக்கிறது. தங்க மாளிகைகள்! வைரத் தூண்கள்! பல தேச வியாபாரிகள்...
போதும் நிறுத்து; நீ தங்கமாபுரியைப் பார்க்கவேயில்லை! ஓடிப்போ! தாமதித்தால் தண்டனை பெறுவாய்!
ஆதிசேஷன் சபதம் செய்தான்...
எப்படியும் தங்கமாபுரியைக் கண்டு பிடித்து, சஞ்சீவி மடந்தையைக் கல்யாணம் செய்து கொள்வேன்!
ஆதிசேஷன் அலைந்து திரிந்தான்...
தங்கமாபுரிக்கு யாராவது வழி சொல்வார்களா?
விக்கிரமாதித்தனிடம் போ! அவனுக்கே வழி தெரியவில்லையென்றால் வேறு யாருக்குமே தெரியாது!


விக்கிரமாதித்தன் பெரும் புகழும் பெற்று ஆண்டு வந்த உஜ்ஜயினியை அடைந்தான் ஆதிசேஷன்... தன் கதையைக் கூறினான், மன்னனிடம்.
தாங்கள்தான் உதவ வேண்டும்...
ஆகட்டும்!
ஆதிசேஷனின் கதை விக்கிரமாதித்தனின் ஆவலைத் தூண்டி, சவாலாக அமைய, அவன் தங்கபுரியைத் தேடிப்புறப்பட்டான்...
வேதாளத்தின் உதவியை நாடலாம்...
விக்கிரமாதித்தன் ஒரு வேதாளத்தை அடக்கியதால் அது அவன் இட்ட பணிகளைச் செய்து வந்தது....
தங்கமாபுரி எங்கே இருக்கிறது?
இந்தக் காட்டில் சில ரிஷிகள் தவம் செய்கிறார்கள். அவர்களைக் கேளுங்கள்!
விக்கிரமாதித்தன் முனிவர்களைக் கேட்க...
இந்தக் காட்டின் மத்தியில் ஓர் ஆலமரத்தில் அண்டபேரண்டப் பறவைகள் இருக்கின்றன. அவை போகாத இடமில்லை...


வேதாளம் விக்கிரமாதித்தனைச் சுமந்து சென்றது....
முனிவர்கள் குறிப்பிட்ட இடத்தில்...
என்ன அழகான பறவைகள்! இவை பேசுவதை எப்படி கேட்பது?
வேதாளம் யோசனை கூறியது....
உன்னை வண்டாக மாற்றி விடுகிறேன்! அதன் கொண்டையில் ஒட்டிக் கொண்டு கேளுங்கள்!
விக்கிரமாதித்தன் அதற்கு உடன்பட...
இளவரசி சஞ்சீவி மடந்தைக்குக் கல்யாணமே ஆகாது!
ஆமாமாம்! மூன்று மலைகளையும் மூன்று கடல்களையும் கடந்து எந்த மனிதனால் தங்கமாபுரியைப் பார்த்து வர முடியும்?
நாளைக்கு நாம் அந்த அதிசய நகரைப் பார்க்கப் புறப்படுகிறோம்!
நான் வண்டாக உன் மீது ஒட்டிக் கொண்டு உடன் வருவேன்!
பல தினங்கள் பறந்த பின்...
அதோ தங்கமாபுரி!
ஆகா! என்ன அழகான நகர்!



ஒரு மதில் மீது பறவைகள் அமர்ந்தன... விக்கிரமாதித்தன் சுய ரூபம் அடைந்து...
பறவைகளே! நன்றி!
எங்களுக்கே தெரியாமல் எங்களுடன் வந்து விட்டாயே! கெட்டிக்காரன்தான்!
பறவைகள் தங்கமாபுரியின் கதையை விக்கிரமாதித்தனுக்குக் கூறின...
நாங்கள் போய் வருகிறோம். நள்ளிரவில் விழித்திரு!
விக்கிரமாதித்தன் ஊரைச் சுற்றிப் பார்த்தான்...
சொர்ணகாந்தருபி, சஞ்சீவி மடந்தையாகவும் தங்கேசுவரன், ஆதிசேஷனாகவும் பிறந்திருக்கிறார்கள். அவர்களைச் சேர்த்து வைக்க வேண்டும்...
பறவைகளைப் பின்பற்றிப் பறந்து வந்திருந்த வேதாளம், விக்கிரமாதித்தனின் பசி ஆற்றியது...
பழங்கள் சாப்பிடுங்கள்!
உன் உதவியின்றி என்னால் என்ன செய்ய முடியும்?
நள்ளிரவில் விக்கிரமாதித்தன் மறைந்து நிற்க, தெய்வப் புரவியில் பறந்து வந்தாள் சஞ்சீவி மடந்தை!
இதென்ன அதிசயம்!


சஞ்சீவி மடந்தை குதிரையை விட்டிறங்கி பூஜை திரவியங்களுடன் கோயிலுக்குள் நுழைந்தாள்...
விக்கிரமாதித்தன் ஒரு தூணுக்குப் பின் ஒளிந்து கொள்ள, சஞ்சீவி மடந்தை விளக்கேற்றி...
எங்கள் குலதெய்வமே, சாப விமோசனம் அருள வேண்டும். இந்த நகரம் உயிர் பெற்று எழ வேண்டும்...
தெய்வக்குதிரை சஞ்சீவி மடந்தை பின்னால் நடந்து செல்ல, அரண்மனையை அடைந்தாள்...
இவள் சஞ்சீவி மடந்தையாகத்தான் இருக்க வேண்டும்!
அந்தப்புரத்தில் வீணை வாசித்தாள் சஞ்சீவி மடந்தை...


பின்னர் வெளியே வந்து காத்திருக்கும் குதிரைமேல் ஏறினாள்...
அடடா! அழகு, பணிவு, அறிவு, துணிவு, கற்பு அனைத்தும் உடையவள் இவள்...
குதிரை ஆகாயத்தில் பறந்து சென்றது...
தங்கமா புரியின் அதிசயத்தைப் பார்த்தாகி விட்டது...
வேதாளம் விக்கிரமாதித் தனைச் சுமந்து பறந்தது...
பிரதிஷ்டாபுரிக்குப் போய் ஆதிசேஷன் வீட்டைக் கண்டு பிடிக்க வேண்டும்....
ஆதிசேஷன் வீட்டை அடைந்தான் விக்கிரமாதித்தன்...
வரவேணும், வரவேணும்... மன்னரை வரவேற்கும் பாக்கியம் கிடைத்ததே!
ஆதிசேஷா! கண்டு பிடித்து விட்டேன் தங்கமாபுரியை!
உணவருந்தி, இளைப்பாறி விவரமாகச் சொல்லுங்கள்!


ஆதிசேஷனின் பெற்றோர் உபசரிக்க விக்கிரமாதித்தன் பசி ஆற அமர்ந்தான்...
தங்கள் மகன் அரசனாகப் போகிறான்!
தான் கண்டதை யெல்லாம் கூறி விடை பெற்றான் விக்கிரமாதித்தன்.
ஆதிசேஷா! தங்க மாபுரியின் சாபம் தீரும் காலம் வந்து விட்டது. கிளம்பு! வெற்றி உன் பக்கம்!
ஆதிசேஷன் அரண்மனைக்குச் சென்று ஆராய்ச்சி மணி அடிக்க....
ஓ! மறுபடி ஆதிசேஷனா!
மன்னருக்குப் பிடிக்கவில்லை...
ஒரு முறைதான் தோற்று ஓடினானே, போதாதா!
மணி அடிப்பதை நிறுத்த மாட்டேன் என்கிறான். ஒரே பிடிவாதம்!
சஞ்சீவி மடந்தை குறுக்கிட்டு...
அப்பா! இன்னொரு வாய்ப்புக் கொடுத்துத்தான் பார்ப்போமே...


அரசன் அனுமதி அளிக்க அவைக்கு வந்த ஆதிசேஷன்...
அரசே! தங்கள் குமாரி தினமும் இரவில் தெய்வப்புரவியில் ஏறி, தங்கமாபுரி சென்று, சுந்தரமூர்த்தி கோயிலில் பூஜை செய்கிறாள்!
மன்னன் கோபத்துடன்...
என்ன உளறுகிறாய்?
சஞ்சீவி மடந்தை தந்தையைச் சமாதானப் படுத்தினாள்....
அப்பா! அவர் கூறுவது உண்மையே! விவரமாகச் சொல்கிறேன், கேளுங்கள்....
இவரே முற்பிறவியில் தங்கமாபுரியின் அரசரான தங்கேசுவரர். நான் சொர்ணகாந்த ரூபி என்ற பெயரில் இவர் மனைவியாக இருந்தேன்...
மகள் கூறிய அற்புதக் கதையைக் கேட்டு பெற்றோர் ஆச்சர்யமடைந்தார்கள்...
என் கண்ணே!
எப்படியோ, எல்லாம் நல்லவிதமாக முடிய வேண்டும்!


சஞ்சீவிமடந்தையும் ஆதிசேஷனும் அரசனையும் அரசியையும் வணங்கினார்கள்...
தீர்க்காயுசுடன் சந்தோஷமாக இருங்கள்!
மகளின் திருமணத்தைச் சிறப்பாக நடத்திவைத்தார் சற்குணராஜன்.
மணமக்கள் ஊர்வலம் வந்தனர்...
வாழ்க!
வாழ்க!
மணமக்கள் விக்கிரமாதித்தனைப் போய்ப் பார்த்தார்கள்......
உங்கள் உதவியின்றி நாங்கள் ஒன்று சேர்ந்திருக்க முடியாது...
மாகாளி அருளால் சீரும் சிறப்புமாக வாழ்வீர்கள்!
அரசர்க்கரசே! தங்கமா புரியின் சாபம் நீங்கவும் நீங்கள்தான் உதவ வேண்டும்.


விக்கிரமாதித்தன் பரிவுடன்...
கவலைப்படாதே! வேதாளத்தின் உதவியுடன் விசுவாமித்திர முனிவரைத் தரிசிக்கலாம்...
வேதாளம் மூவரையும் சுமந்து கொண்டு இமயமலைச் சாரலுக்குச் சென்றது...
விசுவாமித்திரர் ஆசிரமத்தை அடைந்தது....
ராஜரிஷியே! விக்கிரமாதித்தன் வணங்குகிறேன்!
மாகாளியின் அருளைப் பெற்ற நீ மேலும் புகழுடன் வாழ்வாய்... வந்த காரணம்...?
சஞ்சீவி மடந்தையும் ஆதிசேஷனும் முனிவர் காலில் விழுந்து வணங்க....
ஓ! புரிந்தது! சொர்ண காந்தருபி! நீ பதிவிரதையானதால் நீ விரும்பிய படியே அதே கணவரை இப்பிறவியிலும் அடைந்தாய்!...


சுவாமி! மனமிரங்கி, எங்கள் நகரம் முன்போல் ஆகும்படி வரம் அருள வேண்டும்...
அப்படியே ஆகட்டும்! அன்றுபோலவே அனைவரும் உயிர் பெற்று எழு வார்கள்! நீங்கள் இருவரும் வெகு காலம் அரசாள்வீர்கள்!
மூவரும் தங்கமாபுரியை அடைய, மக்கள் வரவேற்றனர்...
தங்கேசுவரனுக்குத் தன் கரத்தால் முடி சூட்டினான் விக்கிரமாதித்தன்.
ஜெய விஜயீபவ!
கோவிலுக்குச் சென்று, மூவரும் சுந்தரமூர்த்தி சுவாமியை வணங்கினர்...
சொர்ணகாந்தநம்பி! உன்னுடைய பூஜைகளின் பலன்தான் எல்லாம்...!



நகருக்குச் சாபவிமோசனம் கிடைக்கச் செய்த அரசியை மக்கள் மிகவும் நேசித்தனர்...
சக்கரவர்த்தி வாழ்க!
மன்னர் வாழ்க!
அரசி வாழ்க!
சில தினங்கள் சென்று...
தங்கேசுவரரே! நான் என் நாட்டுக்குத் திரும்பிச் செல்ல அனுமதி தரவேண்டும்.
விக்கிரமாதித்தனுடன் வெகு தூரம் வந்து மன்னரும் மக்களும் வழியனுப்பி வைத்தனர்...
விடையளிக்க மனமில்லை; ஆனால் கடமை உங்களை அழைக்கிறதே...
போய் வருகிறேன்.
மீண்டும் சந்திப்போம்!
தங்கேசுவரனும் சுவர்ணகாந்த ரூபியும் நீண்ட நெடுங்காலம் தங்கமாபுரியைச் சந்தோஷமாக ஆண்டு வந்தனர்.

மாதவன் மனம் மாறினான்!



விர. வசந்தன்

ஒரு டெரிகாட்டன் சட்டையை உடனே வாங்கித்தர வேண்டுமென்றால், மாதவனின் தகப்பனாரால் அது இயலாத காரியம். அவர் நயமாக எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் மாதவன் கேட்பதாக இல்லை. எப்படியும் வாங்கித்தந்தால்தான் ஆயிற்று என்று ஒற்றைக் காலில் நின்றான்.

தன் தகப்பனாரின் பொருளாதார நிலைமையையோ பணத்தைச் சம்பாதிக்க, ஒவ்வொரு நாளும் அவர் படும் கஷ்டத்தையோ அவன் புரிந்து கொள்ளவில்லை.

வருத்தத்துடன் தம் மகனைப் பார்த்த தகப்பனார், ''அவ்வளவு விலை உயர்ந்த சட்டையை உடனே வாங்கித் தான்னா எப்படிப்பா... சந்தர்ப்பம் வரும்போது வாங்கித் தர்றேன்... உனக்கு ஸ்கூல் ஃபீஸ் கட்ட, புத்தகம் வாங்கன்னு நிறையச் செலவு இருக்கு பார்த்தியா?'' என்று அமைதியாகச் சொன்னார்.

அவர் சொன்னது அவன் காதில் ஏறவே இல்லை. ''ஸ்கூலிலே எல்லோரும் டெரிகாட்டன் போடறப்போ, நான் மட்டும் இந்த காடாத் துணியிலே சாக்கு மாதிரி சட்டை தைச்சுப் போட்டுட்டுப் போகணுமா?'' என்று முணுமுணுத்தான்.

''வசதி உள்ளவங்க என்ன வேணுமானாலும் வாங்கிக்கலாம்... ஆனால் நமக்கு வசதி இல்லியே! பணக்கஷ்டம் புரியாமப் பேசறியேப்பா! இப்படி வீண் சிந்தனையில் மனம் செலுத்தாமே படிக்கிறதிலே மனசைச் செலுத்து...... நாளைக்கு நீயே உசந்த நிலைமைக்கு வந்தா, இஷ்டப்பட்டதை எல்லாம் வாங்கிக்கலாமே'' என்று அறிவுரை கூறும் தொனியில் கூறினார் மாதவனின் தகப்பனார்.

ஆனால் அவன் புரிந்து கொள்ளாதவனாய், ''ஏம்பா, பள்ளிக்கூடத்தில் டெரிகாட்டன் சட்டை போட்டுட்டு வர்றவங்க எல்லாம் படிச்சு ஓசந்த வேலைக்குப் போய்த்தான் வாங்கினாங்களா?'' என்று விவரம் தெரியாமல் ஒரு கேள்வியை வீசினான். தான் கேட்டதை வாங்கித் தர தகப்பனார்



மறுக்கிறாரே என்கிற கோபந்தான் அவனிடம் மேலோங்கி நின்றதே தவிர, ஏன் மறுக்கிறார் என்று அவன் சிந்திக்கவேயில்லை.

இதையெல்லாம்கேட்டுக்கொண்டு வாசற்படியில் நின்றிருந்த மாதவனின் தாயாருக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. ''சீ! வாயை மூடுடா. ஒவ்வொருத்தன் ஏரோப்ளேனிலே பறக்கிறான்னு நாமும் பறக்க முடியுமா? அவரவரோட வசதிக்குத் தக்கபடிதான் வாழ முடியும்!. பெத்தவங்களுடைய கஷ்டம் தெரியாமே பேசாதே'' என்று சீறினாள்.

அதற்குள் தகப்பனார் இடையில் புகுந்து, ''அனுபவம் இல்லாத சின்னப் பிள்ளை, ஏதோ பேசறான்னு கோபப்படலாமா? சரிவிடு...'' என்றார்.

அன்று மாதவனின் தகப்பனாருக்கு உடல்நிலை சரியில்லாமல் போயிற்று. அவரால் வேலைக்குப் போக முடியவில்லை.. அவர் மாதவனை அழைத்து, தன் முதலாளியிடம் போய் அவரால் வேலைக்கு வர முடியாத நிலைமையைச் சொல்லிவிட்டு வரும்படி சொன்னார். சரியென்று மாதவன் கிளம்பிப் போனான்.

பாறையை உடைத்தெடுத்து ஜல்லியாக மாற்றும் குவாரியில் அவனது தகப்பனார் தினக்கூலிக்கு வேலை பார்த்து வந்தார். அங்கு காலையில் எட்டு மணிக்கு வேலைக்கு வருகிறவர்களின் பெயர்களைப் பதிவு செய்து அனுப்புவார்கள். மாலையில் ஐந்து மணி வரையிலும் வேலை இருக்கும்.

மாதவன் அந்தக் கல் உடைக்கும் குவாரியை அடைந்த போது, வேலைக்கு வந்திருந்த ஆண்களும், பெண்களும் வரிசையாக நின்று கொண்டிருந்தனர். இன்னொரு புறம் அவன் வயதையொத்த சிறுவர்கள் நிற்பதையும் பார்த்தான். ஒருவர் ஒரு புத்தகத்தில் அவர்களது பெயர்களைப் பதிவு செய்து கொண்டிருந்தார்.

அவன் அவரை அணுகி, தன் தகப்பனாருக்கு உடல்நலம் சரியில்லாததையும், அதனால் அன்று வேலைக்கு வர முடியாததையும் தெரிவித்தான்.

அவர் தலை நிமிராமலேயே, ''உங்க அப்பா பேரு என்ன?'' என்று கேட்க, மாதவன் ''சண்முகம்'' என்றான்.

''ஓகோ, சண்முகம் மகனா நீ? சரி, சரி.... இன்னைக்குத்தான் சனிக்கிழமையாச்சே, ஸ்கூல் கிடையாதே... நீ வேணும்னா இன்னிக்கு வேலை செய்யறியா? சின்னப் பையன்களுக்குத் தினக்கூலி பத்து ரூபா தர்றோம்'' என்றார் அவர்.

மாதவன் ஒரு கணம் யோசித்தான். பெரும் உற்சாகத்தோடு வேலைக்கு வந்த சிறுவர்கள் வரிசையில் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தான். 'இந்தச் சிறுவர்களோடு சேர்ந்து வேலை செய்யும் சாக்கில் பொழுது போனது போலவும் இருக்கும், பத்து ரூபாயும் கிடைக்கும். அதை நம் விருப்பத்திற்குச் செலவு செய்யலாமே!' என்று அவன் மனம் எண்ணியது.

அவன் அவர் கூறியதற்கு, 'சரி' யென்று ஒப்புக் கொண்டான்.

கற்களை உடைத்தெடுக்கும் பொருட்டுப்பாறையை வெடிவைத்து,

தகர்த்துத் தகர்த்து, அந்தக் குவாரி ஒரு மலைப்பள்ளத்தாக்கைப் போல் பெரும் பள்ளமாகக் காட்சியளித்தது. வேலைக்கு வந்த தொழிலாளர்கள் அதனுள் இறங்கி வேலை செய்ய ஆரம்பித்தனர்.

பாறையில் ஆங்காங்கே துளையிட்டு அதனுள் வெடி மருந்தைக் கெட்டிக்கும் பணியில் ஈடுபட்டனர் சிலர். வெடி மருந்தைத் துளைகளுக்குள் கெட்டித்து, நீண்ட திரிகளையும் இணைத்த பின் ஒருவர் தொழிலாளர்களை நோக்கி ஒரு சிவப்புத் துணியை வேகமாக அசைத்தார். உடனே தொழிலாளர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு ஓடி மறைந்து கொண்டனர்.


அவர் சென்று அந்தத் திரிகளுக்கு நெருப்பு வைத்துவிட்டு, தானும் மறைந்து கொண்டார். மறுகணம் வெடி மருந்தில் நெருப்பு பற்றிக் கொள்ள, பெரும் ஓசையுடன் ஆங்காங்கே வெடித்து, பாறை பிளவுண்டு, கற்கள் சிதறி எறியப் பட்டன. வானத்தில் பறந்த கற்கள் சடசடவென்று கீழே விழுந்து அடங்கியதும் மறைவிலிருந்த தொழிலாளர்கள் வெளியே வந்தனர்.

அதற்குள் முன்பு துணியை அசைத்து எச்சரிக்கை செய்தவர், ''இன்னும் ஒரு வெடி மிச்சமிருக்கு. ஓடுங்க, ஓடுங்க'' என்று கத்தினார்.

அவர்கள் எல்லோரும் மீண்டும் ஓடி மறைய முற்பட்ட போது பெரிய ஓசையுடன் அந்த வெடி வெடித்தது. படீரென்று சிதறிய கற்களில் ஒன்று மறைவிடம் தேடி ஓடிக் கொண்டிருந்த ஒரு தொழிலாளியைப் பலமாகத் தாக்கியது!

படுகாயமடைந்த அவர் 'ஆ' வென்று அலறிக் கொண்டு மயங்கி விழுந்தார். மற்ற தொழிலாளிகள் அவரை நோக்கிப் பாய்ந்தோடினர். உடலெல்லாம் இரத்த வெள்ளமாகக் கிடந்தவரை உடனே மருத்துவமனைக்குத் தூக்கிக் கொண்டு சென்றனர்.

நெஞ்சைப் பிடித்தவாறு இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டு நின்ற மாதவனின் மனத்தில், 'இவ்வளவு ஆபத்துக்கிடையில்தானே தினம் தினம் என் தகப்பனாரும் வேலை செய்து பணத்தைச் சம்பாதிக்கிறார்!' என்று ஓர் எண்ணம் தோன்றியது.



தாறுமாறாக உடைந்து சிதறிக் கிடக்கும் கற்களை தேவைக்கேற்ப ஒரே சீரான ஜல்லிகளாக உடைத்தெடுக்கும் இயந்திரத்துக்குச் சுமந்து செல்லும் வேலையில் சிறுவர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

மாதவனும் மற்றச் சிறுவர்களுடன் ஒரு கல்லைத் தலையில் சுமந்தவாறு கரகரவென்று இயங்கிக் கொண்டிருந்த இயந்திரத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

கல்லின் பாரம் அழுத்த, வெயிலின் அனல் உடலைத் தாக்க, வியர்வை வெள்ளமாக அவனுக்குப் பெருகி வழிந்தது. ஒரு கல்லை இயந்திரத்திற்குக் கொண்டு சேர்ப்பதற்குள் மாதவன் சோர்ந்து போனான்.

அவனோடு வேலை செய்து கொண்டிருந்த சிறுவர்களோ சிறிதுகூடச் சோர்வின்றி, பாறைப் பள்ளத்திலிருந்து கற்களைச் சுமந்து வருவதைப் பார்க்க, அவனுக்கு மிகவும் வியப்பாக இருந்தது.

அவன் தன் அருகில் ஒரு பெரும் கல்லைத் தலையில் சுமந்தவாறு நடந்து வந்து கொண்டிருந்த ஒரு சிறுவனிடம், ''உனக்கு இவ்வளவு பெரிய கல்லைத் தூக்கிக்கிட்டு நடக்கிறது சிரமமா இல்லையா?'' என்று கேட்டான்.

அந்தச் சிறுவன் சிரித்துக் கொண்டே, ''சிரமத்தைப் பார்த்தால் எப்படிப் பணம் கிடைக்கும்? நீ இன்னைக்குத்தானே புதுசா வந்திருக்கிறாய்? நாங்கள் தினமும் இதே வேலையைச் செய்யறதினாலே பழகிப் போச்சு... ஒரு வாரத்திலே உனக்கும் பழகிடும். பயப்படாதே'' என்றான்.

''அப்படின்னா நீ பள்ளிக்கூடத்துலே படிக்கலியா?'' என்று அவசரமாகக் கேட்டான், மாதவன்.

''பள்ளிக்கூடமா! நான் பள்ளிக்கூடத்துக்குப் படிக்கப் போயிட்டா, தினமும் சாப்பாட்டுக்கு என்ன செய்வோம்...? எனக்கு ரெண்டு சின்னத் தங்கச்சிங்க இருக்காங்க... அம்மாவாலே இப்படிக் கல்லெல்லாம் தூக்கி வேலை செய்ய முடியாது'' என்று பதிலளித்தான் அந்தச் சிறுவன்.


''அப்போ உங்க அப்பா...''


''அவரு இறந்துட்டாரு... அவர் உசிரோடே இருந்தப்போ, நான் பள்ளிக்கூடத்துக்குப் போயிருக்கேன். மூணாவது வரை படிச்சிருக்கேன். இப்ப என்னைப் படிக்க வைக்க யாருமில்லை. நான் வேலை செஞ்சு காசுகொண்டுபோனாத்தான் வீட்டிலே சாதம் வடிக்க முடியும்'' என்ற அந்தச் சிறுவனின் குரலில் சொல்ல முடியாத வேதனை நிறைந்திருந்தது.

அதைக் கேட்ட மாதவனின் கண்களிலும் கண்ணீர் சுரந்தது. கவலையற்று, மகிழ்ச்சியுடன் பள்ளிக்கூடத்திற்குச் சென்று வந்த அவன், அபாயமும் கஷ்டமும் நிறைந்த வாழ்க்கையை இன்றுதான் சந்தித்தான். இந்தச் சிறு பருவத்திலேயே இத்தனை சிரமங்களையும் ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலைமை இந்தச் சிறுவனைப் போன்ற சிலருக்கு ஏற்பட்டு விடுகிறதே!

தன் தகப்பனார் வெயிலிலும் மழையிலும் தம் கஷ்டத்தைப் பாராமல் உழைப்பதினால்தானே, எந்தப் பிரச்னையும் இன்றி, நான் பள்ளிக்கூடம் செல்ல முடிகிறது? பசியும் பட்டினியும் என்னவென்றே அறியாமல் வாழ

ஓவியம் வரையலாம்







முடிகிறது?

வாழ்க்கையில் வசதியுடன் இருப்பவர்களைப் பார்த்து அவர்களது ஆடம்பரங்களுக்கு ஆசைப்பட்டு, தன் தந்தையை மேலும் மேலும் துன்புறுத்துவது என்ன நியாயம்?

இதோ இங்கு உழைக்கும் சிறுவர்கள் எல்லாம் தங்களுக்காக மட்டுமன்றி, தங்களைச் சேர்ந்தவர்களுக்காகவும் உழைக்க வேண்டியுள்ளது. ஆனால், தனக்கு அந்த நிலை ஏற்படாதவாறு பாதுகாக்கும் தகப்பனாரின் சிரமங்களைப் புரிந்து கொள்ளாமல் அவரது சக்திக்கு மேற்பட்ட பொருட்களின் மேல் ஆசைப்படுவது முறையற்ற செய்கை என்பது இப்போது மாதவனுக்குப் புரிந்தது.

அவன் மனத்தை அலைக்கழித்துக் கொண்டிருந்த ஆடம்பர ஆசை என்னும் அலை ஓய்ந்து மனம் அமைதியாயிற்று.

ஒரு டெரிகாட்டன் சட்டைக்காக அவரை அப்படி எதிர்த்துப் பேசியதை நினைத்து அவன் இப்போது வெட்கப்பட்டான். அன்று மாலை கிடைத்த பத்து ரூபாயைக் கொண்டு சென்று தன் தகப்பனாரிடம் அவன் கொடுத்த போது அவர் உண்மையிலேயே திகைத்துப் போனார்.

"ஏதுடா மாதவா, உனக்கு இந்தக் காசு...? காலையிலேயே போனவனைக் காணோமேன்னு இங்கே தவிச்சுக்கிட்டு இருக்கோம்... கூடப் படிக்கிற பையன்களோட வீட்டிற்குப் போனியோ, என்னவோன்னு குழம்பிக்கிட்டு இருக்கோம்... இவ்வளவு நேரம் எங்கே போனே?" என்று பரபரப்புடன் கேட்ட தாயையும் தந்தையையும் அமைதியாகப் பார்த்தான் மாதவன்.

"நீங்கள் செய்ய வேண்டிய வேலையை இன்னிக்கு நான் செஞ்சேம்பா, அதுக்குத்தான் இந்தக் காசு கிடைச்சுது... இந்தப் பணத்தைச் சம்பாதிக்க நீங்கள் எவ்வளவு சிரமப்படநீங்கன்னும் புரிஞ்சுது" என்று கண் கலங்கப் பதிலளித்தான் மாதவன்.

தாயும், தகப்பனாரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். இருவர் கண்களிலும் ஒருசேரக் கண்ணீர் துளித்தது. ஆம், அது ஆனந்தக் கண்ணீர்!



பாரதியார் சொன்ன கதைகள்

—புத்தனேரி சுப்பிரமணியம்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

பாரதியாரின் 'நவதந்திரக்கதை' மிகவும் சுவையானது. இது பஞ்ச தந்திரக் கதைகளைப் பின்பற்றி அமைந்துள்ள கதையாகும். பல கிளைக் கதைகளின் சங்கிலிப் பின்னல் போல் விளங்குகின்றது.

நவதந்திரக் கதை நிகழ்ச்சிகளில் மனிதர்களைப் போலவே மிருகங்களையும், பறவைகளையும் பாத்திரங்களாக்கிப் பேச வைத்திருக்கும் அற்புதத்தைக் காணலாம்.

'பயன் அறிதல்' 'நம்பிக்கை' ஆகிய இரு பகுதிகளாக அமைந்துள்ளது நவதந்திரக் கதை. ஒவ்வொரு கதையிலும் கிளைக் கதைகள் பின்னிக் கிடக்கின்றன.

வேதாரண்யம் விவேக சாஸ்திரி என்பவருக்கு மூன்று பிள்ளைகள். முதுமைப் பருவம் அடைந்த சாஸ்திரியார் ஒரு நாள் தம் கை நாடியைத் தொட்டுப் பார்த்தார். இன்னும் ஒரு வருஷத்திற்கு மேல் தம்மால் உயிருடன் இருக்க முடியாது என்பதைக் கண்டறிந்தார்.

தம் ஆயுட்காலம் முடிவதற்குள் பிள்ளைகள் மூவருக்கும் உலகியல் விவகாரங்களில் நல்ல அறிவுரைகள் கூற வேண்டும் என எண்ணினார். தம் பிள்ளைகள் லௌகிக தந்திரங்களைத் தெரிந்து கொள்ளும் பொருட்டுச் சில கதைகள் சொன்னார். அந்தக் கதைகளைக் கொண்டு பின்னிய சங்கிலித் தொடரே 'நவதந்திரக் கதை.'



சங்கீதம் படிக்கப் போன கழுதை

கதை கேட்க உட்கார்ந்த மூன்று பிள்ளைகளையும் நோக்கி, ''பிள்ளைகளே! கேளுங்கள்! ஒரு காரியம் தொடங்கும்போது அதன் பயன் இன்னதென்று நிச்சயமாகத் தெரிந்து கொள்ள வேண்டும். பயன்படாத காரியத்திலே வீணாக உழைப்பவன் சங்கீதம் படிக்கப் போன கழுதை போல வீணாகத் தொல்லைப்படுவான்!'' என்று விவேக சாஸ்திரி அந்தக் கழுதையின் கதையைச் சொல்கிறார்:

'ரசிக சிரோன்மணி' என்ற கழுதையானது 'மது கண்டிகை' என்னும் குயிலிடம் சங்கீதம் கற்றுக் கொள்ளப் போகிறது! கழுதைக்குச் சங்கீதம் வராது என்று குயில் கூறுகிறது. கழுதைக்குக் கோபம் உண்டாகிறது.



"எந்தத் தொழிலும் யாருக்கும் வரும்; முயற்சி செய்தால் முடியாதது ஒன்றுமில்லை" என்று கழுதை வாதாடுகிறது. இந்த உண்மைக்கு உதாரணமாக ஒரு கதையும் கூறி விளக்குகிறது கழுதை!

கழுதையின் பிடிவாதத்தையும் மன உறுதியையும் கண்ட குயில் கழுதைக்கு ஒரு யோசனை சொல்கிறது.

"கேளாய்! ரசிக மாமா! மலையடிவாரத்தில் ஒரு பிள்ளையார் கோயில் இருக்கிறது. நாள்தோறும் காலையிலும் மாலையிலும் அந்தக் கோயிலுக்குப் போய், தலையில் மூன்று தடவை குட்டிக் கொள்; மூன்று தோப்புக்கரணம் போடு! 'பிள்ளையாரே! பிள்ளையாரே! எனக்குச் சங்கீத ஞானம் வேண்டும்!' என்று பிரார்த்தனை செய்து கத்து! பாட்டு தானாக வந்துவிடும்!" என்று குயிலானது கழுதைக்கு யோசனை கூறுகிறது.

குயில் சொன்னபடியே மறுநாள் கழுதையானது பிள்ளையார் கோயிலுக்குப் போய்க் கத்த ஆரம்பிக்கிறது! கழுதையின் இரைச்சலைக் கேட்கச் சகிக்காமல் பக்தர்கள் சிலர் கழுதையின் மேல் கல் எறிந்து, காலை ஒடித்துத் துரத்தி விடுகிறார்கள்! சங்கீதம் படிக்கப் போன கழுதை சங்கடத்தோடு ஓடுகிறது!

தனக்கு இயற்கையில் கிடைக்கக் கூடாத பொருளை விரும்பி எவனும் வீண் ஆசை கொள்ளக் கூடாது என்பதை இந்தக் கதை எடுத்துக் காட்டுகிறது என்று விவேக சாஸ்திரி கழுதையின் கதையை முடிக்கிறார்.

கதை கேட்டுக் கொண்டிருந்த பிள்ளைகளில் ஒருவன் விவேக சாஸ்திரியை நோக்கி,

"அப்பா! பிள்ளையாரைக் கும்பிட்டு வரம் கேட்ட கழுதைக்குத் தீங்கு வரலாமா?" என்று ஒரு குறுக்குக் கேள்வி போடுகிறான்!

"விவேகம் இல்லாதவனுடைய தெய்வ பக்திக்கு உறுதி கிடையாது. பயனும் கிடையாது! விவேகத்துடன் சேர்ந்த தெய்வ பக்தியே உண்மையானது. விவேகமான தெய்வ பக்தி இருந்தால், எடுத்த காரியத்தில் வெற்றி அடையலாம்!" என்று விவேக சாஸ்திரி விளக்கம் கூறி அதற்கு உதாரணமாக மற்றொரு கதை சொல்கிறார்.

நவதந்திரக் கதையின் இரண்டாம் பகுதியாக அமைந்துள்ள 'நம்பிக்கை' என்ற அந்தக் கதை வீரவர்மன், தண்டிராஜன் ஆகிய இரு சிங்க ராஜாக்களைப் பற்றியது.

நவதந்திரக் கதையில் வரும் கிளைக் கதைகளில் ரசிக சிரோன்மணி என்னும் கழுதை குயிலுக்குச் சொல்வதாக வரும் 'தட்டிக் கொண்டான் செட்டி கதை'யும் அய்கிரன் என்ற பருந்து, வீரவர்மன் என்ற சிங்கத்திற்குச் சொல்வதாக வரும் 'திண்ணன் கதை'யும் மிகச் சிறந்தவை.

சிங்கராஜாவின் படை வரிசை

அரசன் என்றால் படைபலம் இருக்கவேண்டும் அல்லவா?

நவதந்திரக் கதையில் வரும் வீரவர்மன் என்ற சிங்கராஜாவின் படை வரிசையும் வர்ணிக்கப்பட்டுள்ளது. எத்தனை வகைப் படைகள் தெரியுமா?

புலிப்படை	1000
யானைகள்	1000
ஓநாய்கள்	1000
ஒட்டகைகள்	1000
கழுகுகள்	3000
கரடிப்படை	1000
காண்டாமிருகம்	100
நரிகள்	4000
கழுதைகள்	3000
பருந்துகள்	1000

உளவு பார்க்கும் காக்கைகள் — 2000, பாம்புப்படை — 10,000.

இத்தனை வகையான படைகளும் அணிவகுத்துச் சிங்கராஜாவுக்குக் கட்டுப்பட்டுப் போரில் ஈடுபடும் அதிசயத்தை என்னவென்று சொல்வது!

பேய்க்காட்டு அரசனை தண்டிராஜன் என்னும் சிங்கம் பகைவர்களிடம் பிடிபட்டது. அந்த நாட்டில் ராஜ்யப்புரட்சி உண்டாகிவிட்டதாம்!



குடியரசு தோன்றி அதன் தலைவனாகக் கரடிராஜன் நியமிக்கப்பட்டானாம்! சகோதரத்வம், சமத்வம், சுதந்திரம் ஆகிய மூன்று தத்துவங்களையும் கரடிராஜன் ஊர்தோறும் பறை சாற்றினானாம்!

இவ்வாறு சகோதரத்வம், சமத்வம், சுதந்திரம் ஆகிய தமது லட்சியத்தத்துவங்களையும் கதையில் பொருத்தமாக இணைத்திருக்கிறார் புதுமைக் கவி பாரதியார்:—

மற்றொரு கதையில், வியாபாரிகளுக்கு ஆலோசனை கூறுவதுபோல் ஒரு பாத்திரத்தைப் பேச வைத்திருக்கும் சிறப்பும் கவனிக்கத் தக்கது. பாத்திரத்தின் வாயிலாக — பாரதியார் பேசுகிறார்:—

வேலை வாங்குவது எப்படி?

"வியபாரிகளுக்கும் குமாஸ்தாக்களிடம் வேலை வாங்கத் தெரியவில்லை. ஏனென்றால், முதல் காரணம் சம்பளம் நேரே கொடுக்க மனம் வருவதில்லை! ஒரு மனிதனால் நாம் லாபம் அடைய விரும்பினால், அவனுக்கு வயிறு நிறையச் சோறுபோடவேண்டும். வெளியிலிருந்து வரும் புத்திசாலியைக்காட்டிலும் குடும்பத்தைச் சேர்ந்த மூடனை விசேஷமென்று நினைக்கக் கூடாது. மூடனிடம் காரியத்தை ஒப்படைத்தால் அவன் அதைக் குட்டிச் சுவராக்கிப் போடுவான். தவிரவும்



முகஸ்துதி செய்பவனையும் பொய் நடிப்புக் காட்டுபவனையும் தலையில் வைத்துக் கொண்டு, சாமர்த்தியமுள்ளவனையும் யோக்கியனையும் கீழே தள்ளக் கூடாது. ஒரு நாளில் இத்தனை நாழிகைதான் வேலை உண்டு என்ற கட்டுப்பாடு இருக்க வேண்டும். அதிக நேரம் வேலை வாங்குவதும் நினைத்த பொழுதெல்லாம் ஆள்விட்டு அழைப்பதும் குற்றம்!''

கதாபாத்திரம் பேசும் இந்த அறிவுரை உலகியலில் இன்றைக்கும் எவ்வளவு பொருத்தமாகத் தோன்றுகிறது!

கொலம்பஸும் கோழி முட்டையும்

இன்னொரு சுவையான கட்டத்தையும் குறிப்பிட வேண்டும். கொலம்பஸ் கோழி முட்டையை உடைத்துக் காட்டிய சாமர்த்தியக் கதையை,

நரிச்சி நல்ல தங்கை என்ற பாத்திரம் சொல்வதாக நவதந்திரக் கதையில் பாரதியார் சேர்த்திருக்கிறார்.

கொலம்பஸ் என்ற பூகோளப் பேர் வழியும் முப்பத்தேழு சிநேகிதர்களும் ஒருநாள் விருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்களாம்! அப்போது கொலம்பஸ் நண்பர்களை நோக்கி,


''இங்கே யாராவது ஒரு கோழி முட்டையை மேஜையின் மேல் எவ்வித ஆதாரமும் இல்லாமல் நட்டமாக நிறுத்தி வைக்க முடியுமா? நான் செய்து காட்டுவேன்! வேறு யாராவது செய்து காட்டுங்கள்; பார்ப்போம்!'' என்று சவால் விட்டார்.

கொலம்பஸின் நண்பர்கள் பல விதங்களில் முயற்சி செய்தும் கோழி முட்டையை மேஜைமேல் ஆதாரம் இல்லாமல் நிறுத்த முடியவில்லை. கடைசியாக அவர்கள் எல்லோரும் தோல்வியை ஒப்புக் கொண்டார்கள். கொலம்பஸ் பெருமிதத்தோடு எழுந்து நின்றான். கோழி முட்டையைக் கையில் எடுத்தான். ஓர் ஓரத்தைச் சீவி விட்டு, முட்டையை மேஜைமேல் நட்டமாக நிறுத்தி விட்டான்! நண்பர்கள் கொலம்பஸின் மதிநுட்பத்தை மெச்சினார்கள்!''



இப்படியெல்லாம் சில சுவையான துணுக்குகளோடு நவதந்திரக் கதையை மகாகவி பாரதியார் உருவாக்கியுள்ளார்.

தமிழில் கதை இலக்கியம் அவ்வளவு வளர்ச்சி பெறாத அந்தக் காலத்திலேயே, குழந்தைகளுக்கும் புரியும்படியான வேடிக்கைக் கதைகளைப் படைத்துத் தமிழ் வசன இலக்கியத்தை வளர்த்தவர் மகாகவி பாரதியார்.



சித்திரப்புதிர்! 22

ஆழி ————



1 'தீயவை பேசாதே, தீயவை பார்க்காதே, தீயவை கேளாதே' என்பதைக் குறிக்கும் இந்தப் பொம்மை காந்தியடிகளின் மனதைக் கவர்ந்தது. இது எந்த நாட்டைச் சேர்ந்த பொம்மை?




2 ஆடை அணிகளைக் கொண்டு கண்டுபிடியுங்கள்— இந்தத் தாயும் குழந்தையும் எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்?



3 இந்தப் புழங்கால இசைக் கருவியின் பெயர் என்ன?




4 எந்த நாட்டின் புராதனச் சிற்பம் இது?



5 இந்தச் சின்னம் சர்வதேச ________ ஆண்டுக் காக அமைக்கப்பட்டது.

விடை : வேறு பக்கம்



nutrine
MILK
nutrine
BISCUITS
MILK
மீண்டும் மீண்டும்
சுவைக்கத் தூண்டும்
நியூட்ரின்
மில்க் பிஸ்கட்ஸ்
nutrine
ACIL/009/86·Tam



யானையைக் கொன்றவர் யார்?

— தேவி. நாச்சியப்பன்

"சிவ, சிவ... இப்படியாகி விட்டதே! அய்யகோ, என்ன செய்வேன்?" என்று புலம்பிய வண்ணம் கண்ணீர் பெருக நின்று கொண்டிருந்தார் சிவகாமியாண்டார்.

"அன்புடைய அடியார்க்கு ஆதரவான சிவபெருமானே, இது அடுக்குமா? அன்பர் பெருங்கூட்டத்தில் ஏழையாகிய எனக்கு இடமுண்டோ?" என்று மேலும், மேலும் புலம்பிக் கண்ணீர் பெருக்கினார் சிவகாமியாண்டார். அவரின் புலம்பல் அனைவருக்கும் கேட்ட போதிலும், அவருக்காக இரக்கப்படுவதைத் தவிர, அவர்களால் யாதொன்றும் செய்ய முடியவில்லை.

ஆமாம், அப்படி என்னதான் நடந்து விட்டது? ஏன் அப்படிப் புலம்பினார் என்றுதானே கேட்கிறீர்கள்? சொல்கிறேன், கேளுங்கள்.

சிவகாமியாண்டார் சிறந்த சிவபக்தர். அவர் தினமும் காலைக் கடன்களை முடித்துக் குளித்தபின், வாயை மெல்லிய துணியால் கட்டிக் கொண்டு நந்தவனத்திற்குச் சென்று பூப்பறித்து வருவார். இறைவன் பூஜைக்குரிய பூவில் தம் மூச்சுக் காற்றுக் கூடப் படாதவாறு புனிதமாக வைத்திருப்பார். கூடை முழுவதும் பூப்பறித்தாலும் அவருக்கு மனநிறைவே ஏற்படாது. பூஜைக்கு இன்னும் நிறையப் பூ இருந்தால் நன்றாக இருக்கும் என்றே எண்ணுவார். பூக்கூடையை ஒரு கோலிலே மாட்டித் தோளிலே பயபக்தியோடு சுமந்து வருவார்.

ஒருநாள் இப்படிப் பூப்பறித்து வருகையில் எதிரில் வந்த மதம் பிடித்த பட்டத்து யானை அவரிடமிருந்த பூக்கூடையைப் பிடுங்கித் தூர வீசிற்று. இதனால் பூ முழுவதும் மண்ணில் விழுந்து சிதறியது.

'நல்லவேளை. நமக்கு யானையால் தீங்கு எதுவும் ஏற்படவில்லை' என்று அமைதி கொண்டாரா சிவகாமியாண்டார்? அதுதான் இல்லை. 'என்னை என்ன செய்திருந்தாலும் பரவாயில்லையே. இறைவழிபாட்டிற்குரிய பூக்களை அல்லவா கொட்டி விட்டது' என்று புலம்பினார். யானை

யைத் துரத்திக் கொண்டு கோலால் அடிக்க ஓடினார். அவரது தள்ளாமையால் கீழே விழுந்து விட்டார். இருந்தபோதிலும் புலம்புவதை நிறுத்தவில்லை.

அப்போது, அவ்வழியாக வந்தார் எறிபத்தர். அவர் நெற்றி, உடல், கை கழுத்து எல்லா இடங்களிலும் பட்டை பட்டையாக விபூதி பூசியிருந்தார். கையில் கோடரி வைத்திருந்தார். சிவனடியார்களுக்கு இன்னல் தருகின்றவர் எவராயிருந்தாலும் கையில் உள்ள கோடரியை அவர்கள் மேல் வீசி விடுவார். இப்படி எறிதலால் அவருக்கு 'எறிபத்தர்' என்னும் பெயர் உண்டாயிற்று.

சிவகாமியாண்டார், புலம்பி அழுவதன் காரணம் யாதெனக் கேட்டார் எறிபத்தர். சிவகாமியாண்டார் யானை பூக்கூடையைத் தட்டிக் கொட்டிவிட்ட செய்தியைக் கூறினார். அதைக் கேட்டதும் கோபம்மிகக் கொண்டார் எறிபத்தர். "எங்கே சென்றாலும் சிவபக்தர்களுக்கு இந்த யானையால் தொல்லைதான்'' என்று கூறியபடி பட்டத்து யானையைத் தேடிச் சினத்துடன் சென்றார்.

பட்டத்து யானை எந்தக் கையால் சிவகாமியாண்டாரின் பூக்கூடையைப் பற்றிப் பூக்களையெல்லாம் கொட்டியதோ, அந்தத் துதிக்கையைத் தன்னுடைய கோடரியால் வெட்டி வீழ்த்தினார். அத்துதிக்கை தரையில் விழும்முன் முழங்கியபடி யானை கீழே விழுந்து உயிர்விட்டது! இன்னும் எறிபத்தரின் கோபம் அடங்கவில்லை. ''அறிவுள்ள யானைப்பாகர்களாகிய நீங்களும் வேடிக்கை பார்த்துக் கொண்டு சும்மா இருந்தீர்களா?'' எனச் சீறியபடி கோடரியை வீசி அவர்களையும் வெட்டி வீழ்த்தினார்.

யானை இரத்த வெள்ளத்தில் கிடக்க, பாகர்கள் வெட்டுண்டு கிடக்க, அவ்விடம் போர்க்களம் போல் இருந்தது. இந்தச் செய்தி மன்னருக்கு எட்டியது. ஆனால், யார், எதற்காக வெட்டினார் என்பதெல்லாம் தெளிவாகத் தெரியவில்லை. 'பட்டத்து யானையைக் கொல்வதென்றால் பகைவரின் செயலாகத்தான் இருக்க வேண்டும்' என்று மிகுந்த கோபத்துடன் தம் படையை அழைத்துக் கொண்டு அவ்விடத்திற்கு விரைந்தார்.

அங்கிருந்தவர்களில் யாருமே பகைவர் போல் தெரியவில்லை. யானையைக் கொன்றுவிட்டு ஓடிவிட்டார்களோ என நினைத்தபடி "எங்கே அவர்கள்?'' என்றார் அரசர். சுற்றி நின்றவர்கள் எறிபத்தரைக் காட்டி, ''இவர்தான் யானையையும், பாகர்களையும் கொன்றவர்'' என்று கூறினர்.

ஆச்சரியம் கொண்ட அரசர், சீற்றம் பறந்து போக, பணிவுடன் எறிபத்தரை வணங்கி, ''தேவரீர், யானை கொலையுண்டதை அறிந்த நான் அதற்கான காரணத்தையும், கர்த்தாவையும் அறியாமல் ஓடிவந்தேன். தங்கள் மனம் வருந்தும்படி ஏதோ நடந்திருக்கிறது என்பதை இப்போது புரிந்து கொண்டேன். இப்போது தாங்கள் கொடுத்த தண்டனை போதுமானதா?'' எனப் பணிவுடன் கேட்டார். அதற்கு எறிபத்தர் சிவகாமியாண்டாரின் பூக்கூடையைத் தட்டி விட்டுப் பூக்களைச் சிதறச் செய்த யானையின் செயலைக் கூறினார்.

அதைக் கேட்ட அரசர், ''தாங்கள்



யானையையும் பாகர்களையும் கொன்றது போதாது. அந்த யானைக்கு உரியவனை என்னையும் கொல்வதுதான் சரி. தங்கள் கோடரியால் பாவியாகிய என்னைக் கொல்ல வேண்டாம். இந்த வாளினால் என்னைக் கொல்லுங்கள்'' என்று கூறி, தன் உடை வாளை அவரிடம் கொடுத்துத் தலைதாழ்த்தி நின்றார்.


உடனே எறிபத்தர், 'என்ன பைத்தியக்காரத்தனமான செயலைச் செய்துவிட்டேன்! இவரோ நெறி தவறாத அரசர்; பக்தி உடையவர். அடியவர்களையே தெய்வமாக மதித்து வாழ்ந்து வருபவர். இவருக்கு வருத்தம் உண்டாகும்படி செய்து விட்டோமே' என்று சிந்திக்கலானார். மேலும், 'இவ்வாள் இப்போது அரசரிடமே இருப்பின், அவரே தம் தலையைத் துண்டித்துக் கொள்ளும் அபாயம் உள்ளது. எனவே, முதலில் அதை வாங்க வேண்டும்' என்று ஒரு நொடியில் தீர்மானம் செய்து அந்த வாளைத் தம் கையில் வாங்கிக் கொண்டார்.

'அரசர் தம் நிலையை மறந்து யானைக்கு ஏற்பட்ட நிலையை மறந்து, அடியாருக்கு ஏற்பட்ட துன்பத்தையே பெரிதாக நினைத்து, வருந்தினார். 'என்னே இவரது அன்புள்ளம்! இப்படிப்பட்டவர் நிலைத்து நீடூழி வாழ வேண்டும். ஆத்திரப்பட்ட நானே தண்டனை பெற வேண்டியவன்' என்று நினைத்து எறிபத்தர் தன்னையே வெட்டிக்கொள்ள வாளைத் தூக்கினார்.

தலைபணிந்து நின்ற அரசர் வெட்டுவதில் என்ன தாமதம் என்று தலையை நிமிர்த்திப் பார்த்தார். ''ஐயையோ! இது என்ன கொடுமை?' என்று பதற்றத்துடன் எறிபத்தரின் ஓங்கிய கையைப் பிடித்துக் கொண்டார்.

அப்போது வானில் இருந்து ஒரு குரல். 'உங்கள் அன்பின் வலிமையை உலகறியச் செய்யவே இவ்வாறு செய்தோம்'' என்றது. என்ன வியப்பு! யானையும், பாகர்களும் உயிர் பெற்றனர்! அருகில் நின்ற சிவகாமியாண்டாரின் பூக்கூடையிலும் பூக்கள் நிரம்பி வழிந்தன! எறிபத்த நாயனாரும், மன்னரும் மகிழ்ச்சியுடன் இறைவனை வேண்டி வணங்கினர்.





'குழந்தைகளே இந்நாட்டின் செல்வங்கள்' என்று சொன்னார் பண்டிட் ஜவஹர்லால் நேரு.

நம் நாட்டின் எதிர்காலம் ஒளிமயமாக இருக்க வேண்டுமென்றால் நாட்டிலுள்ள குழந்தைகள் அனைவரும் ஆரோக்கியம் உள்ளவர்களாகவும், அறிவுமிக்கவர்களாகவும் இருக்க வேண்டியது அவசியம்.

குழந்தைகள் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமென்றால் அவர்களை எந்தவித நோயும் அணுகக்கூடாது; இல்லையா? இன்றைய மக்கள் தொகைப் பெருக்கத்திலும், சுத்தமில்லாத சுற்றுப்புறச் சூழ்நிலைக்கு நடுவிலும் ஒரு குழந்தையை எந்தவித நோயும் அணுகாமல் பார்த்துக் கொள்வது சாத்தியமா?

சாத்தியம்தான்!

குழந்தைகளுக்கு சத்துள்ள உணவுகளைக் கொடுப்பதன் மூலமும், முறையாகத் தடுப்பு ஊசிகளைப் போட்டுக் கொள்வதன் மூலமும் பெரும்பாலான சுகாதார முறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலமும் பலவிதமான நோய்களைத் தடுத்துவிட முடியும்.

ஆனால், நம்மில் எத்தனைபேர் சுத்தத்தைக் கடைப்பிடிக்கிறார்கள்? எத்தனைபேர் தடுப்பு ஊசிகளின் அவசியத்தை அறிந்துள்ளார்கள்? எத்தனை குழந்தைகளுக்கு சத்துள்ள உணவு கிடைக்கிறது?

குழந்தைகளுக்கு வரக்கூடிய நோய்களைத் தடுப்பதில் தடுப்பு ஊசிகளின் பங்கு மகத்தானது. ஒரு காலத்தில் மனித உயிர்களைக் கொள்ளை கொள்ளையாகப் பறித்துச் சென்ற 'பெரிய அம்மை' என்ற நோயை அம்மைப் பால் தடுப்பு ஊசி போட்டுக் கொண்டதன் மூலம் இன்று அறவே அழித்து விட்டோம் என்பதே அதற்குச் சாட்சி!

அதே மாதிரி தற்போது குழந்தைகளிடத்தில் பெருமளவில் பரவியுள்ள காது நோய், தொண்டை அடைப்பான், கக்குவான், இருமல், இசிவு நோய், டைபாய்டு, காலரா, மணல் வாரியம்மை போன்ற தொற்று நோய்களை முற்றிலும் தடுத்துவிடக் கூடிய தடுப்பு ஊசிகள் நம்மிடம் இருந்தும், அவற்றைச் சரியாகப் பயன்படுத்



பெரியவர்: "தம்பி! உன் வயசு என்ன?"
சிறுவன்: "பள்ளியில் ஐந்து வயது; பஸ், ரயிலில் நான்கு வயது. வீட்டில் ஆறு வயது. எந்த வயதைக் கேட்கிறீர்கள்?"

— ஆர். தமிழவேள்

தாதனுல், குழந்தைகளிடத்தில் அந்நோய்களைப் பரவவிட்டுக்கொண்டிருக்கிறேம் என்பது மிகவும் வருந்தத்தக்க விஷயம்.

இந்நோய்களைத் தடுக்க வேண்டியதும் நம் கடமையல்லவா? அதற்கு முறையாகத் தடுப்பு ஊசிகள் போட வேண்டியது அவசியம் அல்லவா?

ஆம், அவசியம்தான்.

ஏன் அவசியம் என்பதை இங்கே சொல்கிறேன்.

ஆரோக்கியமான ஒருவரின் உடம்புக்குள் நோய்க் கிருமிகள் நுழைகிற போது அவர்கள் உடம்பில் உள்ள நோய்—எதிர்ப்புச் சக்தியானது, நோய் எதிர் அணுக்களை இரத்தத்தில் ஏராளமாக உற்பத்திசெய்து நோய்க் கிருமிகளை எதிர்த்துத் தாக்கச் செய்கிறது. இதனுல், உள்ளே நுழைந்த நோய்க்கிருமிகள் செயல் இழந்து வெளியேறி விடுகின்றன. நோயும் வருவதில்லை.

ஆனுல், அனைவருக்குமே ஆரோக்கியமான உடம்பும் நோய் எதிர்ப்புச் சக்தியும் இருக்கின்றனவா? இல்லையே!

பிறந்த குழந்தைகளுக்கும், சத்துக் குறைவாக உள்ள குழந்தைகளுக்கும், சிறுவர்களுக்கும் நோய் எதிர்ப்புச் சக்தி மிகக் குறைவு. அதனுல்தான் தொற்று நோய்க்கிருமிகள் குழந்தைகளை மிக விரைவில் பற்றிக்கொண்டு நோய்களை உற்பத்தி செய்கின்றன.

இம்மாதிரியானநோய்களைத்தடுக்க வேண்டுமானுல் குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கச் செய்ய வேண்டும். அதற்கு ஒரே வழி—தடுப்பு ஊசிகளைப் போட்டுக்கொள்வதுதான்!

தடுப்பு ஊசிகளை எதில் தயார் செய்கிறுர்கள்? தெரிந்து கொள்ள வேண்டாமா? பாக்டீரியா கிருமிகளையும், வைரஸ் கிருமிகளையும் இன்னும் சில பொருட்களையும் சேர்த்து பல்வேறு விதமான இரசாயன மாற்றங்களுக்கு உட்படுத்தி ஒரு மருந்தைத் தயார் செய்கிறுர்கள். அதைத்தான் 'தடுப்பு ஊசி' என்கிறுர்கள். இதையே ஆங்கிலத்தில் 'Vaccine' என்று சொல்கிறுர்கள்.

இந்தத் தடுப்பு ஊசிகள் கிருமிகளினுல் தயாரிக்கப்பட்டவைதான் என்றுலும் நோயினை உண்டாக்காது. மாறுக, நோய் எதிர்ப்புச் சக்தியை உடம்புக்குத் தரக்கூடியவை.

எப்படி என்பதை இங்கே சொல்லட்டுமா? குழந்தை பிறந்தவுடன் 'பி. சி. ஜி.' (B. C. G.) என்ற தடுப்பு ஊசி போடப்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். ஊசி மருந்து உடம்புக்குள் சென்றதும், இரத்தத்தில் கலந்து காசநோய்க் கிருமிகளை எதிர்த்துப்போராடக்கூடிய எதிர்ப்புச் சக்தியை அக்குழந்தைக்கு கொடுத்து விடுகிறது. இதனுல் காற்று மண்டலத்திலிருந்து உடம்புக்குள் நுழையும் காச நோய்க்கிருமிகள் செயலிழந்து வெளியேறிவிடும். எனவே அக்குழந்தைக்கு காச நோய் வருவது தடுக்கப்படுகிறது.

இம்மாதிரியே மற்ற தடுப்பு ஊசிகளும், மருந்துகளும் அவற்றுக்குண்டான நோய்களை வர விடாமல் தடுத்து விடுகின்றன.

அதுசரி, இந்தத் தடுப்பு ஊசிகள் எங்கே கிடைக்கின்றன என்றுதானே கேட்கிறீர்கள்? அதையும் சொல்கிறேன்—

ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், அரசினர் மருத்துவ மனைகளிலும்,

தனியார் மருத்துவமனைகளிலும் தடுப்பு ஊசிகள் தாராளமாகக் கிடைக்கின்றன. விலையும் மலிவு. அவற்றைப் பயன்படுத்திப் பயனடைய வேண்டியது நம்முடைய கடமை.

சரி டாக்டர், தடுப்பு ஊசிகளை எப்போது போட வேண்டும்? அதைச் சொல்லுங்கள் முதலில்! என்று ஆவலாகக் கேட்கும் குழந்தைகளுக்காக இதே பக்கத்தில் தடுப்பு ஊசி அட்டவணையைத் தந்துள்ளேன். அதன்படி மருத்துவரை அணுகி தடுப்பு ஊசிகளைப் போட்டுக் கொள்ளலாம்.

தடுப்பு ஊசி போடுவதால் ஓரிரு நாட்கள் வரை காய்ச்சல் வரலாம். இந்தச் சிறிய சுகவீனத்திற்குப் பயந்து கொண்டு சிலர் தடுப்பு ஊசிபோட்டுக் கொள்வதில்லை. அது மிகப் பெரிய குற்றம்.

பெற்றோர்கள் தடுப்பு ஊசி போடாமல் தங்கள் குழந்தைகளை வளர்ப்பார்களானால் அவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு மட்டும் தீங்கு விளைவிக்கவில்லை; நம் நாட்டிற்கே தீங்கு விளைவிப்பதாக அர்த்தம்.

எனவே, குழந்தைகளுக்கு முறையாக தடுப்பு ஊசிகளைப் போட்டு, தொற்று நோய்களை வர விடாமல் தடுப்பதோடு, குழந்தைகளை ஆரோக்கியமாக வளர்வதற்கும் உதவிட வேண்டும்.

என்றும் வருமுன் காப்பதே சிறப்பு.

I தொடக்கத் தடுப்பு ஊசிகள்

தடுப்பு ஊசியின் பெயர்	போட வேண்டிய காலம்	தடுக்கப்படும் நோய்கள்
1. பி. சி. ஜி. (B. C. G.)	பிறந்த மூன்று நாட்களுக்குள்	காசநோய்
2. முத்தடுப்பு ஊசி (Triple Antigen)	3, 4, 5 மாதங்களில் மாதம் ஒரு ஊசி.	தொண்டை அடைப்பான், கக்குவான், இருமல், இசிவு நோய்.
3. இளம்பிள்ளை வாதத் தடுப்பு மருந்து.	3, 4, 5, 6, 7 மாதங்களில் மாதம் ஒரு முறை.	இளம்பிள்ளை வாதம்.
4. மணல்வாரி அம்மைத் தடுப்பு ஊசி (Measles Vaccine)	9—ம் மாதம்.	மணல்வாரியம்மை.
5. டைபாய்டு தடுப்பு ஊசி.	ஒரு வயதில்.	டைபாய்டு காய்ச்சல்.
6. காலரா தடுப்பு ஊசி.	எந்த வயதிலும் போடலாம். (குறிப்பாக காலரா பரவும் சமயங்களில்)	காலரா நோய்.

II தொடர் தடுப்பு ஊசிகள்

தடுப்பு ஊசியின் பெயர்	எந்த வயதில் போட வேண்டும்?
1. முத்தடுப்பு ஊசி.	1½ வயது. 5 வயது.
2. இளம்பிள்ளைவாத தடுப்பு மருந்து.	1½, 3, 5 வயதுகளில்.
3. டையாய்டு தடுப்பு ஊசி.	மூன்று வருடங்களுக்கு ஒரு முறை.
4. தொண்டை அடைப்பான் இசிவு நோய்த் தடுப்பு ஊசி.	10 வயதில்.
5. டெட்டனஸ் டாக்சாய்டு.	மூன்று வருடங்களுக்கு ஒரு முறை.



அரியபல படங்களுடன்
ஆங்கிலத்தில் வெளியாகும்

வாரஇதழ் ஒன்றினிலே
வண்ணக் கலவையுடன்

பூகோளப் படம்ஒன்று
பெரிதாகத் தெரிந்ததுவே.

அப்படத்தை ஒருமனிதர்
ஆவலுடன் பிரித்தெடுத்தார்.

ஆறேழு வயதிருக்கும்
அருமைமகன் தனைஅழைத்தார்.

உலகத்தின் படம்இதனை
உற்றுப்பார் என்மகனே.

இப்படத்தைக் கத்தரியால்
ஏழெட்டுத் துண்டுகளாய்

வெட்டிக் கலைக்கின்றேன்.
மீண்டும்இந்தத் துண்டுகளை

ஒன்றாகச் சேர்த்திடுவாய்,
உன்திறமை காட்டிடுவாய்."

என்றுரைத்தார். சிறுவனுமே
எடுத்தான் அத்துண்டுகளை.

முன்பிருந்த படி அவற்றை
மீண்டும்அவன் சேர்த்திடவே,

முயற்சிசெய்தான். ஆயினுமே
முடியவில்லை அவனாலே.

"கொல்லையிலே நான்சென்று
குளித்துவிட்டு வருகின்றேன்.

அதற்குள்ளே சரியாக
அமைத்திடுவாய் இவ்வுலகை"

எனக்கூறித் தந்தையுமே
எழுந்துசென்றார் பின்புறத்தே.

திரும்பிஅவர் வரும்போது
சிறுவனவன் துண்டுகளைச்

சரியாக வைத்திருந்தான்,
தாள்ஒன்றின் மீதினிலே!

"எப்படித்தான் சேர்த்தாயோ
என் அருமைச் செல்வா நீ!"

எனத்தந்தை கேட்டிடவே
எடுத்துரைத்தான் அச்சிறுவன்.

"துண்டுகளை எடுத்தெடுத்துத்
தோதாக வைத்திடவே

பலவிதத்தில் நான் முயன்றும்
பலிக்கவில்லை அப்பொழுது

ஒருதுண்டு காற்றினிலே
ஓடியுமே சென்றதுவே.

அத்துண்டை எடுத்திடவே
அருகினிலே சென்றதுமே,

அழகான கண்ஒன்றை
அத்துண்டில் நான்கண்டேன்.

உலகத்தின் ஒருபகுதி
ஒருபக்கம் தெரிந்தாலும்

மறுபக்கம் கண் இருக்க
மகிழ்வுடனே அதைஎடுத்தேன்.

மற்றுமுள்ள துண்டுகளை
மறுபக்கம் நான்திருப்ப

மற்றுமொரு கண்ணினையும்,
வாயுடனே மூக்கினையும்

கண்டுகொண்டேன்! கண்டுகொண்டேன்!
களிப்புமிகக் கொண்டுவிட்டேன்!

பின்புறத்தில் கண்டவற்றைப்
பெருமுயற்சி இல்லாமல்,

எளிதாக நான்சேர்த்தேன்.
எழில்உருவம் அதில்கண்டேன்

அழகான குழந்தைமுகம்
அப்படத்தில் தெரிந்ததப்பா!

அப்படியே பின்புறத்தை
ஆசையுடன் நான்திருப்ப

உலகத்தின் படம்அதிலே
உருப்படியாய்த் தெரிந்தத்தப்பா!"

எனமகனும் உரைத்திடவே
இதுகேட்ட தந்தையுமே,

களிப்புமிகக் கொண்டனரே;
கட்டிமுத்தம் கொடுத்தனரே.

"உலகத்தைத் துண்டாக்கும்
ஒருசெயலை நான்செய்தேன்.

துண்டான உலகத்தை
ஒன்றாக்கும் முயற்சியிலே

குழந்தைஒன்றின் துணையுடனே
குழந்தாய்நீ வென்றுவிட்டாய்!

'உலகமெலாம் ஒரு குடும்பம்,
உறவினர்தான் அனைவருமே'

எனஉணர்த்தி விட்டாய்நீ."
எனப்புகழ்ந்தார் தந்தையுமே!

பழமொழிப் புதிர் விடை

புதிர் — 21 இருதலைக் கொள்ளி எறும்பு போல்...

புதிர் — 22 வெள்ளம்வருமுன் அணை போட வேண்டும்.


சித்திரப் புதிர்-22 விடை

1 ஜப்பான்
2 ராஜஸ்தான்
3 மகரயாழ்
4 எகிப்து
5 சர்வதேசக்குழந்தைகள் ஆண்டு

பூங்காவனக் கதையரங்கம்

காட்டு ஆடு

வெ. சந்திரசேகர் (5930)



ஒரிஸ்ஸா மாநிலத்தில், கிரியோ என்னும் கிராமத்தில், ஒரு பண்ணையார் இருந்தார். அவரிடம், ஒரு பதினெருவயதுச்சிறுவன் வேலைபார்த்து வந்தான். அவன் பெயர் சுத்தோ. அவன் ஓர் அனுதை.

சுத்தோவின் தொழில் ஆடுகளை மேய்ப்பது. அவன் அந்த வேலையைச் செவ்வனே செய்து வந்தான். பண்ணையாரின் கொழுத்த ஆடுகளை, கிராமத்தின் வெளியில் உள்ள ஒரு காட்டிற்கு அழைத்துச் சென்று, மேய விடுவான். மாலை நேரம் ஆனதும் அவற்றை ஓட்டி வந்து, எண்ணிச் சரி பார்த்துக் கொட்டிலில் அடைப்பான்.

இவ்வாறு இருக்க...

ஒருநாள் எப்பொழுதும் போல, சுத்தோ, காலையில் விரைவில் எழுந்து, தனது காலைக் கடன்களை முடித்த பின்னர், தன் வேலையைக் கவனித்தான்.

ஆடுகளைக் காட்டிற்கு அழைத்துச் சென்ருன். ஆடுகள் நன்ருக மேய ஆரம்பித்தன. சுத்தோ, ஒரு மரத்தடியில் அமர்ந்து, ஏதோ சிந்தனையில் இருந்தான்.

முன்பு அவனிடம், "இந்தக் காட்டில், ஒரு கொடும் புலி உள்ளது. அது தனக்குப் பசி எடுத்தால் போதும். எதனையும் விடாது. ஆகவே, நீ சிறிது எச்சரிக்கையாக இரு," என்று சிலர் கூறியிருந்தனர்.

அது, அவனது மனத்தில் ஒருவித அச்சத்தை உருவாக்கியது. இப்படிச் சிந்தனையில் ஆழ்ந்திருக்க, மாலை நேரம் ஆகிவிட்டது.

சுத்தோவும், சிந்தனையிலிருந்து விடுபட்டு, சுற்றும் முற்றும் பார்த்தான். ஆங்காங்கே சில ஆடுகள் மேய்ந்து கொண்டிருக்க, சில ஆடுகள் படுத்திருந்தன.

உடனே, சுத்தோ எழுந்து, ஆடுகளை ஒன்ருகக் கூடச் செய்த பின்னர், அவற்றைச் சரி பார்த்தான். சரி பார்த்த போது, ஒரே ஓர் ஆட்டுக் குட்டி மட்டும் தொலைந்திருப்பதை அறிந்து, மறுபடியும் சரிபார்த்துத் தன் ஐயத்தை ஊர்ஜிதம் செய்து கொண்டான்.

ஆடுகளை, ஒரு பாதுகாப்பான இடத்தில் சேர்த்த பின்னர், தொலைந்த ஆட்டைத் தேடிச் சென்ருன்.

தான் வைத்திருந்த கோலினுல், முட்செடிகளைத் தேடிக் கொண்டே முன்னேறினுன். போகப் போக, அவனுடைய பிஞ்சுக் காதுகளில், ஏதோ ஒரு சிறு ஒலி, ஆபத்தில் இருப்பதாக உணர்த்தி, நுழைந்தன.

அதை உணர்ந்த சுத்தோ, மேலும்

விரைவாக நடந்தான். ஓர் இடத்திற்குச் சென்றதும், அவ்வொலி தெளிவாகவிழுந்தது. அங்கே சென்று பார்க்கையில், தன் ஆட்டுக்குட்டி ஒரு புதரில் சிக்கிக் கொண்டு கத்துவதைக் கண்டான். அதன் எதிரே சிறிது தூரத்தில் ஒரு புலி விரைவாகவும், ஆவேசத்துடனும் அதை நோக்கி வந்து கொண்டிருந்தது.

சுத்தோவால் என்ன செய்ய முடியும்?

தன்னைப் பாதுகாத்துக் கொள்ள, அவன் ஒரு புதரின் பின்னால் மறைந்து கொண்டான். ஆட்டுக்குட்டியைப் பார்த்துவிட்டு, வானத்தைப் பார்த்து ஆண்டவனை வேண்டினான்.

மேலே பார்த்தபோது, ஒரு காட்டு ஆடு, ஒரு பெரும்பாறையின் மீது அமர்ந்திருந்தது. அது மிகவும்வயதான ஆடு. அதன் கொம்புகள் வளைந்திருந்தன. தாடி வளர்ந்து, உடம்பெல்லாம் உரோமம் அடர்த்தியாய் வளர்ந்து காணப்பட்டது.


அது சட்டென்று கீழே நோக்கியது. அது, ஒரு குட்டி ஆடு புலிக்கு இரையாகவிருக்கிறது என்பதை உணர்ந்தது.

புலி மிகவும் அருகில் வந்தபோது, சுத்தோ ஓர் அதிசயத்தைக் கண்டான், அந்தக் காட்டு ஆடு, சடால் என்று பாறையினின்று வேகமாகப் பாய்ந்து; புலியைத் தன் வளைந்த கொம்புகளால் முட்டித் தள்ளியது! இதைச் சற்றும் எதிர்பாராத புலி, பயந்து அந்தப் பக்கம் போய் விழ, அங்கு இருந்த வலுவான ஒரு கொடியில், அதன் கால்கள் சிக்கிக் கொண்டன. ஒரு விஷ முட்செடி, புலியின் உடலைக் கிழித்திருந்தது.

புலியினால் தப்பவியலாது என்பதை உணர்ந்த சுத்தோ ஓடிச் சென்று, தன் ஆட்டுக் குட்டியைத் தூக்கிக் கொண்டான்.

பின்னர் திரும்பிப் பார்த்தான். காட்டு ஆடு, தன் இனம் ஒன்று அழியப் போகிறது என்பதை உணர்ந்து, அதனைத் தடுத்த மகிழ்ச்சியில், எதிர்ப்புறமாக ஓடிச் சென்று மறைந்தது.

சுத்தோ, அக்காட்டு ஆட்டினை,



நன்றியோடும் ஆச்சரியத்தோடும் பார்த்துவிட்டுப் புலியினை இரக்கத்தோடு நோக்கிவிட்டு நடந்தான்.

முட்டாள் கண்ட பொற்காசு



சி. சிவச்சந்திரன் (11635)

ஓர் ஊரில் ஒரு குடியானவன் இருந்தான். அவன் பெயர் ராமன்.

ஒருநாள் அவன் தன் வயலிலிருந்து திரும்பிக் கொண்டிருக்கையில் கீழே ஒரு பணப்பை இருப்பதைப் பார்த்தான். அதனுள்ளே பொற்காசுகள் இருந்தன. அதை அவன் வீட்டிற்கு எடுத்துச் சென்றான். யாரும் அறியாவண்ணம் அதைப் பெட்டியில் வைத்துப் பூட்டினான்.

இரவில் தூங்கும் பொழுது அவன் தன் வீட்டினுள் திருடர்கள் நுழைவது போலவும் பொற்காசுப் பையைத் திருடிச் செல்வது போலவும் கனவு கண்டான். உடனே எழுந்து பணப்பையைச் சுவரில் ஒரு பாகத்தில் ஓட்டை செய்து அதில் வைத்து மண்ணால் பூசினான். பிறகு படுத்தான். அப்பொழுதும் அவன் மனம் கேட்கவில்லை. காலை எழுந்தவுடன் பணப்பையைப் புதைத்த இடத்தில் கீழ்க்கண்டவாறு எழுதினான்:

"இவ்விடத்தில் பொற்காசுகள் அடங்கிய பை ஒன்றை நான் புதைத்து வைக்கவில்லை.


இப்படிக்கு,
ராமன்."


என்று எழுதிய பின்பே அவன் மனம் நிம்மதியாயிற்று.

அவன் வயலுக்குச் சென்ற பின், அடுத்த ஊரிலிருந்து ராமனின் நண்பன் சோமன் என்பவன் ராமனின் வீட்டிற்கு வந்தான். உள்ளே சென்று அமர்ந்தான். சுவரில் காணப்பட்ட பூச்சி ஒன்றை அடிப்பதற்காக ஒரு தடியைக் கொண்டு ஓங்கி அடித்தான். அப்போது ராமன் எழுதி வைத்திருந்ததைப் படித்துவிட்டு அங்கும் ஓர் அடி அடித்தான். சுவர் பெயர்ந்து விழுந்தது; உள்ளிருந்த பணப்பையும் தெரிந்தது. சோமன் அதை எடுத்துப் பிரித்துப் பார்த்துவிட்டு, சுவரை மீண்டும் சரி செய்துவிட்டு அங்கே கீழ்க்கண்ட வாசகத்தைக் கரியால் எழுதி வைத்து ஓடிவிட்டான். அந்த முட்டாள் எழுதிய வாசகம்:

"இவ்விடத்தில் புதைக்கப்பட்ட பொற்காசுகள் அடங்கிய பையை நான் எடுத்து என் ஊருக்குக் கொண்டு செல்லவில்லை.

இப்படிக்கு,
சோமன்."





புதையல் வீடு

டாக்டர் பூவண்ணன்

13. பிள்ளைப் பெருமாளின் பேராசை

பெருமாள் கோயிலின் உள்ளே நுழைந்ததும், வெளிக் கோபுரத்தின் அடியிலேயே நின்று பெருமாள் பள்ளி கொண்டிருக்கும் மூலஸ்தானத்தின் கோபுரத்தை நிமிர்ந்து பார்த்தான் பாபு.

''இந்தக் கோயிலால் எத்தனை தொல்லை? எவ்வளவு பணச் செலவு? ஆனால் ஆசை என்னை இங்கே அழைத்து வந்திருக்கிறது. எனது ஆசை பொல்லாத ஆசை. பெருமாள் மன்னிக்க முடியாத பேராசை. என்னால் மறக்க முடியாத பெரும் பேராசை! சே... மனத்தை அடக்கி இப்படியே வந்த வழியே திரும்பிவிடலாமா? இது வரை வந்த மனக்கஷ்டமும் பணக் கஷ்டமும் போதும் என்று திரும்பிப் போய்விடலாமா?'' பாபு நினைத்தான். அதனால் மேலே நடக்காமல் அங்கேயே நின்றான்.

''இந்தப் பெருமாள் கோயிலைப் பற்றி எப்போது கேள்விப்பட்டோம்..? சுமார் இரண்டு வருஷத்துக்கு முன்பு... அன்று மட்டும் என் தந்தை என்னிடம் இந்தக் கோயிலைப் பற்றிச் சொல்லாமல் இருந்திருந்தால்...''

பாபுவின் மனம் அசை போட்டது. இரண்டு வருடத்துக்கு முன்னே நடந்த அந்த நிகழ்ச்சி அவன் மனத்தில் திரைப் படம் போலத் தெரிந்தது.

அவனுடைய தந்தை மங்கலப் பெருமாள் நோய்வாய்ப்பட்டிருந்தார். இரவு மணி பன்னிரண்டு இருக்கும். அந்த நேரத்தில் அவருக்கு மூச்சுத் திணறியது. உடனே, எழுந்தார். தட்டுத் தடுமாறி நடந்து, வீட்டின் மற்றோர் அறையில் படுத்திருக்கும் தம் மகன் பிள்ளைப்பெருமாளை எழுப்பினார்.

''பாபு... பாபு...''

பிள்ளைப்பெருமாளின் செல்லப் பெயர்தான் பாபு. அவன் திடுக்கிட்டு எழுந்தான். ''என்னப்பா, உடம்பு மோசமா இருக்கா? வைத்தியரை அழைச்சிட்டு வரட்டுமா?'' என்று கேட்டான்.

''வேண்டாம் பாபு. இப்ப நான் உன்னோடு பேசணும். அதுதான் முக்கியம். வைத்தியர், மருந்து எல்லாம் நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம்.''

மூச்சு வாங்க, நிதானமாகப் பேசினார், மங்கலப் பெருமாள்.

''என்னோட பேசறதுன்னாலும் நாளைக்குக் காலையில் பேசலாமே! நான் ஓடியா போப்போறேன்.''

''நீ ஓடிப் போகமாட்டே. ஆனால், நான் ஓடிடலாம். என் உயிர் ஓடிடலாம்.

அதுக்கு முன்னாடி நம்ம குடும்பத்துக் கட்மை ஒண்ணு இருக்கு. சாகிறதுக்கு முன்னே உங்கிட்டே ஒரு ரகசியத்தைச் சொல்லணும்.''

மங்கலப்பெருமாள் ரகசியம் என்று சொன்னதும், பிள்ளைப் பெருமாள் ஆர்வத்தோடு ''சொல்லுங்கப்பா'' என்று கேட்டான்.

மங்கலப்பெருமாள் தான், விஜய மங்கலத்துச் சிற்பி நல்லபெருமாளின் கொள்ளுப்பேரன். அவருடைய தந்தை, மங்கலப்பெருமாள் சிறுவனாக இருந்தபோதே, ஆந்திராவில் உள்ள செகந்தராபாத்தில் ஒரு பெருமாள் கோயில்கட்ட வந்து, ஹைதராபாத்தில் நிரந்தரமாகத் தங்கிவிட்டார். மங்கலப்பெருமாளும் ஒரு சிற்பியானார். மங்கலப்பெருமாளின் தந்தை சாகும் போது உட்கோயிலைத் திறக்கும் இரகசியத்தை அவரிடம் சொல்லிவிட்டார். மங்கலப்பெருமாள். இப்போது அதைத் தம் மகனிடம் சொல்ல விரும்பினார்.

விஜயமங்கலத்தில் ஓர் உட்கோயில் இருப்பதையும், உட்கோயிலுக்குள் பத்துப் பொற்சிலைகளும், ஏராளமான தங்க, வைர நகைகளும் இருப்பதையும் மகனிடம் கூறினார். அந்த உட்கோயிலைத் திறக்கும் வழிதான் உனக்குச் சொல்ல வேண்டிய ரகசியம். இந்த ரகசியம் நான்கு குடும்பங்களுக்குத் தெரியும். நான்கிலே ஒன்று நம்ம குடும்பம். நம்ம நாட்டை நாமே ஆளுகிற போது உட்கோயிலை வெளிப்படுத்தணுமாம். எங்கப்பா சாகிற போது நாடு விடுதலை பெறலே. நாடு விடுதலையடைஞ்சப்போ நான் இங்கே இருந்தேன். தமிழ் நாட்டிலே இருக்கிறமூணு குடும்பங்களும் உட்கோயிலை வெளிப்படுத்தியிருக்கலாம். உட்கோயில் நினைப்பே மறந்து போனதாலே நான் அதைப்பத்தி தெரிஞ்சுக்க முயற்சி செய்யலே. இப்போ கொஞ்ச நேரத்துக்கு முந்தி மூச்சு திணறினப்போ, யோசிச்சேன். உன்னை ஒரு சிற்பியாக்கினேன். நீ சினிமா உலகத்திலே சிக்கிக்கிட்டே. ஆனால் போதுமான அளவு சம்பாதிக்கறே. இந்த வீடும் கொஞ்சம் நிலமும் உனக்கு நான் விட்டுப் போகிற சொத்து. அதனாலே நீ நிம்மதியா இருக்கலாம். உனக்குக் கல்யாணம் செய்து வைக்கலே. இந்த ஒரு கடமையை நிறைவேற்றலேன்னு நினைச்சப்போ உட்கோயில் ரகசியம் நினைவுக்கு வந்தது. உட்கோயிலைத் திறந்துட்டாங்களோ இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால், அதைத் திறக்கிற ரகசியத்தை உனக்குச் சொல்லலாம். அது என் கடமை. அதனாலே தான் சொல்றேன்.'' என்று மங்கலப் பெருமாள் உட்கோயிலின் வரலாற்றைக் கூறினார். மகமத்கான் படையுடன் வந்ததையும் நல்லபெருமாள் உட்கோயிலின் வழியை மூடியதையும் சொன்னார். ஆனால் நல்லபெருமாள் அதை எப்படி மூடினார் என்பதைச் சொல்லவில்லை. மூடிய உட்கோயில் பின்பு திறக்கப்படவில்லை என்பதையும் கூறினார்.


''அப்பா, உட்கோயில் இன்னும் திறக்காம இருந்தா, நீங்க சொல்ற பொற்சிலைகளும் விலை மதிக்க முடியாத நகைகளும் இன்னும் அங்கேயே இருக்கும்... இல்லையா?''

''ஆமாம்''

''அந்த நகைகளும் சிலைகளும் கிடைச்சா கோடிக்கணக்கிலே பணம் கிடைக்கும். இப்ப சினிமாவிலே வெறும் ஆர்ட் டைரக்டரா இருக்கிற நான், சொந்தமா படம் எடுக்கலாம், சிசில் பி. டி. மில்லி போல பிரமாண்ட

தாத்தாவின் கவலை

''இந்தப் பேரப் பயலுக்கு நீ தஞ்சாவூர் தலையாட்டிப் பொம்மை வாங்கித் தரும் வரை, நான் தலையாட்டிக்கிட்டே இருக்கணுமா? இது என்ன நியாயம்?''





ஜனாதிபதியின் தங்கப்பதக்கம் பெற்ற முதல் தமிழ்ப்படம்
ORWO
பாராட்டுக்கள்
AVM PRODUCTIONS
எம். சரவணன் எம். பாலசுப்ரமணியன் எம்.எஸ். குகன்
ஏவிஎம்மின்
சம்சாரம் அது மின்சாரம்
விசு
ORWO COLOR
இசைக்கு
AVM audio
சங்கர்-கணேஷ் கவியரசு வைரமுத்து N. பாலகிருஷ்ணன் பால்துரைசிங்கம்
B. நாகராஜன் புலியூர் சரோஜா நேஷனல் செல்லையா S. பாண்டியன்
முயற்சி திருவினையாக்கும்

மான செட்டுங்க போட்டுப் படம் எடுக்கலாம். என் கலைத்திறமையை உலகம் பாராட்டச் செய்யலாம். சொல்லுங்கப்பா... உட்கோயிலைத் திறக்கிற வழி என்ன? சொல்லுங் கப்பா!''

பிள்ளைப் பெருமாள் ஆசையோடு ஆர்வத்தோடு கேட்டான். மங்கலப் பெருமாள், ''என்னருகேவா'' என்றார். மகன் இரகசியத்தைக் கேட்க அவர் முகத்துக்கு அருகே தன் முகத்தைக் கொண்டு போனான். மறு நொடி ''தூ...'' என்று அவன் முகத்திலே காறித்துப்பினார், மங்கலப்பெருமாள்.

அதிர்ச்சியடைந்த மகன், "அப்பா" என்று கத்தினான்.

''மகனே... உன்னை மகன்னு சொல்றது கூடப்பாவம். கடவுள் சிலை செய்யற புனிதமான வேலையை விட்டு விட்டு காசுக்காக சினிமாவுக்கு உன் கலையை விக்கிற புலையன் நீ. உனக்குக் கடமை உணர்ச்சி, கடவுள் பக்தியெல்லாம் இருக்கும் என்று எதிர் பார்த்தது என் தப்பு. விஜயமங்கலத்துப் பெரியவங்க உயிரைக் கொடுத்து உட்கோயில் சொத்தைக் காத்தது, உன்னைப் போல ஈனப் பிறவிகள் எடுத்து அனுபவிக்கிறதுக்காக அல்ல... பாரத மண்ணிலே பிறந்து, பெருமாள் என்கிற பேரையும் சுமந்துகிட்டு, பெருமாள் சொத்தைக் கொள்ளையடிக்க நினைக்கிற உன்னைக் காட்டிலும்... அந்த மகமத்கானே மேலானவன்.''

மங்கலப் பெருமாளுக்கு மூச்சு வாங்கியது. தலை கீழும் மேலுமாக உயர்ந்து தாழ்ந்தது. கண்கள் நெருப்பாகச் சிவந்தன. முகத்தில் வியர்வை நிறைந்தது.

பிள்ளைப் பெருமாள் தந்தையின் நிலையைப் பார்த்தான். உடனே, ''அப்பா, என்னை மன்னிச்சிடுங்க. நான் டைரக்டராகணும், சொந்தமா படம் எடுக்கணும் என்கிற ஆசையிலே அப்படிப்பேசிட்டேன். அதுதப்புன்னு



இப்ப புரிஞ்சுகிட்டேன். உட்கோயிலேத் திறக்கற ரகசியத்தைச் சொல்லுங்கப்பா... பெருமாள் சொத்திலே நிச்சயம் நான் கைவைக்க மாட்டேன்... சொல்லுங்கப்பா'' என்று கேட்டான்.

மங்கலப் பெருமாள் மகனைப் பார்த்துச் சிரித்தார். பிறகு மெல்லப் பேசினர்.

''எனக்கு வயசு அறுபது. என்னை அவ்வளவு லேசா யாரும் ஏமாத்திட முடியாது... உனக்குச் சுயநலம் அதிகம்னு நீ சின்னப்பையனு இருக்கறப்பவே எனக்குத் தெரியும். உன்னை இனிமேநம்பமாட்டேன். என் ரகசியம் என்னுேடே போகட்டும். உன்னைப் போல அயோக்கியன் நல்லபெருமாள் வம்சத்திலே பிறந்தது எப்படின்னு தான் புரியலே.''

''அப்பா... என்னை நம்புங்க... ரகசியத்தைச் சொல்லுங்கப்பா...''

மங்கலப் பெருமாள் 'முடியாது'' என்று சொல்ல முயன்றார், நா அசையவில்லை. கையினுல் முடியாது என்று ஜாடை காட்ட முயன்றார். கை எழவில்லை. ஆனுல் அவர் தலை சாய்ந்தது. மூச்சு ஓய்ந்தது.

தந்தை இறந்துவிட்டார் என்பதை அறிந்ததும் பிள்ளைப் பெருமாளுக்கு அழுகை வரவில்லை. ஆத்திரம் வந்தது. ''சாகிற மனிதர் ரகசியத்தைச் சொல்லிவிட்டுச் செத்திருக்கக் கூடாதோ?'' என்று நினைத்தான். உண்மையில் அவன் தப்பை உணர்ந்ததாகவும் திருந்தியதாகவும் சொன்னது நடிப்பு. அந்த நடிப்பை மங்கலப்பெருமாள் கண்டுபிடித்து விட்டது கண்டு அவன் ஆச்சரியம் அடைந்தான்.

பிள்ளைப் பெருமாள் சில மாதங்கள் உட்கோயிலே மறந்து வாழ்ந்தான். ஹைதராபாத்தில் இருந்த தெலுங்குப்படத் தயாரிப்பாளர் ஒருவர் சென்னையில் ஒரு ஸ்டூடியோ வாங்கினர். அதில் பணியாற்ற பிள்ளைப் பெருமாளை அழைத்துச் சென்றார். பிள்ளைப் பெருமாள் சென்னைவாசி




யானான். சென்னையில் புதியவர்கள் பலரைச் சந்தித்தான். திரை உலகில் ஒரு கவிஞனாக வேண்டும் என்று வந்த இளைஞன் ஒருவன், தன் பெயர் 'விஜய மங்கலம் விமலன்' என்று கூறினான். உடுமலை நாராயண கவி, உளுந்தூர் பேட்டை சண்முகம், ஆலங்குடி சோமு என்னும் பாணியில் இந்த இளைஞன் ஊரின் பெயரைத் தன் பெயரோடு இணைத்துக் கொண்டிருந்தான். அந்தப் பெயரைக் கேட்டதும் பிள்ளைப் பெருமாளின் கள்ள மனம் துள்ளியது. அவனிடம் பேசி, ஊரிலே ஒரு பாழடைந்த கோயில் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டான். உட்கோயிலை இன்னும்யாரும்வெளிப் படுத்தவில்லை என்பதை உணர்ந்து கொண்டான். உடனே விஜயமங்கலத்துக்கு விஜயம் செய்தான். அனுமார் கோயிலுக்கு எதிரே இருந்த வழியை நல்லபெருமாள் மறைத்து விட்டார் என்பது அவனுக்குத் தெரியும். ஆனால், அதை எப்படி அவர் மறைத்தார் என்பது தெரியாது. அதனால் அனுமார் கோயிலுக்கு எதிரே வெடி வைத்துத் தகர்த்தால், உட்கோயில் வெளிப்படும் என்று நினைத்தான்.

பெருமாள் கோயில் ஊரிலிருந்து ஒதுங்கியிருந்தது. அதனால் அங்கே எதுவும் செய்யலாம். ஆனால் அருகே உள்ள கல் மண்டபத்தில் குடியிருக்கும் சோமு தாத்தா குடும்பத்தை அகற்றி விட வேண்டும். இவ்வாறு திட்டமிட்ட பிள்ளைப் பெருமாள், உடனே ஹைதராபாத்துக்குச் சென்றான். தந்தை சம்பாதித்த சொந்த வீட்டையும் நிலத்தையும் விற்று இரண்டு லட்ச ரூபாய் ரொக்கமாக எடுத்துக் கொண்டு வந்தான்.

அந்தப் பணத்தின் உதவியால் சோமு தாத்தாவின் வீட்டை விலைக்கு வாங்க முயன்றான். முடியாமல் போகவே பாபு என்னும் பெயரில், குறுந்தாடியை முகத்தில் ஒட்ட வைத்துக் கொண்டு படம் எடுப்பதாகக் கூறிக் கொண்டு வந்தான். அவன் திட்டம் நிறைவேறுகிற நேரத்தில் சுமதி, அதைக் கெடுத்து விட்டாள். அதனால் தப்பித்தால் போதும் என்று தன் கூட்டத்தாருடன் சென்னைக்கு ஓடி விட்டான். இரண்டு லட்சத்தில் பாதி கரைந்து விட்டது. என்றாலும் உட்கோயில் சொத்தைக் கொள்ளையிடும் ஆசை கரையாமல், மீண்டும் விஜயமங்கலத்துக்குக் குறுந்தாடி இல்லாமல் சுய உருவோடு வந்து, கோயிலில் நுழைந்து கொடி மரத்தருகே நின்றான்.

பழைய நிகழ்ச்சிகள் அனைத்தையும் நினைத்துப் பார்த்த பிள்ளைப் பெருமாள், கொடி மரத்தைக்கடந்துபோகா

மூன்று புதிர்கள் 1..



1. கூடையொன்றில் இருக்கும் பழங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு நிமிடத்துக்கும் இரு மடங்காக உயருகிறது. கூடை முழுவதும் நிரம்ப ஒரு மணி நேரம் பிடிக்கிறது. அப்படியானால் கூடையின் பாதிப் பாகம், எவ்வளவு நேரத்தில் நிரம்பி விடும்?

2. சிறுவர் சங்கம் ஒன்றில் 12 பேர் உறுப்பினர்கள். அவர்கள் ஒருநாள் சந்தித்து விழா கொண்டாடி விருந்துண்டனர். விருந்தின் முடிவில் அவர்கள் 12 பேரும் ஒருவருக்கொருவர் ஒரே முறை கைகுலுக்கிக் கொண்டனர். அங்ஙனமாயின் அங்கே எத்தனை முறை கைகுலுக்கல்கள் நிகழ்ந்திருக்கும்?

3. 5 மீட்டர் உயரமான ஒரு கம்பத்தின் நிழல், 2 மீட்டர் உயரத்தில் விழுகிறது. அதே நேரத்தில் 40 மீட்டர் உயரத்தில் ஒரு கோபுரத்தில் நிழல் விழுந்தால் கோபுரத்தின் உயரம் என்ன?

விடைகள்: 59 நிமிடங்கள்; மொத்த கைகுலுக்கல்கள் 66; 100 மீட்டர்.

— ஆர். எஸ். சுப்பிரமணியன்



"டேய் மூர்த்தி, டெலிபோனில் ஏண்டா பெல் அடிக்குது?"

"டெலிபோனை 'பெல்' கண்டுபிடித்தார். அதனாலேதான் 'பெல்' அடிக்குது?"

—எஸ். மாதவன் (204),
திருச்சி—14.

மல் திரும்பி விடலாமா என்று நினைத்தான். ஒரு லட்சம் ரூபாயை இழந்து விட்டு, வெறுங்கையோடு திரும்ப விரும்பவில்லை. உட்கோயில் சொத்து கிடைத்தால், இந்தியாவிலேயே மிகப் பெரிய ஸ்டூடியோவை உருவாக்கலாம். பிரும்மாண்டமான படங்களைத் தயாரிக்கலாம்: ஏன், ஆஸ்கார் பரிசு பெற்றாலும் பெறலாம். இவ்வாறு நினைத்ததும், பிள்ளைப் பெருமாளின் கள்ள மனம், நல்ல மனத்தை வீழ்த்தி, அதைக் காலால் மிதித்தபடி கம்பீரமாக எழுந்து நின்று செயல்பட்டது.

பிள்ளைப் பெருமாள், உட்கோயிலைத் திறக்க, வெடி வைப்பதைத் தவிர வேறு வழியிருக்கிறதா என்று ஆராயலாம் என்று நினைத்தபடி மூலஸ்தானத்துக்குச் செல்லாமல் அனுமார் கோயிலை நோக்கிச் சென்றான்.

பிள்ளைப் பெருமாள் என்னும் பாபு கோயிலுக்குள்ளே வந்ததை அறியாத சுமதியும் செங்கோடனும் இரகசிய வழியில் இறங்க முடிவு செய்தனர். செங்கோடன் படியில் இறங்கக் கால் வைத்தான். மறுகணம் அதைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டான்.

"என்ன செங்கோடா?" — சுமதி கேட்டாள்.

"இத்தனை ஆண்டுகளாக மூடியிருந்த உட்கோயிலுக்குள் இறங்கலாமா? உள்ளே அடைபட்டிருக்கும் காற்று விஷமாயிருக்கும். விஷக் காற்று நம்மைக் கொன்றுவிடுமே?"

செங்கோடன் சொல்வதில் உள்ள நியாயம் அறிவியல் பயின்ற அவளுக்கும் புரிந்தது. அதற்காக நச்சுக் காற்றெல்லாம் வெளியேறிய பிறகு நிதானமாக, மாலையிலோ, மறுநாள் காலையிலோ உள்ளே இறங்கும் பொறுமை அவளிடம் இல்லை. உட்கோயிலுக்குள்ளே அப்போதே இறங்க வேண்டும் என்னும் ஆவலுக்கு அவள் அடிமைப்பட்டாள்.

"செங்கோடா, கோயில்லே நாம ஏத்தி வச்ச விளக்கை எடுத்துக்கிட்டு உள்ளே இறங்குவோம். நாம சுவாசிக்கும்படி சுத்தமான காற்று இல்லேன்னா விளக்கு அணைஞ்சிடும். உடனே விஷக் காற்று இருக்குன்னு ஓடிவந்துடுவோம். விளக்கு அணையாம இருந்தால், நாம் தொடர்ந்து உள்ளே போகலாம்."

சுமதி சொன்ன பிறகும் செங்கோடன் தயங்கினான்.

"செங்கோடன், உட்கோயில் வழியைக் கண்டுபிடிச்ச பிறகு இப்படித் தயங்கலாமா? உயிரைக் கொடுத்தாவது தங்கத் தசாவதார மூர்த்திகளைத் தரிசிக்க வேண்டாமா? தயங்காமல் வா."

செங்கோடன் கோயில் விளக்கை எடுத்துக் கொண்டு வந்தான். சுமார் இருநூறு ஆண்டுகளாக மூடியிருந்த அந்த உட்கோயிலின் இரகசிய வழியில் சுமதியும் செங்கோடனும் இறங்கினர். சுமதிக்கு ஆவலே மேலோங்கி நின்றது. செங்கோடனை அச்சமே ஆட்டிப் படைத்தது. "உள்ளே விஷக் காற்று இருந்து தாக்கினால், என்ன செய்வது? பெருமாளே! எனக்கு ஏதாவது நேர்ந்தாலும் பரவாயில்லை. உனது உட்கோயிலைக் கண்டுபிடித்த சுமதிக்கு ஆபத்து வராமல் காப்பாற்று" என்று வேண்டிக் கொண்ட செங்கோடன் படிகளில் உள்ளே இறங்கினான். சுமதி பின் தொடர்ந்தாள்.

(தொடரும்)

வளரும் துளிர்கள்



குன்றுமணி

ஓட்டப் பந்தயங்களுக்கு இந்தியாவுக்குப் பெருமை தேடித் தர ஓர் பி. டி. உஷா, ஷைனி ஆபிரகாம் போதுமா? 'இளமையைத் தேடிப் பிடியுங்கள்!' — இன்றைய விளையாட்டின் தேவையான அம்சம்.

இந்தத் தேவையை உணர்ந்து நியூட்ரின் நிறுவனமும் டான் பாஸ்கோ அதலெடிக் கிளப்பும் இணைந்து மூன்று வருஷங்களாகப் பன்னிரண்டு வயதுக்குட்பட்ட விளையாட்டுச் சாம்பியன்களை உருவாக்குவதில் சென்னை நகரிலுள்ள நாற்பது பள்ளிகளின் 700 சிறுவர்சிறுமியருக்குப்போட்டி நடத்துகின்றன. இந்த வருஷத்துச் சாம்பியன்கள் வரிசை இதோ:

எஸ். ஸ்ரீப்ரியா: பெண்களுக்கான எட்டு வயதுக்குட்பட்ட போட்டியில் சாம்பியன். ரோஸரி மெட்ரிக் பள்ளியின் மாணவி. பூஜ்யர் டெரிஸ்டா, ஜாக்கரி கண்டெடுத்த மாணிக்கம், இவளுக்கு டிசௌஸா, யாஸ்மின், மீனு கோபால் போன்றவர்களின் பயிற்சி அவளை உன்னத நிலைக்கு உயர்த்தியது.



எஸ். சுமாலியா: பத்து வயதுக்குட்பட்ட பெண்களுக்கான போட்டியில் சாம்பியன். புனித மைக்கேல் மெட்ரிக் பள்ளி மாணவி. எட்டு வயதில் மூன்றாவது சிறுவர் சாம்பியன் போட்டியில் கலந்து கொண்டு பரிசுகள் பெற்றவள். படிப்பிலும் கெட்டிக்காரி.


ஆண்ட்ரியா பெர்னாண்டஸ்: பன்னிரண்டு வயதுக்குட்பட்ட போட்டிகளில் இவள் சாம்பியன். டவுட்டன் கோரி பள்ளி மாணவி. படிப்பில் சுமார்.

அந்தோணி டி. பிரவீண்: எட்டு வயதுப் போட்டிகளின் சாம்பியன் டொமினிக் ஸேவியோ பள்ளி மாணவன். டான்பாஸ்கோ அதலெடிக் கிளப்பில் பயிற்சி பெற்றவன். இவனது வளர்ச்சிக்கு மீனுகோபாலும் யாஸ்மினும் 'கோச்'களாக உதவியிருக்கிறார்கள்.

என். முரளி, எம். வி. சதீஷ்: பத்து வயதுக்குட்பட்ட போட்டிகளில் இருவருமே சாம்பியன் பட்டத்தைப் பகிர்ந்து கொண்டவர்கள். டொமினிக் பள்ளி மாணவர்கள்.

வி. அருண்குமார்: பன்னிரண்டு வயதுக்குட்பட்ட போட்டிகளில் சாம்பியன் பட்டத்தைப் பெற்றவன். முன்னுக்கு வரக் கூடிய நட்சத்திரம். வெங்கட சுப்பராவ் மெட்ரிக் பள்ளி மாணவன்.

எழுநூறு பள்ளிச் சிறுவர் சிறுமிகளில் சாம்பியன்களாக உருவான இந்த இளம் துளிர்களை வாழ்த்துவோம்.



ஒரு ஞானக் குழந்தையின் கதை

—ஜானகிமணாளன்

இத்தனை நாள் நாமெல்லாம் 'பாலப் பெரியவர்' என்று அன்புடன் அழைத்து வந்தோம் அல்லவா? அந்தத் 'தெய்வீக ஞானக்குழந்தை' தான், இப்போது காஞ்சி காமகோடிப் பீடத்தின் 70 வது பீடாதிபதியாகப் பொறுப்பேற்றுள்ளார்கள். 'ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்' என்று அவருக்குத் துறவுத் திருநாமம் சூட்டப்பட்டுள்ளது.

'இந்திர சரஸ்வதி' என்பது காஞ்சி காமகோடி பீடாதிபதியாக வரும் எல்லாருக்கும் சூட்டப்படும் பொதுவான துறவுத் திருப்பெயர். ஸ்ரீ சங்கர விஜயேந்திரர் என்பது 70 ஆவது பீடாதிபதியாகியுள்ள நம் பாலப் பெரியவருக்குச் சூட்டப்பட்டுள்ள துறவுத் திருப்பெயர். இதே பெயரில் இதற்கு முன்பு வேறு யாரும் இருந்ததில்லை. இது ஒரு சிறப்பு. 'சங்கர விஜயேந்திரர்' என்ற பெயரில் மற்றொரு சிறப்பும் உள்ளது. 'சங்கர' என்பது இவரது பூர்வாஸ்ரமப் பெயரிலும் இருந்தது.

பூர்வாஸ்ரமம் என்றால் என்ன தெரியுமா? இந்துமதத் தத்துவப்படி, ஒவ்வொரு தனி மனிதனுடைய வாழ்விலும் நான்கு வித வாழ்க்கை நிலை — அதாவது ஆஸ்ரமங்கள் உண்டு. மாணவப்பருவத்துக்குப் 'பிரம்மச்



சாரி ஆஸ்ரமம்' என்று பெயர். குடும்பத் தலைவரான பிறகு, 'கிருஹஸ்தாஸ்ரமம்.' குடும்ப வாழ்வை நீத்து, வனத்தில் வசிப்பது 'வானப்பிரஸ்தம்.' உலகப் பற்றைத் துறந்து, பற்றற்ற நிலைக்கு, உயர்வது 'சந்நியாச ஆஸ்ரமம்.'

ஸ்ரீ சுவாமிகளின் தற்போதைய நிலைதான் சந்நியாசம் என்பது. இதற்கு முந்திய நிலைதான் பூர்வாஸ்ரமம் என்பது. 'பூர்வம்' என்றால் முந்தைய — அதாவது, இவருடைய முந்தைய ஆஸ்ரமமான பிரம்மச்சாரி நிலை. அப்போது இவருடைய பெயர் என்ன தெரியுமா? சங்கரநாராயணன். அதில் உள்ள 'சங்கர' என்பது இவரது துறவுத் திருப்பெயரிலும் உள்ளது. எத்தனை பொருத்தம் பார்த்தீர்களா?

இன்னொரு அதிசயமும் இவரது வாழ்வில் நிகழ்ந்துள்ளது. என்ன தெரியுமா? இவர் தமது பிறந்த மாதம், தேதியிலேயே துறவு பூண்டுள்ளார், என்பதுதான் அது. இவர் 1969 மே 29 ஆம் நாள் பிறந்தார். துறவு பூண்டது 1983 இல் அதே மே 29 இல் தான்! வியப்படைகிறீர்கள் அல்லவா?

அப்போது அவருக்கு 14 வயது தான் நிறைந்திருந்தது.

சங்கரநாராயணனின் தந்தைபெயர் தண்டலம் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள். 'தண்டலம்' என்பது சிறு கிராமம். சொந்த ஊர். தாயின் பெயர் லக்ஷ்மி அம்மாள். தந்தை மகா பண்டிதர். குழந்தைகளுக்கு வேதம் கற்பிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார்.

போளூரில் ஒரு சங்கர மடம் உள்ளது. அதற்குச் சொந்தமாக ஒரு வேத பாட சாலை. அதில்தான் சங்கரநாராயணன் 'வேதாப்பியாசம்' செய்தது. யாரிடம் தெரியுமா? தம் தந்தையாரிடமேதான்! எனவே, மிகச் சிறுவராக இருக்கும் போதே, வீட்டோடு வீடாக இருந்து பாடங்களைக் கற்கும்வாய்ப்புக் கிடைத்தது. எனவேதான், 14 வயது நிறைவதற்குள், அவரால் வேத — சாஸ்திரங்களில் நிறைந்த ஞானத்தைப் பெற முடிந்தது. துறவு பூணும்போது அவரிடம் பூரண ஞானம் நிறைந்திருந்தது. இதற்குச் சான்று என்ன தெரியுமா? சொல்கிறேன்.

அவர் துறவு பூண்டது 1983 மே 29. அதற்குச் சில மாதங்கள் முன்பு நடந்த நிகழ்ச்சி.

காஞ்சி பரமாச்சார்யாள் — அதாவது, தற்போது முதியவராக உள்ள காஞ்சி முனிவர் எனப்படும் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளின் அறுபதாவது வயது நிறைவின் போது 'சஷ்டியப்த பூர்த்தி டிரஸ்ட்' என்ற ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அதன் சார்பில், ஆண்டுதோறும், வேதம் பயிலும் வித்யார்த்தி — மாணவர்களுக்குப் பரீட்சை வைத்துச் சன்மானம் வழங்கப்பட்டு வருகிறது.

அந்த ஆண்டில் — அதாவது 1983 இல் அந்தப் பரீட்சை மன்னார்குடியில் நடந்தது. பல்வேறு ஊர்களி

* காமிராவின் முன்.



லிருந்து வித்யார்த்திகள் வந்திருந்தனர். அவர்களில் நமது சங்கரநாராயணனும் ஒருவர். சில மாதங்களுக்குப் பிறகு, அவர் துறவியாகப் போகிறார் என்பது இறைவன் ஒருவனுக்கு மட்டுமே தெரிந்திருந்த நேரம் அது. அவர் விடையளித்த உயர்வைக் கண்டு, பரீட்சாதிகாரி வியந்து போற்றினார்கள். அத்தனை தெளிந்த சிந்தனை அவரிடம்!

பரீட்சைகள் முடிந்தன. அதிக மதிப்பெண் பெற்றவர்களைப் புகைப்படம் எடுக்க ஏற்பாடாயிற்று. குழந்தைகளே! நீங்களாக இருந்தால் அப்போது என்ன செய்வீர்கள்? உங்களை அழகுபடுத்திக்கொண்டு காமிராவின் முன் நின்று 'போஸ்' கொடுப்பீர்கள், இல்லையா?

ஆனால், சங்கரநாராயணன் என்ன செய்தார் தெரியுமா? பலர் வற்புறுத்திய பிறகுதான் காமிராவுக்கு முன் வந்து அமரச் சம்மதித்தார். அதுவும் எப்படித் தெரியுமா? புகைப்படத்துக்கு என்று எந்தச் சிறப்பு அலங்காரமும் செய்து கொள்ளவில்லை. சம்மணம் இட்டமர்ந்து, மேல் துண்டால் கழுத்தைச் சுற்றிப் போர்த்திக் கொண்டார். அந்தப்போர்த்தலுக்குள் தம் இரு கைகளையும் கட்டிக் கொண்டு விட்டார். முகமும், வலது பாத விரல் நுனியும் தவிர வேறு எந்த உடலுறுப்பும் வெளியில் தெரியவில்லை!

ஆமை தனது ஐந்து அங்கங்களை ஓட்டுக்குள் அடக்கிக் கொள்ளும் பாருங்கள்... அதைப் போன்று, ஐம்பொறி ஆசைகளை அடக்கிக் கொண்டு, தவம் புரியும் யோகியைப் போன்று அமர்ந்தார். படத்தில் பாருங்கள். எதிரில் புகைப்படக் காமிரா. ஆனால், கண்கள் அதைப் பார்க்கவில்லை. எங்கோ சூனியத்தில் ஒரு புள்ளியில், ஏதோ சூட்சுமத்தைத் தேடிக் கொண்டிருப்பது போன்ற ஞானக்கனிவான தோற்றம்.


அவரைப் பார்த்தவர்கள், 'யார் இந்தக் குழந்தை! ஆகாகா! இந்தச் சிறுவனிடம்தான் எத்தனை தேஜஸ்...!' என்று வியந்து மகிழ்ந்தனர்.

மே 29 ஆம் நாள், அந்தக் குழந்தைதான், நமது 'பால சுவாமிகள்' என்பது அனைவருக்கும் புரிந்தது!

கடந்த ஆகஸ்ட் 24 ஆம் நாள் இரவு 9 மணிக்கு அவர் புதிய பீடாதி



* தந்தை தண்டலம் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளும் தாயார் லட்சுமி அம்மாள் அவர்களும்



• ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளுடன்

பதியாகப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்கள். இப்போது அவருக்கு 18 வயது நிறைந்துள்ளது. பீடாதிபதியாகிவிட்டாலும் கூட, இன்றும் அவர் முகத்தைப் பாருங்கள். குழந்தை முகம். எனவே, குழந்தைகளாகிய உங்களிடம் அவருக்கு எத்தனை அன்பு இருக்கும் என்பதை இப்போது நீங்களே புரிந்து கொள்ளுங்கள்.

குழந்தைகளிடம் மட்டும்தான் என்பதில்லை. குழந்தைகளுக்காக எழுதும் எங்களைப் போன்ற, 'குழந்தை எழுத்தாளர்'களிடமும் அவர் மனத்தில் சிறப்பான அன்பும் மதிப்பும் உண்டு. இது எப்படி உங்களுக்குத் தெரியும் என்று நீங்கள் கேட்பது காதில் விழுகிறது. சொல்கிறேன்.

ஆண்டுதோறும், உங்களுக்குக் 'கோடை விடுமுறைப் போட்டி' நடத்துவதைப் போலவே, நவராத்திரி, பொங்கல் போன்ற பண்டிகைக் காலங்களில் இந்து சமயம் பற்றி எழுதும் கவிஞர்களுக்கும் சங்கர மடம் போட்டிகள் நடத்துகிறது. அதில் வெற்றி பெறுகிறவர்களுக்குத் 'தங்க டாலர்,' 'வெள்ளி டாலர்' மற்றும் சான்றிதழ்கள் போன்றவற்றை நமது 'பாலப் பெரியவர்' அவர்களே தமது கையால் வழங்கிச் சிறப்பிக்கிறார்கள். அந்த இந்து தமிழ்க் கவிஞர் மன்றக் கவிஞர்களில் பெரும்பாலோர் குழந்தைகளுக்கும் எழுதும் 'குழந்தை எழுத்தாளர்'களாக இருக்கிறார்கள். அத்தகையவர்களில் ஒருவனைக் கடந்த ஆண்டு பொங்கல் விழாவின் போது, ஒரு நாள் முழுவதும், அவருக்கு எதிரில் அமர்ந்து, அவரைப் பார்த்துப் பேசிப் பரிசும் பாராட்டும் பெறக் கூடிய பெரும் பேறு எனக்குக் கிட்டியது.

அப்போது, குழந்தைகளிடம் மட்டும் அல்ல ; குழந்தை எழுத்தாளர்களிடமும் அவருக்குப் பெரு மதிப்பும் அன்பும் உண்டு என்பதை என்னால்

• பாலப் பெரியவர் அவர்களிடம் பரிசும் பாராட்டும் பெறுகிறார் ஜானகி மணாளன்.



கணிக்க முடிந்தது.

அந்த ஞானக் குழந்தை பற்றி இன்னும் எவ்வளவோ கூறலாம். இப்போதைக்கு இது போதும். பிறகு ஒரு சந்தர்ப்பத்தில் நிறையப் பார்ப்போம்!



ஜெயப்ரகாஷ் நாராயண்

நம் நாடு விடுதலை பெறுவதற்காக இரவு பகலாகப் பாடுபட்டவர். ஒரு நண்பரின் உதவியுடன் அமெரிக்கா சென்று அங்கு பழத் தோட்டங்களில் வேலை செய்தும், மேஜை, நாற்காலிகளுக்குப் பாலிஷ் போட்டும், பாதைகளில் படிந்து கிடக்கும் பனிக்கட்டிகளை அள்ளிக் கொட்டியும் பணம் சம்பாதித்து மேல் படிப்பு படித்து எம். ஏ. பட்டம் பெற்றார். எம். ஏ. படிக்கும் போது இவர் எழுதிய 'சமுதாய பேதம்' என்ற ஆராய்ச்சிக் கட்டுரை பல பேராசிரியர்களின் பாராட்டைப் பெற்றது.

இந்தியா திரும்பியதும், காந்திஜியைக் கண்டார். அவரது அன்பைப் பெற்றார். நேருஜியைச் சந்தித்தார். அவரது நெருங்கிய நண்பரானார். காங்கிரசில் சேர்ந்தார். காங்கிரஸ் கட்சிக்குள்ளே சோஷலிஸ்ட் பிரிவு ஒன்றை அமைத்தார்.

நாளடைவில் கருத்து வேற்றுமை ஏற்பட்டு சோஷலிஸ்ட் பிரிவு தனியாகப் பிரிந்து சோஷலிஸ்ட் கட்சி என்ற பெயரில் பணியாற்றியது.

வினோபாஜியின் பூதான இயக்கத்தில் இவர் தீவிரமாக ஈடுபட்டார். லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களை ஏழைகளுக்குப் பெற்றுத் தந்தார்.

சம்பல் பள்ளத்தாக்கிலிருந்த பயங்கரக் கொள்ளைக்காரர்கள் மனம் மாறி, தங்கள் தொழிலைக் கைவிட்டுச் சரணடையவும் இவர் முக்கிய காரணமாக இருந்தார்.

பிறகு, பல கட்சிகளும் ஒன்று சேர்ந்து 'ஜனதா கட்சி' உருவானது. அக்கட்சியை இவர் ஆதரித்தார். தேர்தலில் ஜனதா கட்சி வென்று ஆட்சி அமைத்தது.

எந்தப் பதவியையும் விரும்பாத ஒரு தலைவர் இவர்.



பெசன்ட் அம்மையார்

ஆங்கிலேயரின் நாடான இங்கிலாந்திலே, லண்டன் நகரில் பிறந்த இவர், ஆங்கிலேயருக்கு எதிராக இந்தியாவில் பிரசாரம் செய்தார். இந்தியாவுக்குச் சுதந்திரம் வேண்டும் என்று கூட்டங்களில் பேசினார், பத்திரிகைகளில் எழுதினார். அதற்காகவே ஹோம்ரூல் லீக் (Home Rule League) என்ற சங்கத்தைத் தொடங்கி அதன் தலைவியானார். இவர் ஆங்கில அரசுக்குஎதிராகப்பேசியும்எழுதியும் வந்ததால், ஆங்கில அரசாங்கத்தார் இவரைக் கைது செய்து உதகமண்டலத்தில் வைத்தனர்.

முதல் முதலாக இவர் 1893— ல் இந்தியாவுக்கு வந்தார்.

காசி நகரிலே மத்திய இந்துக் கல்லூரி, மத்திய இந்து உயர்நிலைப் பள்ளி — இரண்டையும் நிறுவினார். பிறகு, சென்னையிலுள்ள அடையாற்றுக்கு வந்தார். அங்கு உள்ள பிரம்ம ஞான சங்கத்தின் தலைவியானார்.

இந்திய சாரண இயக்கத்தைத் தொடங்கிய வரும் இவரே (1916ல்).

அரசியல்பிரசாரம்செய்வதற்காக பொதுநலம் (Commonweal) என்ற வாரப் பத்திரிகையையும், மதராஸ் ஸ்டாண்டர்டு (Madras standard) என்ற மாதப் பத்திரிகையையும் தொடங்கி நடத்தினார்.

கல்கத்தாவின் 1917— ல் கூடிய இந்திய காங்கிரசின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். காங்கிரஸ் கட்சி முதல் முதலாக அமைத்த தேசியக் கொடியை ஏற்றிய முதல் தலைவர் இவர்தான்! அந்தக் கொடியே சில மாற்றங்கள் பெற்று காங்கிரஸ் கொடியாக இருந்து வருகிறது.

மதங்களைப் பற்றியும் அரசியல் பற்றியும் இவர் எழுதிய புத்தகங்கள் பல.

ஒரு சித்திரச் செய்திகள்



துப்புவதில் சாதனை!

பிரான்ஸில் உள்ள பிரசாங் என்னும் இடத்தில் முலாம்பழவிதையைவாயில்வைத்து அதிகத் தூரம் துப்பும் போட்டி நடைபெற்றது. இதில் பிரான்ஸைச் சேர்ந்த யுஸிசிடெபார்ஸ் என்னும் 46 வயதுக்காரர் 27½ அடி தூரம் துப்பினார். இது உலகசாதனை!



ராட்சத ஐஸ்கிரீம்!

சுவிடனில், கார்ல்ஷாமன் நகரில் உள்ள ஒரு ஐஸ்ரீம் கம்பெனி உலகிலேயே மிகப் பெரிய ஐஸ்கிரீம் ஒன்றைத் தயாரித்து உலக சாதனை புரிந்திருக்கிறது. அந்த ஐஸ்கிரீமின் எடை 240 கிலோ. சுமார் 8,630 பேர் சாப்பிடலாம்!



வயிற்றுக்குள் பாம்பு!


ரஷ்யாவில், அஜர்பைஜான் குடியரசு பகுதியில் மடானட் என்னும் சிறுமி, தோட்டத்திற்குச் சென்று வீடுதிரும்பியதும் மயக்கம் போட்டு விழுந்து விட்டாள். மருத்துவ மனைக்குக் கொண்டு போனார்கள். அவள் வயிற்றுக்குள் உப்பு நீர் செலுத்தப்பட்டது. அப்போது அவள் வாந்தி எடுத்தாள். வாந்தியுடன் 26 அங்குலம் நீளமுள்ள விஷப்பாம்பு ஒன்று வந்து விழுந்தது. விஷயம் இதுதான்: அவள் தோட்டத்தில் வாயைத் திறந்துகொண்டு பழம் பறித்துக் கொண்டிருந்தபோது பாம்பு வாய்வழியே வயிற்றுக்குள் போய்விட்டது!




5 வயது செஸ் சாம்பியன்!

ஸ்டார்ட்ஹாஸ்லிங்கர்என்னும்சிறுவன் இங்கிலாந்தைச்சேர்ந்தவன். அவன் சமீபத்தில் லண்டனில் நடந்த தேசிய செஸ் போட்டியில் பிரபலமான சாம்பியன்களைக்கூடத் தோற் கடித்து விட்டான். அவனுக்கு வயது 5 தான்! அவனுடைய 2 வயது தம்பிக்கும் இப்போதே செஸ் பயிற்சி ஆரம்பமாகிவிட்டதாம்!

கள்ள நோட்டைக் கண்டுபிடிக்கும் நாய்க்குட்டி!



மாஸ்கோவில் அலெக்ஸ்சாண்டர் தராய் கோவ்ஸ்கி என்பவரிடம் ஒரு நாய்க்குட்டி இருக்கிறது. அது, தனது மோப்ப சக்தியால் நல்ல நோட்டு எது, க்ள்ள நோட்டு எது என்பதைக் கண்டுபிடித்துவிடுகிறது.




தாடிப் போட்டி!

ஜப்பானின் தலைநகரான டோக்கியோ வில், ஒரு நிறுவனம் ஆண்டுதோறும் தாடி, மீசைக்கான போட்டி ஒன்றை நடத்திவருகிறது. இந்த ஆண்டு தாடிப் போட்டியில் 20 பேர்கள் கலந்து கொண்டார்கள். அவர்களில் 26 வயது சுமோரி அர்ஷியாமா என்பவருக்கு முதல் பரிசு கிடைத்தது. பரிசுத் தொகை ரூ.26,000.

ராட்சத கேக்!

மேற்கு ஜெர்மனியின் தென் பிராஸ்பர்ட் நகரைச் சேர்ந்த சமையல்காரர்கள் 670 அடி நீள முள்ள ராட்சத கேக் ஒன்றைத் தயார் செய்து சாதனை புரிந்துள்ளனர். இதற்கு 1200 கிலோ வெங்காயம், 450 கிலோ மாவு, 500 கிலோ கிரீம் ஆகியவை தேவைப்பட்டன. மொத்தம் 9600 துண்டுகளாக வெட்டப்பட்டு ஒரு துண்டு 7 ரூபாய்க்கு விற்கப்பட்டது.



கேளுங்கள்; சொல்லுகிறோம்

* நம் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் முகவரியைத் தயவு செய்து கூறுங்களேன்.

— வ. சிவக்குமார், திருச்சிற்றம்பலம்.

Shri Rajiv Gandhi,
Prime Minister of India,
7, Race Course Road,
New Delhi -110 011.

* திருவாசகத்தில் பல இடங்களில் வரும் 'திருப்பெருந்துறை' என்கின்ற ஸ்தலம் எங்குள்ளது?

— பி. அருண், ஜலகண்டபுரம்.

தஞ்சைமாவட்டத்தில் உள்ள ஆவுடையார் கோயிலின் மறுபெயர்தான் திருப்பெருந்துறை.

* ஹாக்கி ஆட்டத்தை நம் நாட்டிலா கண்டு பிடித்தார்கள்?

— ஆர். கே. குருராஜ், விருத்தாசலம்.

ஆதியில் இந்த ஆட்டம் பாரசீகத்தில் இருந்ததாம். அங்கிருந்து கிரீஸ் நாட்டிற்கும், பிறகு இத்தாலிக்கும் சென்றதாம். அதன் பின்னர், ஆட்ட விதிகளை முறையாக அமைத்து, உலகெங்கும் பரவச் செய்து விட்டனர்.

* எங்கள் தெரு நண்பர்கள் பொய் சொன்னால் அல்லது தவறாக நடந்தால், நான் அவர்களுக்கு ஒரு திருக்குறள் கூறி, 'தவறு செய்யாதீர்கள்' என்று சொல்லுவேன். இதனால் சிலர் என்னை நீ என்ன திருவள்ளுவரோ (பொய்யில் புலவரோ) என்று கூறித் திட்டுகின்றனர். இதற்கு என்ன செய்யலாம்?

— ம. கணேசன், கும்பகோணம்.

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்.

என்ற குறளின்படி செய்ய வேண்டியது தான்!

* அமரர் கவியரசு கண்ணதாசனிடம் தங்களை மிகவும் கவர்ந்த அம்சம் எது?

— அ. இரவீந்திரன், குஞ்சன்விளை.



அவரது குழந்தை உள்ளம்தான்!

* எங்கள் ஊரில் நவம்பர் மாதம் குழந்தைகளுக்காக எழுதுகிறவர்களெல்லாம் கூடி மாநாடு நடத்தப்போவதாகப் பத்திரிகையில் படித்தேன். அதைப்பற்றி விவரம் தெரிந்தால் சொல்லுங்களேன்.

— எஸ். கோபாலன், கோவை—5.

வருகிற நவம்பர் 14, 15 தேதிகளில் உங்களூரில் உள்ள மணி மேல்நிலைப் பள்ளியில் எட்டாவது குழந்தை இலக்கிய மாநாடு நடை பெறவிருக்கிறது. உங்களுக்காக வெளிவந்திருக்கும் புத்தகங்கள் அடங்கிய காட்சியையும், உங்களுக்காக எழுதிவரும் எழுத்தாளர்களின் புகைப்படக் காட்சியையும் அங்கே காணலாம். கருத்தரங்கு, பாட லரங்கம், குழந்தைகளின் கலை நிகழ்ச்சி, குழந்தை இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசளிப்பு, குழந்தைகளுக்காக நீண்டகாலமாகச் சிறப்பாக எழுதி வரும் இரு எழுத்தாளர்களுக்கும், குழந்தைப் புத்தகங்களை நல்ல முறையில் வெளியிட்டு வரும் ஒரு பதிப்பாளருக்கும் கேடயங்கள் வழங்குதல் போன்ற நிகழ்ச்சிகள் நடை பெறும்.

* ஒருவர் இருதயத்தை எடுத்து மற்றொருவருக்கு வைத்து ஆபரேஷன் செய்கிறார்

களே; இதை முதல் முதலாகச் செய்தவர் யார்?

— த. குணசேகர், சேலம்—4.

முதன் முதலாக இருதய மாற்று ஆபரேஷனைச் செய்தவர் ஒருவரல்ல, டாக்டர் கிறிஸ்டியன் பார்னார்ட் என்பவர் தலைமையில் 20 டாக்டர்கள் சேர்ந்து செய்தார்கள். தென் ஆப்பிரிக்காவிலுள்ள கேப் டவுனில் நடந்தது இந்த ஆபரேஷன். சாலை விபத்தில் இறந்த 24 வயது வாலிபர் ஒருவரது இதயத்தை எடுத்து 55 வயதான ஒருவருக்கு வைத்து ஆபரேஷன் செய்தார்கள்.

* தக்காளி முதல் முதலாக எங்கு பயிரிடப்பட்டது?

— வெ. மாதவன், காரைக்குடி.

தென் அமெரிக்காவில். ஸ்பெயின் நாட்டவர் தென் அமெரிக்காவிலிருந்து தக்காளியை எடுத்துச் சென்று ஐரோப்பாவில் பரப்பினர். ஐரோப்பாவிலிருந்து நம் தேசத்துக்கு வந்தது.


* குளிருக்காக நாம் உபயோகப்படுத்துகிறோமே கம்பளி, அது ஆட்டு உரோமத்தால் மட்டும் தான் செய்ததா? அல்லது வேறு மிருகங்களின் உரோமமும் கம்பளி செய்யப் பயன்படுகிறதா?

— நா. சரவணன், பெருங்களத்தூர்.

பெரும்பாலும் செம்மறி ஆட்டு உரோமத்தினால்தான் கம்பளி நெய்கிறார்கள். ஒட்டகம், கவரிமா, லாமா போன்ற மிருகங்களின் உரோமமும் கம்பளி நெய்யப் பயன்படுகிறது.

* பன்றிக் கொழுப்பில் கூட சோப்பு செய்கிறார்களாமே, இது நிஜமா?

— சி. ராஜகுமார், அருப்புக்கோட்டை.



நிஜம்தான். பன்றிக் கொழுப்பில் மட்டும் தானா? திமிங்கிலக் கொழுப்பு, மீன் எண்ணெய் ஆகியவற்றிலும் சோப்பு செய்கிறார்கள்!

* காவிரி ஆற்றில் பல ஆறுகள் வந்து கலப்



குழந்தைகள் நண்பர் இருவரை இழந்தோம்

'ரத்னபாலா'வின் ஆசிரியராக விளங்கிய கே. ஆர். வாசுதேவன் அவர்கள் நல்ல பண்பாளர்; தொண்டு உள்ளம் கொண்டவர்; இந்திய ஊழியர் சங்கத்தில் சேர்ந்து சிறப்பாகச் சேவை செய்தவர். 'தினமணி கதி'ரின் பொறுப்பாசிரியராகச் சில ஆண்டுகள் இருந்தவர். இவர் சமீபத்தில் அமரராகிவிட்டார் என்ற செய்தி எழுத்தாளர்களுக்கு மட்டுமல்ல; குழந்தைகளுக்கும் மிகுந்த அதிர்ச்சி தரக்கூடியது.



பல ஆண்டுகளுக்கு முன்பு புதுக்கோட்டையிலிருந்து 'டிங்டாங்' என்ற குழந்தைப் பத்திரிகை வெளிவந்தது. அதை நடத்திய பரசுராமய்யர்,

குழந்தைகளிடம் மிகுந்த அன்புடையவர். நகைச் சுவையாகப் பேசக்கூடியவர்; பல எழுத்தாளர்களின் நண்பராக விளங்கிய இவர், சென்ற மாதம் அமரராகிவிட்டார்.

மறைந்த இந்த இரு குழந்தை நண்பர்களுக்கும் 'கோகுலம்', தனது அஞ்சலியைச் செலுத்துகிறது.

பதாகக் கூறுகிறார்களே, அப்படி எந்த எந்த ஆறுகள் கலக்கின்றன?

— ம. செங்குட்டுவன், கோவை—3.

ஹேமாவதி, இலட்சுமண தீர்த்தம், பவானி, நொய்யல், திருமணி முத்தாறு, அமராவதி ஆகிய துணையாறுகள் கலக்கின்றன.

* காக்கை, குருவி முதலிய பறவைகள் மரங்களில் கூடுகட்டி முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றன. மயிலும் அவைகளைப் போலக் கூடுகட்டுமா?

— ஆர். சரோஜா, புதுப்பட்டி.

இல்லை. தரையிலே குழி தோண்டி அதிலே புற்களையும் இலைகளையும் நிரப்பி, அங்கே முட்டையிடும். காடை, கவுதாரி, காட்டுக் கோழி போன்ற பறவைகளும் மயிலைப் போலவே மணலிலே குழி தோண்டி முட்டை இடுகின்றன.


* முதுகிலே புத்தகப் பையைச் சுமந்து கொண்டு, மிகவும் சிரமப்பட்டு பஸ்ஸில் ஏறுகிறோம். உள்ளே போனதும், அந்தப் பக்கம் இந்தப் பக்கம் திரும்பினாலே சிலர் முணு முணுக்கிறார்கள் 'அப்பா! என்ன இடி இடிக்கிறது இந்த மூட்டை! பைக்கு மட்டும் அரை ஆள் இடம் வேண்டியிருக்குதே!' என்று குறைப்படுகிறார்கள். இதற்கு என்ன செய்வது?

— பி. சுந்தரம், சென்னை—15.



பாவம், உங்களால் என்ன செய்ய முடியும்? கருணை உள்ளங்கொண்ட கல்வி நிபுணர்கள்தான் மாணவர்களின் சுமையைக் குறைத்து, கல்வியின் தரத்தை எப்படி உயர்த்துவது என்று சிந்தித்துச் செயல்பட வேண்டும்.

பரதன் அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக, அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: ஆர். ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை—600 032. போன்: 431543, 434157.
ஆசிரியர் குழு அலுவலகம்: 28, ஐந்தாவது தெரு, ஏரிவட்டம், நுங்கம்பாக்கம், சென்னை—600 034. போன்: 473389.



ஜெயபிரகாஷ் நாராயண்

தோற்றம்: 11-10-1902 மறைவு: 8-10-1979

REGISTERED No. TN MS (S) 281
Registered as a Newspaper in Sri Lanka



ஜெசன்ட் அம்மையார்

தோற்றம்: 1-10-1847 மறைவு: 20-9-1933